ஸ்ரீ சாய்-ன்

# வாணி ஸ்ரீ

விலை Rs.100

01617

web version

## பத்மா கிரகதுரை

எழுதும்





# வெண்ணிலா முற்றத்திலே...

இந்தக் கதை எனது சொந்தக் கற்பனையில் உருவானது .இதன் பதிப்பிற்கான உரிமையை லட்சுமி பாலாஜி பதிப்பகத்திற்கு மட்டுமே கொடுத்துள்ளேன் .இதைத் தழுவி தொலைக்காட்சி தொடர்களையோ ...திரைப்படங்களையோ எடுத்தாலும் , இணையதளத்தில் எனது அனுமதியின்றி வெளியிட்டாலும் சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்வேன் என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன் .

பத்மா கிரகதுரை
எழுதிய

# “வெண்ணிலா முற்றத்திலே”

## 1

சிதம்பரம் நகராட்சி உங்களை வரவேற்கிறது .மஞ்சளில் கறுப்பாய் எழுதியிருந்த அறிவிப்பு பலகை ருத்ராவை வரவேற்றது . உனக்கும் , எனக்கும் என்ன தொடர்பு ...? நீ ஏன் என்னை வரவேற்க வேண்டும் ...விளையாட்டாய் மனதிற்குள் அந்த ஊரிடம் பேசிக்கொண்டாள் .இரண்டே நாட்கள் அவனை இழுத்துக் கொண்டு இங்கிருந்து ஓடிவிடுவேனாக்கும் . சொல்லிக் கொண்டாள் .

முன்னங்கழுத்து , பின்னங்கழுத்து ....என உடல் முழுவதும் நசநசவென வியர்த்தது .பின்னங்கழுத்து வியர்வை வழிந்து முதுகில் கோடுகளாக இறங்கியது .இறுக்கி போட்ட பின்னலுக்குள் நசநசத்தது கொண்டிருந்த்து வியர்வை .வெயிலுக்கு பயந்து அரைவாசியாக இழுத்து விட்டிருந்த சன்னல் கதவை ,காற்று வருமாவென்ற நப்பாசையில் முழுதுமாக திறக்க ,பஸ் ஓடிக் கொண்டிருந்ததால் காற்று வந்த்து .ஆனால் அந்த காற்றும் தன் பங்கிற்கு அனலை வாரிக் கொண்டு வந்து தாராளமாக தட்ட ...மனதோடு உடலும் எரிய ஆரம்பிக்க அவசரமாக சன்னல் கதவை பழையபடி இழுத்து விட்டாள் ருத்ரா .

பஸ் பஸ்ஸடாண்டிற்குள் நுழைந்து விட்டது .உஷ் ...அப்பாடா இப்போது இறங்கி விடலாம் .தன்னை தானே சமாதானப்படுத்திக் கொண்டு மெதுவாக ஊர்ந்து கொண டிருந்த பஸ்ஸினுள் இருந்து வெளிப்புறத்தை நோட்டம் விட்டாள் .உள்ளை விட அப்படி ஒன்றும் உவப்பை அளிப்பதாக வெளிப்புறம் இல்லை .

" டேய் சரவணா இதற்கெல்லாம் நீ எனக்கு பதில் சொல்லியாக வேண்டும் ..." உதட்டுக்குள் முணுமுணுத்துக் கொண்டாள் .தோள் பேக்கை தோளில் போட்டுக் கொண்டு பெட்டியை தூக்கிக் கொண்டாள் .உள்ளிருக்கும் ஆட்களை கீழே இறங்கவிடாது , மேலே ஏறிக்கொண்டிருந்த கூட்டத்தை கண்டு மிரண்டு இறங்க முடியாமல் ஓரமாக ஒதுங்கி நிற்க சரசரவென மேலே ஏறிய கூட்டம் அவளை முண்டி தள்ளி மீண்டும் பஸ்ஸின் நடுவில் கொண்டு வந்து நிறுத்தியது .

எப்படி திரும்ப வாசலுக்கு போக விழித்தபடி நின்று கொண்டிருந்த போது , பஸ் திரும்ப கிளம்ப தொடங்க ...ஐய்யய்யோ இப்போ இந்த பஸ் திரும்ப சென்னை போகிறதா ...அலறி ....கத்தி நான் இங்கே இறங்க வேண்டுமென அறிவித்து முணுமுணுத்தபடி அடைத்திருந்த கூட்டம் பிளந்து வழி விட , இரண்டு பேர் காலை மிதித்து , நாலு பேர் காலில் மிதி வாங்கி அதற்காக அவர்களிடம் வசவும் , முறைப்பும் பெற்றுக் கொண்டு தோள் பையையும் , கை டிராலியையும் காப்பாற்றி படியிறங்கி ரோட்டை மிதித்த போது , இமயமலை ஏறி இறங்கிய அனுபவத்தை அடைந்திருந்தாள் .

ஆக ...மொத்தம் அந்த ஊரினுள் நுழைந்த அவளது முதல் அனுபவம் திகிலும் , எரிச்சலுமாக அமைந்து விட்டது .அடேய் ...வர்றேன்டா ...உன்னை ...நேரில் வந்து பேசிக்கிறேன் .மனதிறகுள் பல்லை கடித்தபடி டிராலியை உருட்ட தொடங்க , நெத்தலும் ,கொத்தலுமான சாலையில் அந்த டீராலி ஹை ஜம்ப் , லோ ஜம்ப் எல்லாம் அடித்தபடி குதித்து குதித்து உருண்டது . அத்தோடு சுற்றிப் போய் கொண்டிருந்தோரை

எல்லாம் திரும்பி பார்க்க வைக்கும் அளவு சில விநோத சத்தங்களை வேறு எழுப்ப , கடந்து போனவர்களெல்லாரும் சிறிது நின்று அவளையும் , டிராலியையும் வேற்றுகிரகவாசியை போல பார்த்து வைக்க , எதற்கு பிரச்சனை என டிராலியை கையிலேயே தூக்கிக் கொண்டாள் .

தோளும் , கையும் வலிக்க தடுமாறியபடி ஆட்டோ ஸ்டாண்டை அடைந்தவள் " போகலாமா ...? " என்க ..." எங்கே ....? " ஆட்டோவை துடைத்தபடி அலட்சியமாக கேட்டான் அந்த டிரைவர் .

சட்டென கை பாரத்தை இறக்கி வைத்துவிட்டு தன் போனை வெளியே எடுத்து அட்ரஸை தேடினாள் ."உமாபதி இல்லம் , மூன்றாவது ரத வீதி , வேட்டைக்காரன் தெரு ..." நல்ல விலாசம்ப்பா ...நக்கலுடன் போனை பார்த்து வாசித்து விட்டு நிமிர்ந்தவள் திகைத்தாள் .அந்த ஆட்டோ டிரைவரை காணவில்லை . ஆட்டோவையும்தான் .சற்று தொலையில் வேறு ஆளை ஏற்றிக் கொண்டு போய்கொண்டிருந்தான் .

அடப்பாவி என்னிடம் அட்ரஸ் கேட்டுவிட்டு அதற்குள் அடுத்த சவாரியை ஏற்றிக் கொண்டு போகிறானே ...எரிச்சலுடன் அடுத்த ஆட்டோக்காரனை பார்க்க , அவன் முதல் ஆளை விட அலட்சியமாக இவளை பார்த்துக் கொண்டிருந்தான் .ருத்ராவிற்கு என்னவோ இவனும் அவளை ஏற்ற வரமாட்டானென்றே தோன்றியது .கேள்வியாய் அவனை பார்க்க , அவன் பதில் கேள்வியாய் பார்க்க ...

" நீங்க எங்கே போகனும் மேடம் ...? " பின்னால் கேட்ட குரல் தெய்வத்தின் குரலாய் தோன்ற , திரும்பிப் பார்த்தாள் .

அடர்பச்சை ஜீன்சும் , கோட் போல் பிரித்து தொங்கவிடப்பட்ட மஞ்சள் கலர் டி சர்ட்டும் அணிந்த அவன் நின்றிருந்தான் .அடர்ந்த முடியும் , சிவந்த நிறமும் ,கரகர குரலுமாக கிட்டத்தட்ட ஒரு ஹீரோவை தோற்றத்தில் கொண்டிருந்தான் .அல்லது முனைந்திருந்தான் .

மீண்டும் போனை பார்த்து வேட்டைக்காரன் தெரு , மூன்றாவது ரத வீதி , உமாபதி இல்லம் என்றாள் .

" உமாபதியை பார்க்கவா வந்தீங்க ...அவரை உங்களுக்கு தெரியுமா ...? என்ன விசயம் ...? " அடுத்தடுத்து கேள்விகளை அவன் அடுக்க ஆரம்பிக்க , ருத்ராவிற்கு எரிச்சல் வந்த்து .

" ஏன் சார் எல்லா விபரமும் சொன்னால்தான் எனக்கு அடரஸிற்கு வழி சொல்வீர்களா ...? "

" ஓ ...சாரி மேடம் .நீங்கள் தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள் . உமா என்னோட ப்ரெண்ட் .அதனால்தான் கேட்டேன் ..."

" யாரோ உங்க உமா ப்ரெண்டுக்காக நான் இங்கே வந்த விபரத்தை எதற்கு சார் சொல்லனும் ...? "

" நோ ...நோ , உமா மீன்ஸ் உமாபதி .அவனை நான் அப்படித்தான் கூப்பிடுவேன் .என் ப்ரெண்டை சந்திக்க வந்திருப்பதால் விபரம் கேட்டேன் . நீங்கள் வித்தியாசமாக நினைத்துக் கொள்ள வேண்டாம் ..." " ம் ...." என்றுவிட்டு கைகளை கட்டிக் கொண்டு அவனை பார்க்க அவன் தோள்களை குலுக்கிக் கொண்டான் .

" ஓ.கே வாங்க நானும் கூட வருகிறேன் ..." அந்த ஆட்டோ டிரைவரிடம் " உமாபதி வீட்டிற்கு போகனும் " என்றபடி டிரைவரோடு சேர்ந்து முன் சீட்டில் ஏறிக்கொண்டான் .இவன் ஏன் என்னுடன் வர வேண்டும் ...? யோசித்தபடி பின்னால் ஏறினாள் ருத்ரா .

ஆட்டோ வலமும் , இடமுமாக அவளை குலுக்கி தள்ளி ஆட்டி ஏதேதோ குறுக்கு சந்து , நீள் சந்து , வட்ட சந்துகளிலெல்லாம் புகுந்து போய் கொண்டிருக்க ,ஒரு கட்டத்தில் இவர்கள் இருவரும் சேர்ந்து தன்னை கடத்தி போகிறார்களோ ...என சந்தேகப்பட ஆரம்பித்தாள் .

" ம் ...வந்தாச்சு .இறங்குங்க ..." அவன் இறங்கிக் கொள்ள , தலையை வெளியே நீட்டியவள் பார்வைக்கு கிடைத்த அந்த வீட்டில் விழி விரித்தாள் .இது போன்ற வீடுகளை அவள் திரைப்படங்கள் , சீரியல்களில்தான் பார்த்திருக்கிறாள் .இப்போதுதான் நேரில் பார்க்கிறாள் .

வீட்டை பார்த்தபடியே கீழே இறங்கி நின்றபடி " நைஸ் ஹவுஸ் ..." என்றாள் .

" என்ன மேடம் சிட்டி கேர்ள் நீங்க .இந்த பழைய காலத்து வீட்டை போய் இப்படி ரசிக்கிறீங்க ...? "

" என்ன சார் எவ்வளவு அருமையான கட்டிடக்கலை .இதை போய் இப்படி சொல்கிறீர்களே ...ஐயோ ..." அலறினாள் .

" ஆட்டோவை காணோமே ..."

" ஹப்பா இதுக்காகவா இப்படி கத்துனீங்க ...?நீங்க வீட்டை ரொம்ப ரசித்துக் கொண்டிருந்தீர்கள் .அதுதான் பணம் கொடுத்து நான் ஆட்டோவை அனுப்பினேன் ."

" நீங்கள் எதற்கு பணம் கொடுக்கனும் ...? "

" நானும்தானே வந்தேன் . சரி விடுங்க அறுபது ருபாய் கொடுங்க வாங்கிக்கிறேன் ...." கையை நீட்டியவனிடம் பணத்தை எண்ணி வைத்தாள் .

" உள்ளே போங்க . என் பெயர் மனோகர் .உங்க பேரை சொல்லுங்களேன் ..."

" ருத்ரா .உள்ளே நீங்க வரலையா ...? உங்கள் ப்ரெண்டை பார்க்கத்தானே வந்தீர்கள் ...? "

" இல்லை ருத்ரா .இப்போதுதான் ஒரு வேலை நினைவு வந்த்து .நான் நாளை வருகிறேன் .நீங்கள் போங்க ..." திரும்பி வந்த  பாதையில் நடந்து போக  தொடங்கினான் .

இவன் என்ன விநோத பிறவியாக இருக்கிறானே ...யோசித்தபடி அந்த வீட்டின் கேட்டின் முன் நின்று உள்ளே பார்த்தாள் .

அது முனபுறம் திண்ணை வைத்த வீடு .பத்து பேர் தாராளமாக படுத்து கொள்ளலாம் போல் பெரியதாக இரண்டு பக்கமும் திண்ணைகள் இருந்தன .திண்ணையின் ஓரம் வரிசையாக தூண்கள் இருந்தன .இது போன்ற தூணும் , திண்ணையும் சென்னையில் பிறந்து வளர்ந்தவளுக்கு புதிதுதானே .ருத்ரா கேட்டை தள்ளி திறந்து கொண்டு உள்ளே போனாள் .

வரிசையாக கூண்டுகள் அமைக்கப்பட்டு அதில் கோழிகள் வளர்க்கப்பட்டன .இரண்டு கூண்டுகளில் லவ்பேர்ட்ஸ் இருந்தன .புறாக்கள் , கிளிகள் என வரிசையாக கூண்டுகளில் இருந்தன .கோழிகள் குறுக்கும் , மறுக்குமாக அவள் நடையினிடையில் கூட ஓடின .சடசடவென இறக்கையை அடித்தபடி இரண்டு மயில்கள் கூட பறந்து வந்து அமர்ந்து இவளை பார்த்தன .

ஏதோ பறவைகள் சரணாலயம் போல் இருக்கிறதே ...சூழலை ரசித்தபடி ருத்ரா நடந்து கொண்டிருந்த போது " யாரும்மா நீ ...? " அதட்டலாக ஒரு குரல் கேட்டது .

சே ...அனுமதி கேட்காமல் இவ்வளவு தூரம் வந்து விட்டோமே ...? அப்போதுதான் உறைக்க அப்படியே நின்றாள் .

அந்த குரலுக்குரியவருக்கு அறுபது வயதிருக்கலாம் . தலையில் துண்டை தலைப்பாகையாக கட்டி , முன்பு வெள்ளயாய் இருந்து இப்போது பழுப்பாகி விட்ட வேட்டியுடனும் , சட்டையற்ற வெற்று மேலுடம்புடனும் நின்றிருந்தார் .தோட்டக்கார்ர் , வாட்ச்மேன் ,இந்த பறவைகள் காப்பாளர் என எந்த வேலைக்குள்ளும் பொருந்தும் தோற்றம் கொண்டிருந்தார் .

" நான் இங்கே தோட்டக்காரன் .நீங்க யாரை பார்க்கனும் ...? "

" சாரி பர்மிசன் கேட்காமல் வந்துட்டேன் .நான் உமாபதியை பார்க்கனும் ...? "

" நீங்க வெளியூராம்மா ...?

" ஆமாம் ..."

" சரி விடுங்க . இனி ஐயாவை இப்படி மூஞ்சியில் அடித்தது போல் பெயர் சொல்லி கூப்பிடாதீங்க .உள்ளே போங்க .கமலாம்மா இருப்பாங்க .அவுங்க்கிட்ட பேசுங்க ." சொன்னபடி ஓரமாக இருந்த பையிலிருந்து கை நிறைய கேப்பையை அள்ளி அந்த பறவைகளுக்கு போடத் துவங்கினார் .

ருத்ராவின் முகம் சிவந்த்து . கோபம் கலந்த அவமானத்தினால் ...சரி என் தவறுதானே ...கேட்காமல் உள்ளே வந்த்து . பட்டென பெயர் சொல்லி அழைத்தது ...தவறுதானே ...தன்னை தானே சொல்லிக்கொண்டு வீட்டை நோக்கி நடந்தாள் .

வீட்டு படிகளில் ஏறும்போது அந்த திண்ணை இன்னும் பிரம்மாண்டமாக தெரிந்தது. படியில் ஏறியபடி கை நீட்டி அந்த திண்ணையை ஆவலாய் வருடினாள் .அப்படியே வழுவழுவென மின்னிய அந்த தூண்களையும் வருடினாள் .கடைசியில் அந்த படிகள் அந்த மிகப் பிரமாண்ட மூடப்பட்டிருந்த கதவில் முடிய என்ன செய்ய ...திகைத்து நின்றாள் .காலிங்பெல் இருக்கிறதா கண்களால் சலித்தாள் . இப்போது நுணுக்கமான வேலைப்பாடுடன் இருந்த அந்த கதவின் மேல் அவள் பார்வை பதிந்த்து . நல்ல கனமான வளையமாய் அந்த கதவில் பித்தளை பூணுடன் ஒரு வளையம் தொங்கியது .அதனை தொட்டு பார்த்தாள் .ஹப்பா ...எவ்வளவு வெயிட் ...அதனை மெல்ல அசைத்து பார்த்தாள் .அது கதவுடன்மோதி ஒரு வித ஓசை எழுப்ப ,உள்ளிருந்து " யாரது ...? " என ஒரு பெண்ணின் குரல் கேட்டது .

அட ...இதுதான் காலிங்பெல்லா ...ருதரா வியந்து கொண்டிருக்கும் போதே கதவு திறந்த்து .

" யாரும்மா நீங்க ...? யாரைப் பார்க்கனும் ...? " மத்திம வயதுப் பெண் ஒருவர் நின்றிருந்தார் .

," வணக்கம்மா .நான் சென்னையிலருந்து வர்றேன் .உங்க வீட்டு ஐயாவை பார்க்கனும் .அவர்தான் என்னை வரச் சொல்லியருந்தார் ..."

" சரிம்மா உள்ளே வாங்க " கதவை இரு கரங்களாலும் அழுத்தி நகர்த்தி தள்ளி அவளை உள்ளே அழைத்தாள் .இந்த கதவை ஒற்றை ஆளால் தள்ள முடியுமா ...? அதன் கனத்தை ஊகித்தபடியே உள்ளே வந்தாள் ருத்ரா .

வெளிப்புற வெளிச்சத்திற்கு உள் வீடு இருட்டாக தெரிய , முதலல் ஒன்றுமே தெரியவில்லை .கண்களை தேய்த்து விட்டுக் கொண்டாள்

.இப்போது கொஞ்சம் கொஞ்சமாக மசமசப்பாய் வெளிச்சம் தெரிந்த்து .
" சன்னல்களை திறந்தால் வெளிச்சம் வரும் .அதோடு நிறைய தூசியும் வருமே .அதுதான் சன்னலையெல்லாம் பூட்டியே வச்சிடுறது ....சொல்லுங்கம்மா .நீங்க யாரு ...? " வீட்டின் இருளுக்கு காரணம் சொன்னாள் அந்த அம்மா .

" நான் சரவணை தேடி வந்தேன் .அவர் ...."

" ஓ..அப்படியா .சரி ...சரி .அதோ அந்த அறையில் தங்கிக் கொள்ளுங்கள் .தம்பி வருவதற்கு இருட்டி விடும் .நீங்கள் அங்கே ஓய்வெடுங்கள் ...." சொல்லிவிட்டு வீட்டின் இருளுக்குள் அந்த அம்மா மறைந்து போய்விட்டாள் .

தங்குவதா ...? இரண்டு வார்த்தை விபரம் கேட்டு ,சரவணனை கூட்டிக் கொண்டு , பிறகு  ஒரு லாட்ஜில் ரூம் போட்டு இங்கே கோவில்களை பார்த்து விட்டு ...இப்படித்தான் ஒரு வாரத்திக்காக இருந்த்து அவளது இந்த பயணதிட்டம் .ஆனால் சரவணன் பெயரை சொன்னதும் தங்க சொல்கிறார்களே ...

ருத்ரா குழம்பி நின்றது இரண்டு நிமிடங்கள்தான் , அதற்குள் பயண கசகசப்பை உடல் சொல்ல , சரி முகம் கழுவி கொஞ்சம் உட்காரலாம் என அந்த அறைக்குள் நுழைந்தாள் .ஆனால் விரிந்திருந்த கட்டில்கள் அவளை அழைக்க , முதலில் உட்கார்ந்தவள் , பின்பு சாய்ந்தாள் ...பின்பு ....

ஏதோ சத்தம் கேட்டு அவள் விழித்த போது அறை இருளாய் இருந்த்து . ஒரு நொடி ஒன்றும் புரியாமல் விழித்தவள் பிறகே அறைக் கதவு தட்டப்பட்டுக் கொண்டிருப்பதை உணர்ந்து வேகமாக ஓடி விளக்கு சுவிட்சை தேடி போட்டு பளீரென மின்னிய வெளிச்சத்தில் கண் கூசியபடி அரைக்கண்ணில் வெளியே பார்த்தாள் .
வெளியே நின்றிருந்தவன் " ஆருத்ரா ....? " என்றான் கேள்வியாய் .இவனுக்கு எப்படி தெரியும் ... விழித்தாள் அவள் .

## 2

கண்ணை கூசிய வெளிச்சத்தில் முதலில் முன்னால் நின்றவனின் உயரம் மட்டும்தான் தெரிந்த்து .அவனது முகம் கூட கருமை பூசித்தான் அரை வெளிச்சமாக இருந்த்து . யாரென்றே தெரியாத ஒருவன் வெளியே நின்று தன் பெயரை சொல்லவும் மெல்லிய அதிர்வு உடலில் பரவ விழித்து நின்றாள் .

" ஓ ..தூங்கிட்டிருந்தீங்களா ...நாம் வேண்டுமானால் காலையில் பேசலாமா ...? " தன்மையாய் கேட்டான் அவன் .

அவள் இன்னமும் விழித்தபடி இருப்பதை காணவும் " என்னம்மா பாதி தூக்கத்தில் திடீரென என்னைப் பார்க்கவும் ,அதிர்ச்சி ஆகிவிட்டதா ...? சாரி ...நான் உன்னை பார்க்கும் வேகத்தில் ...கதவை தட்டிவிட்டேன் .நீங்கள் தூங்குங்கள் நாம் நாளை பேசலாம் ..." அவன் திரும்பியே நடக்க ஆரம்பித்து விட ,

இப்போது  கொஞ்சம் இயல்பு திரும்பியிருக்க தலையை உலுக்கிக் கொண்டாள் ." ஹலோ சார் ...நீங்கள்...? "

சட்டென திரும்பியவன் புன்னகைத்து கரம் குவித்தான் " நான் உமாபதி "

இவனா உமாபதி ...இவன் இத்தனை இளமையானவனா ...?  அப்படி எதுவும் சரவணன் சொல்லவில்லையே ...அத்தோடு இதுவரை எல்லோரும் மரியாதையாக பேசுவதை வைத்தும் , அவனது பெயரை வைத்தும் நாறபது வயதிற்கு மேலானவனைதான் உமாபதியாக எதிர்பார்த்திருந்தாள் .

" நீங்கள் சரவணனின் தங்கை ஆருத்ராதானே ...? "

" ஆமாம் . ஆனால் அது எப்படி உங்களுக்கு ...அதாவது இந்த பெயர் உங்களுக்கு எப்படி தெரியும் ...நான் பொதுவாக என்னை ருத்ரா என்றுதான் அறிமுகப் படுத்தி கொள்வேன் ...."

" சரவணன் ஒரு முறை  சொன்னான் .அழகான உன்  பெயர் என் மனதில் பதிந்து விட்டது ."

அழகான பெயரா ...அந்த பெயர் சுத்த கர்நாடகமாக இருக்கிறது என்றுதான் தன் பெயரை ருத்ரா என்று ஸ்டைலாக அனைவரிடமும் சொல்லிக் கொள்வாள் .இவன் என்னவென்றால் ...

" பயண அலுப்பு உங்களுக்கு இருக்கும் . ஆனால்சாப்பிடாமல் தூங்குகிறீர்களே எனறுதான் ...சாப்பிட அழைக்கலாமென வந்தேன் ..." இப்போதுதான் தான் இங்கே தங்குவதற்கு வரவில்லை என்பதே அவள் நினைவில் வர , பரபரத்தாள் .

" ஓ...சாரி ...சாரி ...நான் கிளம்புகறேன் .சரவணன் எங்கே இருக்கிறானென சொல்லுங்கள் .நான் அவனை பார்க்க போக வேண்டும் .இப்போது கிளம்ப வேண்டும் ..." வேகமாக அறைக்குள் போய் , தனது பேக்கை தோளில் மாட்டிக கொண்டு  டிராலியை உருட்ட தொடங்கினாள் .

" ஈஸி ஆருத்ரா .ஏன் இவ்வளவு பதட்டம் ...? இதை விடு.முதலில் உட்காருங்கள் ..." பெட்டியிலிருந்து அவள் கையை விடுவித்தான் .தோள் பேக்கை வாங்கி கீழே வைத்தான் ." முதலில் கட்டிலில் உட்காரு ..." படபடப்புடன் கட்டிலில் அமர்ந்தாள் .அவன் ஒரமாக இருந்த மேசையின் நுனியில் சாய்ந்தாற் போல் கைகளை கட்டிக் கொண்டு லேசாக அமர்ந்தபடி பேசத் துவங்கினான் .

" சரவணனை ஒரு வேலையாக அனுப்பி இருக்கிறேன் .அவன் வர நாலு நாட்களாகலாம் .வந்து ...இரண்டு நாட்கள் முன்பு உங்கள் மெயில் பார்த்தேன் .இங்கே வரப் போவதாக அனுப்பி இருந்தீர்கள் .உடனே பதில் அனுப்ப முடியவில்லை .நேற்றுத்தான் அனுப்பினேன் .நீ பார்க்கவில்லை போல ..."

ஆருத்ரா அவசரமாக போனை எடுத்து மெயில் செக் செய்தாள் .ஆம் நேற்று அவன் மெயில் அனுப்பியிருந்தான் .இங்கே புறப்பட்டு வரப் போவதாக அவள் அனுப்பியிருந்த மெயிலுக்கு பதிலாக ...இப்போது வர வேண்டாம் .நான் சொன்னபிறகு வாருங்கள் என பதில் அனுப்பியிருந்தான் .

ஆருத்ராவின் முகம் கன்றியது .சை வரவேண்டாமென்று சொன்னவன் வீட்டிற்குள்ளேயே வந்து உட்கார்ந்து கொண்டதோடு , நன்றாக தூங்க வேறு செய்து ...அவளுக்கு அவமானமாக இருந்த்து .
" பரவாயில்லைம்மா .ஏன் இத்தனை பதட்டம் ...? " அவன் மென்மையாக பேசினான் .

" சாரி என் தப்புதான் .சரவணின் போன் கிடைக்கவில்லை .அவன் மெயிலுக்கும் எந்த ரிப்ளையும் பண்ணவில்லை . அதனால் அவன் எப்போதோ ஒரு முறை தந்த உங்க மெயில் ஐடிக்கு வருவதாக மெசேஜ் அனுப்பி விட்டு கிளம்பி வந்துவிட்டேன் .இப்போது கிளம்புகிறேன் ..."
" ஷ் ...உட்காருங்கள் ...மணி இப்போது இரவு பத்தாக போகிறது .இந்த நேரத்தில் வெளியே போய் எங்கே தங்குவாய்...? பேசாமல் தூங்கு .காலையில் பேசிக்கொள்ளலாம் ..." அதட்டலாக சொன்னான்.

பத்து மணியா ...சன்னல் வழியாக தெரிந்த இருள் ஆமாம் என்றது .இப்போது வெளியே போவது முழு முட்டாள்தனமென உறுதியாக பட , வேறு வழியின்றி தலையாட்டினாள் .

" நைட் டிபன் ...? "

" என்னிடம் பிரட் இருக்கிறது .சாப்பிட்டு கொள்கிறேன் ..."

" பைவ் மினிட்ஸ் ..." வேகமாக வெளியே போனவன் , சொன்னது போன்றே ஐந்தே நமிடங்களில் திரும்பி வந்தான் .கையில் மூடப்பட்ட

தட்டு .

" இட்லி .அழையாத வீட்டிற்குள் வந்துவிட்டோமே எனக் கூச்சப்படாமல் சாப்பிட்டு விடுங்கள் . நீங்கள் வந்த்தால் எந்த தொல்லையும் இல்லை ..." தட்டை டேபிள் மேல் வைத்தான் . வாசல் கதவருகே போய் நின்று " குட்நைட் .சாப்பிட்டு நிம்மதியாக தூங்குங்கள் ஆருத்ரா .அழகான பெயர் ..." மென்னகை ஒன்றுடன் மீண்டும் அவள் பெயரை பாராட்டிவிட்டு வெளியேறினான் .

வாயில் போட்டதும் கரைந்து இறங்கிய அந்த இட்லிகளை சுவைத்தபடியே " ஆருத்ரா ...." என தனக்கு தானே உச்சரித்துக் கொண்டாள் .ம் ...அழகாய்தான் இருக்கறது .முதன் முறையாக தன் பெயரை தானே ரசித்துக் கொண்டாள் .

--------------------

சன்னல் வழியாக வெளிச்சம் உள்ளே வர ஆரம்பித்த பிறகே விழித்தாள் ஆருத்ரா .மணி ஏழரை காட்ட கொஞ்சம் வெட்கம் வந்து .சை ...நான் பாட்டுக்கு தூங்கி விட்டேனே ....இந்த வீட்டில் உள்ளோர் என்ன நினைப்பார்கள் ...?சரியான தூங்குமூஞ்சி என நினைக்க மாட்டார்களா ....? வேகமாக குளித்து உடை மாற்றினாள் .அறையினுள்ளேயே அமைந்திருந்த பாத்ரூம் தற்போது புதிதாக அட்டாச்டாக இணைக்கப்பட்டிருந்த்து தெரிந்த்து . ஷவர் , ஹீட்டர் , வெஸ்டன் டாய்லெட் என எல்லா வசதிகளும் இருந்தன .

குளித்து அரக்கும் , மஞ்சளும் கலந்த ப்ரில் சுடிதார் அணிந்தாள் . சரியாக காயாத முடியை முன்னால் மட்டும் வாரி பின் பண்ணி பின்னால் அப்படியே விட்டாள் . பொருத்தமான பிளாஸ்டிக் கம்மல் அணிந்தவள் , கழுத்தையும் ,வலது கையையும் வெறுமையாக விட்டு , இடது கையில் மெல்லிய ப்ரேஸ்லெட் மாட்டினாள் .நெற்றியில் பேன்சி பொட்டை ஒட்டி மேக்கப்பை முடித்து அறையிலிருந்து வெளியே வந்தாள் .
"

" ஹலோ ...குட்மார்னிங் ..." சோபாவில் பேப்பர் படித்தபடி அமர்ந்திருந்த உமாபதியின் பார்வை ஆருத்ராவின் மேல் அப்பலாய் நிலைத்தது .பதில் குட்மார்னிங் சொன்னவள் அவன் பார்வையை கவனிக்கவில்லை .அவள் விழிகள் அகல விரிந்து அந்த வீட்டை பிரமிப்புடன் வலம் வந்தன .முதல்நாள் இருட்டில் தெரியாத உள் அலங்காரங்கள் இப்போது தெரிந்தன .உமாபதி இருந்த்தினாலே என்னவோ சன்னல்களை நன்கு திறந்து விட்டு , சன்னல் ஸ்கிரீன்களை ஓரமாக ஒதுக்கியிருந்தான் .எனவே வெளிச்சமும் , காற்றும் தாராளமாக உள்ளே நுழைந்த்து .

வெளேரென ஏதோ ஒரு வகை கல் தரையில் பதிக்கப்பட்டிருக்க , தரை பளபளத்தது .கண்ணாடி பளபளப்பு அல்ல , தொட்டுணர துடிக்கும் தேனின் பளபளப்பு .அந்த தரையை மறைத்தபடி இரத்த சிவப்பு நிற கம்பளம் விரிக்கப்பட்டிருக்க , அதன் ஓரம் ஊதா நிற சோபாக்கள் போடப்பட்டிருந்தன .சன்னல் திரைகள் ரோஜாவும் , கிளிப்பச்சையும் கலந்து அருவியாய் வழிந்திருந்தன. அந்த பெரிய ஹால் நிறைய சுற்றிலும் சன்னல்கள்தான் இருந்தன .அவையும் தரைத்தளத்தின் பாதி வரை கீழிறங்கி கிட்டதட்ட வாசல் போல் இருந்தன.ஒன்று , இரண்டு என மொத்தம் பன்னிரெண்டு ஜன்னல்களை எண்ணினாள் .

எத்தனை அழகான வீடு ...ஆருத்ராவிற்கு உடனடியாக அந்த வீடு முழுவதும் சுற்றி பார்க்க வேண்டுமென்ற ஆவல் தோன்றியது .
" முதலில் சாப்பிடுங்கள் .பிறகு வீட்டை சுற்றி பார்க்கலாம் ...." அவன் குரலில் ஆச்சரியமாகி பார்க்க , புன்னகைத்தான் .

" சிட்டியிலேயே பிறந்து வளர்ந்த பொண்ணு , வித்தியாசமான இந்த வீடு உன்னை கவர்கிறது ..."

" ஆமாம் ...பழமை என்பது மட்டுமில்லை .அந்த பழமையுடன் புதைமைகளையும் சேர்த்து அழகாக வீட்டை நவீனப்படுத்தி வைத்திருக்கிறீர்கள் .அதுதான் என்னை கவர்கிறது ..."
" ஏதோ ...முடிந்த அளவு .ஆனால் உங்கள் ரசனை என்னை ஆச்சரியப்படுத்துகிறது .இந்த வீட்டை பார்க்கும் நாகரீகவாதிகள் பாழடைந்த பேய் மாளிகை என்றுதான் இதுவரை சொல்லியிருக்கிறார்கள் .நீதான் இப்படி ரசிக்கிறாய் ..."
" அழகான இந்த வீட்டை பேய் மாளிகையென்பவர்கள் , நிச்சயம் கண்களை பரிசோதித்து கொள்ளவேண்டும் ...." அருகிலிருந்த தூணை ஆவலாக வருடினாள் .

சாப்பிடும் அறை மற்றொரு பிரம்மாண்டம் .

" இங்கே கல்யாணபந்தி நடத்துவீங்களோ ....? " இருபது பேர் சேர்ந்து அமரும் வகையில் இருந்த அந்த தேக்கு டேபிளை தொட்டு பார்த்தபடி கேட்டாள் .

" உமா ...ஒரு வார்த்தை சொல்லட்டும் .பந்தி விரிச்சுட மாட்டோமா ...? " கையில் பாத்திரத்துடன் வந்தபடி சொன்னாள் முன்தினம் கதவை திறந்து விட்ட பெண் .

" சித்தி ...சும்மா இருங்க ..." அவளை அதட்டிய உமாபதி ...." நாம் இங்கே உட்கார்ந்து கொள்ளலாம் ஆருத்ரா ...." என அந்த பெரிய , நீள டேபிளின் அருகே இருந்த சிறு டேபிளை காட்டினான் .

" நாம் இருவர்தானே .இது போதும்தானே ..." என அபிபராயம் கேட்டான் .

" உமா ...என்ன பெயர் சொன்னாய் ...ஆருத்ராவா ...உன் பெயராம்மா ...? " அந்த பெண் ஆச்சரியமாய் கேட்டாள் .

" ஆமாம்மா ...ஏன் ...? "

" அந்த பெயரின் அர்த்தம் தெரியுமா...? மிக உன்னதமான பெயர் தெரியுமா அது ...? "

அவள் அப்படியா என்பது போல் உமாபதியை பார்க்க ,அவன் தலையசைத்தான் .

" சிவபெருமான் நடன கோலத்தில் தேரில் வீதி வலம் வருவார. .இது மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தன்று நடக்கும் இங்கே ...சிதம்பரத்தில் .அவரது நடன கோலத்தை பார்க்க தேவர்களும் வருவதாக ஐதீகம் .அப்போது அவர்கள் சிவனின் நடனத்தை பார்த்து ஆ..ருத்ரா ...என வியந்தார்களாம் ...அதனால் அந்த தரிசனத்தின் பெயர் ஆருத்ரா தரிசனம் ..."

அவனது விளக்கத்தில் விழி விரித்தாள் ." என் பெயரில் இத்தனை விபரங்கள் உள்ளடங்கி இருக்கிறதா ...? எனக்கு தெரியாதே ...? "
" இனி தெரிந்து கொள்ளுங்கள் .இப்போது சாப்பிடுங்கள் "
" சரவணனை எங்கே அனுப்பியிருக்கிறீர்கள் ...? " சாப்பிட்டபடி கேட்டாள் .

" சித்தி தோசை கொண்டு வாங்க ...தக்காளி சட்னி போட்டுக்கோங்க ..." தொடர்ந்து அவளை சாப்பிட்டு முடியும் வரை உபசரித்தபடி , வேறு விசயங்கள் பேசியம்படி இருந்தான் .மிக இனிமையாக , சுளுவாக போனது அவனுடனான பொழுது .

" நீங்கள ஓய்வெடுங்கள. ஒரு முக்கிய வேலை இருக்கிறது .வந்துவிடுகிறேன் ." என அவன் விடை பெற்ற போது அழகாக தலையசைத்து விடை கொடுத்தாள் .

அவன் போனதும் வாசல் திண்ணையில் வந்து அமர்ந்து கொண்டாள் .தோட்டக்கார்ர் காவல் நாய் மணியை குளிப்பாட்டிக் கொண்டிருந்தார் . ஹப்பா ...எவ்வளவு பெரிய நாய் ...குட்டி குதிரை போலிருக்கிறதே...பயம் கலந்த ஆச்சரியத்துடன் அதை பார்த்தபடி இருந்த போதுதான் அவளுக்கு நினைவு வந்த்து .
உமாபதி சரவணனை பற்றி எந்த விபரமும் தனக்கு சொல்லவில்லையென உணர்ந்தாள் .

சரவணனை பற்றி எந்த விபரமும் நீங்கள் சொல்லவில்லையே ....? " மதியம் உமாபதி வீட்டினுள் நுழைந்தவுடனேயே அவனிடம் கேட்டாள் .புருவம் சுருக்கி அவளை பார்த்தவன் பிறகு பளிச்சென சிரித்தான் .
" என்னம்மா ...அண்ணனை பற்றியே நினைத்துக் கொண்டிருந்தாயா ....? "

இயல்பான அந்த பேச்சில் ஒரு குற்றவுணர்வு வந்துவிட ," அண்ணனை ஏதோ வேலையாக அனுப்பியதாக சொன்னீர்கள் .வேறு விபரம் சொல்லவில்லை .அதுதான் கேட்டேன் ..." கேட்டிருக்க கூடாதோ உறுத்தல் அவளுள் .

" காலையிலிருந்து செமத்தியான வேலைம்மா .சரியான பசி .நாம் சாப்பிட்டுக் கொண டே பேசலாமா ...? " அவன் வீட்டில் அவன் சாப்பிட என்னிடம் எதற்கு அனுமதி , அவசரமாக தலையசைத்து வேகமாக உள்ளே போனாள் .

அவனது சித்தி கமலாவிற்கு துணையாக தானும் சமைத்த உணவுகளை டேபிளில் எடுத்து வைத்தாள் .

" என்ன சித்தி விருந்தாளை வேலை வாங்குகிறீர்கள் ...? " கை , கால்களை கழுவியபடி உணவுண்ண வந்து அமர்ந்தான் .

" அந்த பொண்ணுதான் ரொம்ப விருப்பமாக செய்கிறதுப்பா ..." கமலா சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டாள் .

" நீங்க உட்காருங்க ஆருத்ரா ..." என எழுந்து அவளுக்கு பரிமாற முயல , அவள் தடுத்தாள் .

" வேண்டாம் சார் .நீங்கள் உட்காருங்கள் .நான் உங்களுக்கு போடுகிறேன் ..."

" ம்ஹூம் ...விருந்தோம்பல் எங்கள் ஊர் பண்பாடு .நான்தான் உங்களுக்கு பரிமாற வேண்டும் ..." இருவருமாக சாம்பார் சட்டியை இழுக்க , சட்டி தளும்பி குழம்பு தெறித்து உமாபதியின் வெள்ளை சட்டையில் மஞ்சள் கறையானது .

பளிச்சென்ற வெண்ணிறம் பாழானதில் பதறிய ஆருத்ரா " சாரி சார் நான் கவனிக்கலை ..." அவசரமாக தனது சுடிதார் சாலை கொண்டு அவன் முழுக்கை சட்டையின் கை பகுதியில் படிந்த குழம்பை துடைத்தாள் .குழம்பு பரவி சட்டை மேலும் கறையாக நாக்கை கடித்து தலையில் தட்டிக் கொண்டாள் .

" ஷர்ட் கழட்டி தாங்க சார் .நான் க்ளீன் பண்ணி தர்றேன. லேட்

பண்ணினால் கறை தங்கிடும் .."

" விடும்மா .லேசான கறைதான் .பொன்னம்மா பார்த்துக்குவாங்க . நீ உட்காரு .சாப்பிடலாம் ..."

அவள் குழம்பியபடி பார்க்க" பொன்னம்மா துணிகளை துவைத்து போடுபவர்கள் ..." புன்னகைத்தான் .விரிந்த இதழ்களினுள் டாலடித்த பற்களின் மேல் பதிந்த பார்வையை மீட்டுக் கொண்டாள் . அவனது வெள்ளை சட்டைக்கு பொருத்தமாக அந்த பற்களும் மின்னின . வஞ்சனையில்லாமல் எதற்கும் இது போலொரு சிரிப்பை தந்தபடி இருந்தான் . அந்த சிரிப்பு  மிக வித்தியாசமாக ...அவன் இதழொடு நிற்காமல் இதழிலிருந்து கண்கள் , பிறகு புருவம் , நெற்றி , கன்னம் , என  முகம் முழுவதும் நொடியில் பரவி அவன் முகமே மின்னத் தொடங்கும் .இப்படி முகமே சிரிக்கும் சிரிப்பை இவனிடமதான் பார்க்கிறேன் .பார்வையை தட்டின் சாத்த்திற்கு நகர்த்தியபடி நினைத்துக் கொண்டாள் .

உமாபதி அவளது தட்டில் சாதமிட , அவள் அவனது தட்டில் அவியலை வைத்தாள் .

" இரண்டே பேர்தானே , நமக்கு நாமே பரிமாறிக் கொள்வோம் ..." புன்னகைத்தாள் .அவனதை போல் இருக்குமா தன் சிரிப்பு ...உள்ளுக்குள் கவலை கொண்டாள் .

" ஆஹா ...இப்படி ஒரு சிரிப்போடு எதிரில் ஒரு அழகான பெண் அமர்ந்து உடன் உண்ணும் போது , பசியே எடுக்காது போலவே ...." இப்போது அவனது சிரிப்பு அதிகம் விரிந்து மீசையையும் தனது துணைக்கு இழுத்துக் கொண்டது .

இது போல் அழகாகவா இருக்கிறது என் புன்னகை ....? ஆருத்ராவிற்கு அப்போதே கண்ணாடி முன் போய் சிரித்து பார்க்கும் உந்துதல் உண்டானது .அதனை மறைத்துக் கொண்டு தட்டில் கவிழ்ந்து கொண்டாள் .

" பசி என்றீர்களே சாப்பிடுங்கள் ...." அடுத்த கரண்டி உணவை அள்ளி தட்டில் இட்டாள் .

" ஐய்யோ போதும்மா .எதிரில் இது போல் ஒருத்தி உட்கார்ந்து பருக்கைகளை எண்ணி சாப்பிட்டுக் கொண்டரக்கும் போது நான் இப்படி பகாசூரன் போல் தட்டை நிரப்புவது சரி வராது ..."

" நீங்கள் போனதிலிருந்து நான் வீட்டிற்குள் சும்மாவேதான் ...வெளித் திண்ணையில்தான் உடகார்ந்து கொண்டிருந்தேன் .எனக்கு எப்படி பசித்திருக்கும் ...?நீங்கள் வெளியில் அலைந்து வந்திருக்கிறீர்கள்

...நீங்கள் சாப்பிடலாம் ..." மேலும் ஒரு கரண்டி வைத்தாள் .

" ம் ...நீ சொன்னால் சரிதாம்மா ...." மோர் ஊற்றி பிசைந்தவன் " காலையிலிருந்து போரடித்து இருந்தாயாம்மா ...? " அக்கறையாக அவள் முகத்தை பார்த்து கேட்டான் .

போர்தான் ...அந்த பெரிய வீட்டை சுற்றி பார்க்கும் ஆசை அவளுக்கு .அந்த வீட்டின் பெரும்பான்மையான அறைகள் பூட்டியே வைக்கப்பட்டிருந்த்து .சுத்தம் செய்ய வசதியாக அது போல் பூட்டி வைக்கப்பட்டிருப்பதாக கமலா கூறினாள்.சாவி உமாபதியிடம் இருக்குமாம் . அதனால் வெறுமனே பூட்டிய அறைகளை பார்த்தபடி வீட்டுனுள் சுற்றி விட்டு , சும்மாவே அமர்ந்திருந்தாள் .
அறை சாவிகளை கொடுத்திருந்தால் அவளாகவே திறந்து பார்த்திருப்பாளே ....பொழுதும் போயிருக்குமே ...என்ற எண்ணம் அவளுக்குள் நெருஞ்சியாய் இல்லாமலில்லை .

" சாப்பிட்டு வாம்மா ...." அவன் சுட்டிக் காட்டிய அவன் அறைக்குள் சார்த்தியிருந்த அறைக் கதவை தள்ளியபடி இல்பாய் நுழைந்து விட்டவள் " சாரி ..." என முகம் சிவந்து தடுமாறினாள் .

சாம்பார் படிந்த சட்டையை மாற்றிக் கொண்டிருந்தான் அவன் .அரை நொடியில் கையில்லா வெண்ணிற பனியனில் தெரிந்த திரண்டிருந்த அவன் புஜம் மனதினுள் தங்கி விட தடுமாறி அறைக்கு வெளியே தள்ளி நின்றாள் .

" பரவாயில்லை ஆருத்ரா .உள்ளே வாங்க ...."

" நான் இருக்கிறேன் .நீங்க வாங்க ...."

" ஏன்மா ....? " சட்டையின் கடைசி பட்டனை போட்டபடி வந்தவனின் கைகளில் கனமான நீண்ட சாவிகள் .பெரிய கனமான வளையத்தினுள் தொங்கியபடி ஒரு விதமான" க்ளுங்" ஓசையை எழுப்பின .

" வாங்க ...போகலாம் ..." முன்னால் நடந்தான் .

" இதை த்ம்பிள்ஸ் ஆக்கித்தான் இப்படி பாடியை மெயின்டெய்ன் பண்ணுகிறீர்களோ ....? "

" என்ன சொல்கிறீர்கள் ...? "

" ஒவ்வொரு சாவியும் ஒரு கிலோவாவது இருக்கும் போலவே ...." அவன் கை சாவியை காட்டி , அவனது திரண்ட புஜங்களையும் சுட்டினாள் .
" ஹா ....ஹா ...." தலையை சரித்து சிரித்தான் ." இந்த அளவு பெரிய சாவி வேவைப்படுமளவு அந்த கதவின் பூட்டுக்கள் நுட்பமானவை ஆருத்ரா ...."

முதலில் அவன் நின்ற அறையின் சாவித்துவாரம் மயிலின் தலை அமைப்பில் இருந்த்து .சாவிக்கொத்திலிருந்து அதே போன்ற மயில் தலை அமைப்பு கொண்ட சாவியை தேர்ந்தெடுத்து கதவினுள் நுழைத்து இடப்புறம் ஒரு முறையும் , வலப்புறம் இரு முறையும் திருப்பினான் ." க்ளிக் " ஓசையுடன் கதவு திறந்து கொண்டது .

அவன் கதவை திறக்கும் முறையை நிஜமாகவே வாயை திறந்தபடி பார்த்துக் கொண்டிருந்த ஆருத்ரா , அறையினுள் நுழைந்த்தும் திறந்த வாயை மூடாமலேயே " வாவ் " என அதிகமாக வாயை விரித்தாள் . அந்த அறை சன்னல்கள் முழுவதும் கலர் கண்ணாடிகள் பொருத்தப்பட்டிருக்க , அந்த கண்ணாடி வழியே ஊடுறுவி வந்த சூரிய ஒளி அந்த கண்ணாடியின் வர்ணங்களை அறை முழுவதும் சிதறடித்திருந்த்து .வானவில்கள் நிறைந்திருந்த அறைக்குள் நுழைந்து விட்ட தடுமாற்றம் ஆருத்ராவிற்கு ஏற்பட்டது .

இரு கன்னங்களின் கைகளை பதித்து வைத்து வியந்தபடி அந்த அறைக்குள் நுழைந்து பரவசப்பட்டாள் .சன்னலருகே போய் அந்த வண்ணங்களை தொட முயற்சித்து , அவை தன் உடலிலும் பதிவதை வியப்புடன் கவனித்து குழந்தையாய் குதூகலித்தாள் .
" இதற்காகத்தான் ...இந்த சந்தோசத்தை பார்ப்பதறகாகத்தான் , உன் கையில் சாவியை கொடுக்கவில்லை ஆருத்ரா .நானே பக்கத்திலிருந்து உனக்கு ஒவ்வொரு அறையாக திறந்து காட்ட நினைத்தேன் ..."
அவன் சொல்லவும் ரொம்பவும் குழந்தைத்தனம் பண்ணிவிட்டோமோ ....தனது முகத்தில் கொஞ்சம் உணர்வுகளை குறைக்க முயன்றவளை " ம்ஹூம் " ஒற்றை விரலை ஆட்டி மறுத்தான் .

" உன் இயல்புகளை மறைக்காதே ஆருத்ரா .இதுதான் உனக்கு பொருத்தமாக இருக்கிறது .எனக்கு பிடித்தமாக இருக்கிறது " தனது சிரிப்பை சிந்தினான் .

இது போன்றதொரு வானவில் வண்ணங்களுக்கிடையே நின்று கொண்டு , இப்படி ஒரு வெண்ணெய் கண்ணன் சிரிப்பையும் பெறுவதென்றால் பெறுவதற்கரிய பேறு என்றுதான் ஆருத்ராவிற்கு தோன்றியது .அதனபின் அடுத்தவர் முன் தன்னை அப்படியே வெளிப்படுத்துவதா ...என்ற கூச்சமின்றி தன் மன உணர்வுகளை மறைக்க முயற்சிக்கவில்லை அவள் .

அடுத்த அறை சாவி சிங்க முகம் கொண்டதாயிருந்த்து .அடுத்தது சூரிய முகம் ...சந்திரன் , பசு , தாமரை என விதம் விதமான சாவித்துவாரங்கள் .அதற்கேற்ற சாவிகள் ◌ஒவ்வொரு அறைக்கும் திறக்கும் பொழுது வலது

, இடது என  ஒரு கணக்கு .அத்தனை அறைகளும் பிரம்மாண்டங்கள்தான் .அதனதற்கு ஏற்ற மாதிரி பர்னிசர்களுடன் . ஒரு குட்டி அரண்மனையை சுற்றி பார்த்த நிறை உணர்வடைந்தாள் ஆருத்ரா .

மாடி அறைகளுக்கு நடு நாயகமாக வெளிப்புறமாக நீண்டு சென்றது ஒரு பால்கனி போன்ற அமைப்பு ." இது நிலா முற்றம் " என்றான் உமாபதி . நிலாக்காயும் இரவு நேரங்களில் குளிர் சுமந்திருக்கலாம் .இப்போது இந்த மதிய வேளையில் வெப்பமாகத்தான் இருந்த்து .அதனை சமன்படுத்தவோ என்னவோ அந்த முற்றம் முழுவதும் தொட்டிச்செடிகளை வைத்திருந்தான் உமாபதி .அவை அவ்விடத்தினை இந்த மதிய வெயிலிலும் ஓரளவு குளிரூட்டிக் கொண்டிருந்தன .

அந்த முற்றத்தின் நடுநாயகமாக மேலே இரும்பு பட்டை வைத்து , கனத்த சங்கிலி போட்டு அதில் தொங்கியபடி இருந்த்து ஒரு மர ஊஞ்சல் .ராஜ கம்பீரத்துடன் அதற்குரிய அலங்காரங்களுடன் .ஆவலாக அதனருகில் போய் தொட்டு பார்த்தாள் .

வித விதமான வண்ணங்களில்மலர்ந்திருந்த ரோஜா மலர்களில் ஒரு ஆழ் மஞ்சள் வண்ண மலரை பறித்து அவளிடம் நீட்டினான் உமாபதி.

" உன் டிரஸ்ஸுக்கு மேட்சாக ..."

குனிந்து அரக்கும் , மஞ்சளும் கலந்த தனது ப்ரில் சுடிதார் உடையை பார்த்தவளுக்கு மறுக்க தோன்றவில்லை .கேர்பின்னால் காதோரம் அந்த ரோஜாவை சொருகிக் கொண்டாள் .

" இதில் உட்காருகிறாயா ஆருத்ரா ...? " அவன் கேளவி முடியும் முன்பே ஆவலுடன் தலையசைத்தபடி ஊஞ்சலில்  அமர்ந்தாள். .உமாபதி மெல்ல ஊஞ்சலை ஆட்டி விட ஆரம்பித்தான் .ஆடும் ஊஞ்சலினாலோ அல்லது பறவை பாய்ச்சலாய் பறந்து கொண்டிருக்கும் ஆருத்ராவின் இள மனதினாலோ , அப்போது அந்த இடத்தில் இயறகையாகவே தென்றல் தவழ்ந்து வரத் துவங்கியது .

ஆருத்ரா தனை மறந்து கண்கள் சொருக அந்த மெனமையான ஊஞ்சலாட்டத்தை அனுபவிக்க தொடங்கனாள் .எத்தனை நேரம் சென்றதோ ..." நன்றாக இருக்கிறதா ஆரா ...? " கரகரப்பும் , மென்மையும் கலந்து காதருகே கேட்ட உமாபதியின் குரலில் நிகழ்வுக்கு வந்தவள் கண்களை சோம்பலாய் திறந்தாள் .

" போதும் ..." மனமின்றி நிறுத்த சொன்னாள் .ஊஞ்சல் சங்கிலியை நிறுத்த வேண்டி உமாபதி அழுத்தி பிடிக்க , ஆருத்ராவின் மென் உடல் அவளுக்கு பின் நின்றிருந்த உமாபதியின் உடலுடன் மோதி நின்றது .

கேக்கு மரமொன்றின் மீது வலிய மோதிய புது உணர்வில் உடல் சிலிர்த்தவள் சடாரென ஊஞ்சலை விட்டு இறங்கி நின்றுவிட்டாள் . திடுமென அவள் குதித்து விட்டதால் ஊஞ்சல் மீண்டும் முன் வந்து அவள் மீதே மோதிவிடாமல் அதனை வேகமாக பின்பிருந்து பிடித்துக் கொண்டான் ." பார்த்துடா ...இப்படியா சிறு பிள்ளை போல் குதிப்பாய்...? " தடுக்கி விழுந்த குழந்தையை கண்டிக்கும் தாயின்குரலில் பேசினான் .

உணர்ச்சிகள் கொந்தளிக்கும் தன் முகத்தை அவனுக்கு காட்டாமல் முன் திரும்பியபடியே திரும்ப வீட்டினுள் வந்தாள் ஆருத்ரா .

" நான் வெளியே போய்விட்டு வருகிறேன் ஆருத்ரா .நீங்கள் கொஞ்சநேரம் ஓய்வெடுங்கள் ..." மெல்லிய தலையசைப்புடன் அவளிடம் விடை பெற்றான் .வேகமான தலையாட்டலுடன் அ னுக்கு விடை கொடுத்த ஆருத்ராவிற்கும் ஒரு சிறு தனிமை தேவைப்பட்டது . அவன் போனதும் தன் அறை கட்டிலில் படுத்து கண்களை மூடிக்கிடந்தபடி அவனுடனான அந்த மதிய பொழுதை மனதற்குள் அசை போட்டாள் .தேன் சொட்டுகளாய் அவன் மனம் முழுவதும் பரவின அக்கணங்கள் .

இந்த கணங்கள் மனதில் ஏற்றிய சுக கனங்களில் ஆருத்ரா மீண்டும் தன் அண்ணன் சரவணனை மறந்து போனாள் .

4

" சிதம்பர ரகசியம் என்றால் என்ன ...? " ஆவலுடன் கேட்டபடி உமாபதியுடன் இணைந்து கோவில் படியேறியபடி கேட்டாள் ஆருத்ரா .
" அங்கே பாரும்மா ...." உமாபதி காட்டிய இடத்தில் பொன் தகடுகள் வேயப்பட்ட அம்பலக்கூரை மின்னியது .
" ஆஹா ..அழகு.தங்கத்திற்கென தனி சோபை உண்டுதானே .அதைத்தானே காட்டுகின்றன இந்த கூரைகள் ..."
" ம் .அதை மட்டுமல்ல , அதோ அந்த கோபுரத்திற்குள் இருக்கும் சூட்சும்ம் தெரியுமா ...? மனித உடலை அடிப்படையாக கொண்டு அமைக்கப்பட்டிருக்கிறது இந்தகோவில் .இதன் ஒன்பது நுழைவு வாயில்களும், மனித உடலில் இருக்கும் ஒன்பது வாயில்களை குறிகின்றது. இதோ இந்த கோபுர விமானத்தின் மேல் இருக்கும் பொற் கூரை 21,600 தங்கத்தகடுகளை கொண்டு வேயப்பட்டுள்ளது, இது மனிதன் ஒரு நாளைக்கு சராசரியாக 21600 தடவைகள் சுவாசிக்கிறான் என்பதை குறிக்கின்றது . இந்த 21,600 தகடுகளை வேய 72,000 தங்க

ஆணிகள் பயன்படுத்தப்பட்டுள்ளது, இந்த 72,000 என்ற எண்ணிக்கை மனித உடலில் இருக்கும் ஒட்டுமொத்த நாடிகளை குறிக்கின்றது. பொற் கூரையின் மேல் இருக்கும் 9 கலசங்கள், 9 வகையான சக்தியை குறிக்கின்றது. ஆக இந்த தங்க கூரை மனிதனின் உடல் இயக்கத்தை சூசகமாக சொல்கிறது ..."

" இனட்ரெஸ்டிங் .இந்த இனடர்நெட் யுகத்தில் இது போலொரு அமைப்பு உண்டாகுமானால் அது சாத்தியமே .ஆனால் இது உருவாகியிருப்பது ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முனபு .இந்தக் கோவில் உருவான வருடம் அதுதானே உமா...? "

ஆருத்ராவின் கேளவிக்கு முகம் மலர தலையாட்டினான் அவன் .
" அது மட்டுமல்ல .இங்கே வா ..." கோவில் கருவறை இருக்குமிடம் அழைத்து சென்றான் .

" இதனை பொன்னம்பலம் என்பர் .சாதாரணமாக ஒரு கோவில் கருவறை அந்த கோவிலின் மைய பகுதியில் அமைந்திருக்கும் .ஆனால் இங்கே இடது ஓரமாக ஒதுங்கி அமைந்துள்ளது . மனிதனின் உடலில் இடது ஓரம் இதயம் அமைந்திருப்பதை குறிக்கிறது இது ...."
" ஓ ...இந்த கோவிலின் இதயம் இந்த கருவறை அதைத்தானே இது குறிக்கிறது ...? "

" இல்லை ...மேலே வா .சொல்கிறேன் ...." என படியேறினான் .
கருவறை செல்ல மொத்தம் ஐந்து படிகள் . ,"சி..,வா..,ய...,ந,...ம" என ஒவ்வொரு படிக்கும் ஒரு எழுத்தை சொல்லியபடி படியேறினான் .
" ஒவ்வொரு படியும் இந்த எழுத்துக்களைத்தான் குறிக்கின்றன .இவைகளை பஞ்சாட்சர படிகள் என்று சொல்வார்கள் " மேலேறி பொன்னம்பலத்தை அடைந்தார்கள் .

" இதோ இங்கே 28 தூண்கள் உள்ளன, இவை 28 ஆகமங்களையும், சிவனை வழிபடும் 28 வழிகளையும் குறிக்கின்றன, இந்த 28 தூண்களும் 64 + 64 மேற் பலகைகளை கொண்டுள்ளது .இது 64 கலைகளை குறிக்கின்றது, இதன் குறுக்கில் செல்லும் பல பலகைகள் மனித உடலில் ஓடும் பல ரத்த நாளங்களை குறிக்கின்றது."

".அர்த்த மண்டபத்தில் உள்ள 6 தூண்கள், 6 சாஸ்திரங்களையும்,அர்த்த மண்டபத்தின் பக்கத்தில் உள்ள மண்டபத்தில் உள்ள 18 தூண்கள், 18 புராணங்களையும் குறிக்கின்றது."

உமாபதியின் விளக்கங்களை வறண்ட நில நீர் உறிஞ்சலாய் உள் வாங்கிக் கொண்டாள் ஆருத்ரா .அடர் கரு மீசையின் அடியில் சிவந்த இதழ்களின் மென்னசைவை வேடிக்கை பார்த்தபடி இருந்தவளின் ,

கன்னத்தில் ஒற்றை விரல் வைத்து கோவில்புறம் திருப்பினான் .

" சிதம்பர ரகசியம் என் முகத்தில் இல்லை .இந்த கோவிலினுள் இருக்கிறது ...அங்கே பார் ஆரா " செல்லமாக கூறினான் .

ஐய்யோ கவனித்து விட்டானா ...இப்படி அவனாக கவனிக்கும் வரையா ...அவனை " ஆ" வென பார்த்து வைப்பேன் கூச்சத்துடன் தலை குனிந்தாள் .திடீரென ஒரு சுற்றுலா கூட்டம் வர அந்த இடம் நெருக்கடியானது .இயல்பாய் அவள் கை மணிக்கட்டை தன் வலது கை இருவிரலால் வளையமாய் பற்றி தன் பக்கம் கூட்டிக்கொண்டவன் கருவறையினுள் நுழைந்தான் .

ஆனந்த தாண்டவத்தில் நின்ற நடராச பெருமானின் தோற்றம் ஆருத்ராவின் உச்சந்தலையில் ஓர் ஒளி மின்னலை இறக்கியது .தானாக கைகள் குவிய , விழிகளை அகற்றிக்கொண்டாள் .வலது காலை ஊன்றி இடது காலை தூக்கி நின்றபடி நடன முத்திரையில் இருந்த பெருமானின் தோற்றம் ...அவரது முக பாவனை ...விரிந்து பறந்த அவரது குழல்கள் பார்க்கையிலேயே அவரது ஆனந்த தாண்டவத்தை மனதிற்கு கடத்தியது .

" தரையில் ஊன்றியிருக்கிறார் பார் பெருமான் தன் பாதத்தை, அந்த பாதத்தின் அடியில்தான் இந்த பூமியின் மையப்புள்ளி இருக்கிறது ...." குனிந்து அவள் காதுக்குள் சொன்னான் .

" பூமியின் மையப்புள்ளி ...அப்படியென்றால் ..."

" இந்த ஒட்டு மொத்த உலகத்தின் சுழற்சியின் மையப்புள்ளி இதோ இந்த பெருமானின் வலது காலடியில்தான் இருக்கிறது "

கேட்ட சேதியின் மகத்துவத்தில் ஆருத்ராவின் விரல்கள் மெல்ல நடுங்க தொடங்கின. " நிஜம்மாகவா ....? "

" சர்வதேச ஆன்மீக அமைப்புகள் பல கோடி டாலர்கள் செலவழித்து கண்டுபிடித்த உண்மை இது ...இதோ இப்போது நாம் உலகின் மைய புள்ளியில் நின்று கொண்டருக்கிறோம் ..." ஆருத்ராவின் உடல் சிலிர்த்து கண்கள் கலங்கி விட்டது .சிதம்பர ரகசியங்களை அவள் ஒவ்வொன்றாக உணர்ந்து அனுபவித்துக் கொண்டிருந்தாள் .

அவள் இதழ்கள் தானாகவே " சிதம்பர ரகசியம் " என முணுமுணுத்தது .அதனை கேட்டு விட்டவன் புன்னகையோடு " இங்கே வா ..." என வலதுபக்கவாட்டிற்கு அழைத்து போனான் .

இன்னும் என்ன ...பிரமிப்பு குறையாமல் கனவு போல் அவன் பின்னால் போனாள் .

அங்கும் கூட்டமாக மக்கள் காத்திருந்தார்கள் . அங்கிருந்த சிறு வாசலை

மறைத்திருந்த திரை விலக்கப்பட்டது . உள்ளே என்ன ...ஆவலாக பார்த்தவளுக்கு முதலில் உள்ளே ஒன்றும் தெரியவில்லை . கற்பூரம் காட்டப்பட்ட போது அங்கே ஒரு மாலை இருந்த்து .தங்க மாலை ...வில்வ மாலை .அரவமற்ற அந்த அந்தகாரத்தில் அந்தரத்தில் போலாடிய அம்மாலை கை குவித்து வணங்க வைத்தது .

" இங்கே ஆகாயமாக ஆண்டவன் உறைந்திருக்கிறார் .இதுவே சிதம்பர ரகசியம் ஆரா ..." சூழ்ந்திருந்த கூட்டங்களுக்கடையே , ஒலித்துக் கொண்டிருந்த சிவ நாமங்களுங்குக்கிடையே , நெருக்கிக் கொண்டிருந்த நெரிசல்களை தவிர்க்க உமாபதியின் பக்கம் ஆருத்ரா நன்றாக நகர்ந்திருக்க , அவளது தோள் உமாபதியின் மார்பின் நடுவில் சாய்ந்திருந்த்து . அவள் மறுபுறமிருந்த கம்பியை இறுக பிடித்து கூட்டத்திலிருந்து அவளை தனித்து வளைத்திருந்தன அவனின் கைகள் . தெய்வீகமும் , அன்பும் , ஆதரவும் கலந்த இச்சூழலில் அவள் புறம் சாய்ந்து அவன் விளக்கமளித்த அந்த ரகசியம் அச்சடித்தாற் போல் ஆருத்ராவின் மனதினுள் அமர்ந்து கொள்ள விழி விரித்து அண்ணாந்து அவனை பார்த்தாள் .

" திருப்தியான தரிசனமா ...? " புன்சிரிப்புடன் வினவினான் .

" ரொம்ப திருப்தி ...." அவன் விழிகளுக்குள் பார்த்தபடி கூறினாள் .
" போகலாம் ..." மென்மையாய் தொட்ட அவன் கைக்குள் தன் கையை தயங்காமல கோர்த்துக்  கொண்டாள் .பதிலாக கோர்த்த அவன் கைகளின் அழுத்தத்தில் உற்சாகமிருந்த்து .வெளிப்பிரகாரம் வந்து அமரும் வரை , சூழ்ந்திருந்த கூட்டத்தை சாக்கிட்டு கைகளை விலக்கிக் கொள்ளவில்லை இருவரும் .

ஆருத்ராவினுள் மெல்லிய உணர்வலைகளை பரப்பியபடி இருந்த்து அவனது " ஆரா " .

" என்னம்மா சிதம்பர ரகசியத்தை தெரிந்து கொண்டாயா ...? " கட்டியிருந்த வேட்டியை லேசாக பற்றியபடி தன் நீள்கால்களை சிறிது கஷ்டப்பட்டு மடித்து அமர்ந்தபடி கேட்டான் .நெகிழ்வுடன் அவனருகே அமர்ந்து கொண்டவள் ...

" ஒன்றா ....எத்தனை ரகசியங்கள் ...இந்த கோவிலினுள் ....? " விழி சுழற்றி கோவிலை பார்த்தாள் .

" அத்தனையும் ரகசியம்தான் இல்லையா ....? " குளிர் புன்னகை ஒன்றை தந்தவனுக்கு இமை மூடி ஆமோதிப்பை தந்தாள் .

" அதென்ன ஆரா ....? " விழிகளை அவனுள் ஊன்றியபடி கேட்டாள் .

" ம் .உன் பெயர் எப்போதும் , சரவணன் முதலில் உன்னை பற்றி

சொன்னபோதே எனக்கு மிக பிடித்தமானது .ஏனென்றால் அது இந்த நடராச பெருமானின் தாண்டவ தரிசனம் .இப்போதும் அந்த பெயரை முழுவதுமாக உச்சரித்து உன்னை அழைப்பது எனக்கு பிடித்தமென்றாலும் , அது நம்மை நெருக்கமாக காட்டாது என்றுதான் ..." என்றவன் பிரசாத தட்டிலிருந்த வாழைப்பழத்தை பிய்த்து அவளிடம் நீட்டுவது போல் முகத்தருகே மிக குனிந்து ...

" நான் உன்னுடன் என்னை கொஞ்சம் நெருக்கமாக காட்டிக் கொள்ள விரும்பினேன் . அந்த ருத்ரா எனக்கு பிடிக்கவில்லை .அதனால் இந்த ஆரா ...நன்றாயிருக்கிறதா ஆரா ...? " கற்கண்டின் துகளொன்றை கண்ணினால் உள் செலுத்தி நெஞ்சை தித்திக்க செய்ய முடியுமா ....? அதை அநாயாசமாக செய்து கொண்டிருந்தான் உமாபதி .

எப்போதும் எல்லோரையும் விழி பார்த்து பேசுபவள்தான் .ஆனால் இப்போது வெண்ணிற வேட்டியின் வெளித் தெரிந்த அவன் கால் நகங்களைத்தான் கண்களால் பார்க்க முடிந்தது ஆருத்ராவால் .பதிலின்றி வாழைப்பழத்தை சாப்பிட தொடங்கினாள் .

" நீ கூட உமா என்று அழைத்தாயே ஆரா ...? " வாழைப்பழம் தொண்டையில் சிக்கிவிட்டதோ ....?

" நா ...நானா ....? எ...எப்போது ...? " திணறினாள் .

" நினைவில்லையா ...உன்னை அறியாமலயே சொன்னதா அது ...? " அவனது சீண்டலில் விழித்தாள் .

அடக்கடவுளே , இதற்கு ஆமாமென்றே சொல்லியிருக்கலாம் போலவே ...ஆனால் அப்படி அறியாமலேயே அவ்விதம் எப்போது அவனை அழைத்து வைத்தேன் ...? புருவம் சுருக்கி யோசித்தவளை ....
" நினைவு வரவில்லையா ஆரா ...? நான் நினைவுறுத்தவா ...? அந்த சிங்க அறையில் ...ஊஞ்சலாடுகையில் ....காலை பிச்சிப் பூ பறிக்கையில் ...புறாவுக்கு தானியமிடுகையில் ....சாயங்கால திண்ணை பேச்சில் ...மணியுடன் போன இரவு வாக்கிங்கில் ...." என அவன் அவள் அங்கே தங்க ஆரம்பித்த பொழுதிலிருந்து அவர்கள் சேர்த்து கழித்த கணங்களை வரிசையாக ரசனையுடன் நினைவுறுத்த ஆரம்பிக்க ...ஆருத்ரா திணறினாள் .

" சும்மாயிருங்க உமா ...." மெல்லிய சிணுங்கலுடன் நிமிர்ந்து அவன் முகத்தை பார்க்க , அங்கே மின்னல் முழுங்கினாற் போல் மின்னிய அவன் அவன் விழியில் குழம்பி , பின்னரே தன் உச்சரிப்பை உணர்ந்து சிவந்த கன்னத்துடன் மீண்டும் அவன் பாத விரல்களுக்கே திரும்பிக் கொண்டாள் .

" உமாபதி எப்படி இருக்கிறீர்கள் ...? " கண்ணியமான தோற்றம் காட்டிய ஒரு பெரியவர் தள்ளி நின்று நலம் விசாரிக்க " ஒரு நிமிடம் ஆரா ..." உமாபதி எழுந்து சென்றான் .

" அவுங்க நெக்லஸ் பார்த்தியா ...எவ்வளவு அழகாக இருக்கறது ...? " பின்னால் அமர்ந்திருந்த பெண்கள் கூட்டம் விமர்சித்தது தனது கழுத்து நகைதான் எனபதை உணர்ந்த ஆருத்ராவினுள் புன்னகை வந்த்து . அன்று கோவிலுக்கு கிளம்பலமென உமாபதி சொல்லவும் , வேகமாக தலையாட்டியவள் உடை மாற்ற அறைப்பக்கம் திரும்புகையில் " ஆருதரா சேலை கட்டிக் கொள்ளேன. " என்றான் .யோசனையாய் பார்த்தவளை...

" கோவிலென்றால் என் உடை வேட்டிதான் ...." என்றான் .

" அது ...இங்கே வரும்போது ஒரே ஒரு சேலைதான் எடுத்து வந்தேன் .அது ரொம்ப சிம்பிளாக இருக்கும் ..." தயங்கினாள் .
" பரவாயில்லைம்மா .அதையே கட்டிக் கொண்டு வா ..." என்றவன் அவள் அந்த காட்டன் சேலையை கட்டி வந்த்தும் தனது விருப்பத்தை விழி விரித்து வெளிப்படுத்தினான் .

ஆருத்ரா அப்போது வெள்ளை வேட்டி , சட்டையில் தெரிந்த அவனது கம்பீரத்தை பார்த்தபடி இருந்தாள் .
" இதை போட்டுக் கொள்ளும்மா ...? " என அவன் நீட்டிய நகை செட்டை பார்த்ததும் தானாக பின்வாங்கினாள் ஆருத்ரா .

" ம்ஹூம் ...அடுத்தவரிடம்  எப்படி நகை வாங்கி போட முடியும் ...? " தயங்காமல் சொன்னதோடு நிர்தாட்சண்யமாக மறுக்கவும் செய்தாள் . உமாபதியின் முகம் மாறியது .

5

நான் அடுத்தவனா ...? " கேட்டு முடித்ததும் அவனிடமிருந்து வந்த சீறலில் பாம்பின் ஜாடை தெரிய , ஆருத்ராவின் மனம் துணுக்குற்றது .
" எவ்வளவுதான் நட்பாய் பழகினாலும் ...பண விசயமெனும் போது , அதிலும் தங்கமெல்லாம் ...அது ...அதிக விலையல்லவா ...? அதை எப்படி  நான் ..." ஆருத்ரா தடுமாறினாள் .

" ஓ...இதுதான் உன் பிரச்சனையாம்மா ...? நீ பயப்படுவதெல்லாம் இதில் கிடையாது . " தன் கையிலிருந்த நகையை சுட்டிக் காட்டிய போது அவனிடம் பழைய புன்னகை மீண்டிருந்த்து .

புரியாமல பார்த்தவளிடம் " இது தங்கம் இல்லை .கவரிங் ...நம்

பாக்டரியில் தயாரானது " என்றான் .

" என்னது ...? கவரிங்கா ....? " தங்கத்திற்கு குறைவில்லாமல் மின்னிய அதனை இப்போது வருடியது ஆருத்ரா .

" நீ எவ்வளவு திருப்பி ...தடவி பார்த்தாலும் அதில் கவரிங் என்பதற்கான ஆதாரம் கிடைக்காது .அப்படிப்பட்ட தயாரிப்பாக்கும் அது ...." விளையாட்டாய் காலரை தூக்கி விட்டுக் கொண்டான் .

" நீங்கள் கவரிங் பேக்டரி வைத்திருக்கிறீர்களா ...? "

" சிதம்பரத்தில் முக்கிய தொழில்களில் கவரிங் நகைகள் தயாரிப்பதும் ஒன்று .இங்கிருக்கும் கவரிங் தொழிற்சாலைகளில் என்னுடையது முன்னணியானது .இந்த நகை புது மாடல் . நேற்றுத்தான் இறுதி வடிவமைப்பு முடிந்த்து . உன்னிடம் காட்டலாமெனத்தான் கொண்டு வந்தேன் .இப்போது உன் கழுத்திலேயே அணிந்து பார்க்கலாமே என்று ...." உமாபதி பேசிக் கொண்டிருக்கும் போதே அவன் கையிலிருந்த நகை பெட்டியை வாங்கி , அங்கேயே ஒரு ஓரம் சுவரில் பதித்திருந்த ஆளுயர கண்ணாடி முன் போய் நின்று கழுத்தில் அணிந்து கொண்டாள் . பொருத்தமான காதணிகளை அணிந்த்தும் வைர அட்டிகை ஒன்றின் தோற்றத்தை கொடுத்த அந்த நகையால் கவரப்பட்டவள் நிமிர்ந்து பார்க்க , கண்ணாடியிலேயே அவள் பின்புறம் நின்று கொண்டிருந்த உமாபதி சூப்பர் என கை ஜாடை செய்தான் .

" இந்த நெக்லஸ் எந்த கடையில் வாங்கினீர்கள் ...? " அந்த பெண்கள் கூட்டத்தில் இருந்த தாவணி அணிந்திருந்த இளம் பொண்ணொருத்தி அருகில் வந்து நேரிடையாகவே கேட்டு விட்டாள் .

என்ன சொல்ல ....அவன் கம்பெனி பெயர் அல்லது கடை பெயர் என்னவாக இருக்கும் ...? அவனிடமே கேட்கலாமென சத்தமாக உமா என அழைத்துவிட்டு உதட்டை மடித்து கடித்து கொண்டாள் .

" ஓ ...உமா கவரிங் கா ...? "

" ஏய் அவுங்கதான்டி இது போல் வித்தியாசமான டிசைன்ஸ் எல்லாம் கொண்டு வருவாங்க ..."

" தங்கம் மாதிரியே இருக்கில்ல ..." அவள் கழுத்து நகையை தடவி பார்த்து விட்டு கிட்டத்தட்ட நான்கு பேருமே அந்த நகையை வாங்க முடிவு செய்துவிட்டு சென்றனர் .

" எனக்கு எவ்வளவு பணம் தர போகிறீர்கள் ...? "

" எதற்கும்மா ...? " காரை ஓட்டியபடி அவள் பக்கம் ஓரக்கண்ணால் பார்த்தபடி கேட்டான் .

" உங்கள் நகைக்கு மாடலிங் பண்ணியதற்கு .இப்போதுதான் தெரிகிறது ...இந்த நகையை எதற்கு போடச் சொல்லி கட்டாயப்படுத்தினீர்களென ...."

" என்ன ...உன்னை மாடல்னு சொன்னார்களா ...? இது என்னுடைய நகையென நீ சொல்லவில்லையா ...? " அவன் கேள்வியில் அயர்ந்தாள் . அதெப்படி அவள் தன்னுடையது என சொல்ல முடியும் ...? இதை சொன்னால் அவன் திரும்பவும் அந்த அரவச் சீறலை கொணர்வானோ எனப் பயந்தவள் வாயை மூடிக் கொண்டாள் .

கொஞ்ச நேரம் மௌனமாக காரை ஓட்டியவன் " இந்த நகை நம் ஷோரூம் வின்டோவில் ஒரு வாரத்திற்கு ஷோவாக வைக்கப்படும் .நகையை பற்றிய விசாரிப்பை பொறுத்து இது போக்டரியில் செய்யப்பட்டு கடையில் விற்பனைக்கு வைக்கப்படும் " விளக்கம் சொன்னான் .

" பயப்படாதீர்கள் .இந்த மாடலுக்கு இப்போதே நல்ல வரவேற்பு .நான்கு பெண்கள் நாளையே உங்கள் கடைக்கு இந்தநகை வரப் போவதாக பேசிக் கொண்டார்கள் ..."

" இது எங்கள் கடை நகை .புது மாடல் என ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாம் நீ ...." குறைபாடு போல் சொன னான்

" உங்கள் கடை பெயர் கூட தெரியாது எனக்கு .எப்படி சொல்ல முடியும் ...? "

" ஓ...அது என் தப்புதான் .நம் கடை பெயர் ..."

" உமா கோல்டு கவரிங் ..."

" ஏய் தெரியாதுன்னு சும்மா சொன்னாயா ...? "

" இல்லை ஒரு கெஸ்ஸிங்தான் .சரிதானே ...? "

" ம் .சரிதான் .ஆனால் நீ நினைப்பது போல் இது என் பெயரில்லை .எங்கள் கவரிங் தொழிற்சாலை எழுபத்தியைந்து வருட பாரம்பரியம் மிக்கது .எனது கொள்ளு தாத்தா ஆரம்பித்தது .அவரது மனைவி ...என் பாட்டி பெயரை உமா என  வைத்தார. வியாபாரம் நன்றாக நடக்க , என்கொள்ளு  தாத்தா அவர் மகனுக்கு உமாபதி என தன் மனைவியின் பெயரை சேர்த்து வைத்தார் .தாத்தா பெயர் பேரனுக்கு என வம்ச வழி அந்த பெயர் இப்போது எனக்கு ...."

" நன்றாக இருக்கிறது உங்கள் பெயர் தோன்றிய கதை ..." ஆருத்ரா சிரித்தாள் .

--------------

" இந்த பொரியலுக்கு கடைசியாக கொஞ்சம் சோம்பு பொடி தூவினால் நன்றாக இருக்கும் ஆன்ட்டி ..." கமலாவிற்கு சொன்னபடி சட்டியில் வாழைக்காயை புரட்டியபடி சொன்னாள் . போரடிப்பதால் தான் ஒரு பதார்த்தம் இன்று செய்வதாக சமையலறையில் நின்றிருந்தாள் அவள் .

" சோம்பையே காணோமே .வாங்க மறந்துட்டேன் போலம்மா ...." கமலா மளிகை சாமான் டப்பாக்களை உருட்டிக் கொண்டிருக்க ...
" இந்த தெரு முனையில் ஒரு சூப்பர் மார்கெட் பார்த்தேன் .போய் வாங்கி வருகறேன் ..." ஆருத்ரா டக்கென பர்சுடன் வீட்டை விட்டு இறங்கி விட்டாள் .

" ஆருத்ரா நீ வேண்டாம்மா ...இருளப்பனை போகச் சொல்லலாம் ..." கமலா பின்னாலேயே வந்து கூப்பிட ,

" அவருக்கு சோம்பு பொடி தெரியுமா ...? நான் ஐந்து நிமிடத்தில் வந்துடுறேன் ஆன்ட்டி ..." காம்பவுண்ட் கேட்டை நெருங்கியவள் திகைத்தாள். கதவை மறைத்தபடி இருளப்பன் நின்றிருந்தார் .அவர்ருகில் வாலாட்டியபடி மணி .

" கதவை திறங்க தாத்தா .பக்கத்திலிருக்கிற கடைக்கு போய்விட்டு வந்து விடுகிறேன் ..."

கொஞ்சநேரம் யோசித்தபடி நின்ற அவர் " சரிம்மா கூட நம்ம மணியை கூட்டிட்டு போ .அநாவசியமாக யாரிடமும் பேசாமல் சீக்கிரம் வந்து விடு ..." நாயை துணைக்கு அனுப்பி வைத்தார் .

காவல் வீரன் போல் மணி பின்தொடர நடந்த போது மகாராணி போல் ஒரு கர்வம் உண்டானது ஆருத்ராவிறகு .வழியில் கடந்து போனவர்களில் ஓரிருவர் ஆருத்ராவிடம் நின்று பேச முயல மணி அவர்களை குலைத்து விரட்டியது .

வீட்டிற்கு வந்த இரண்டாம் நாள், பினபகுதியில் கட்டி போடப்பட்டிருந்த இந்த நாய் அவிழ்த்து விட்டதும் மேலே விழுந்து குதறுவது போல் இவளிடம் பாய்ந்து வந்த்து .

" மணி ...அங்கேயே நில்..." அதிகாரமாக ஒலித்தது உமாபதியின் குரல் . சுவிட்ச் போட்டாற் போல் தன் நாலு கால் பாய்ச்சலை நிறுத்தி அப்படியே நின்றது .சிலை போல் அசைவற்று நின்றது .அந்த அடி பணிதலை ஆச்சரியமாக பார்த்தாள் ஆருத்ரா .

" இவர் நம் நண்பர் மணி . நீ இவரிடம் மரியாதையாக நடந்து கொள்ளவேண்டும் .இவர்களை பாதுகாப்பாக கவனித்துக் கொள்ள வேண டும் .புரிகிறதா ...? "

மனிதர்களிடம் பேசுவது போல் பேசுகிறானே ...ஆருத்ரா கேலியாக பார்த்துக் கொண்டிருக்கும் போதே மணி தலையை ஆட்டியது .தன் முன்னங்காலை நீட்டியது .

" உன்னுடன் நட்பு கொள்ள அது தயாராம் ...பார் ஷேக் ஹேன்ட் கொடுக்கறது ...." என்ற உமாபதியை ஆச்சரியமாக பார்த்தாள் .

" ஒரு நாயக்கு நாம் பேசுவது புரியுமா ...? "

" நிச்சயம் .மனிதர்களை விட அதிகமாக புரியும் .ஆற்றிவு மனிதர்களை போல் இவற்றிற்கு குயுக்தி கிடையாது .நீ கை கொடு ..."

அன்று கை கொடுத்து நண்பர்களென சொல்லிக் கொண்டாலும் , ஆருத்ராவிற்கு என்னவோ அந்த அளவு மணியிடம் ஒட்டுதல் கிடையாது .பார்த்ததும் பயம்தான் முதலில் வரும் .ஆனால் மணி அவளை பார்த்ததும் வாலாட்ட ஆரம்பித்து விடும் .இதோ இப்போதும் சிறு பயத்துடனேயே மணி பின்தொடர முன் நடந்தாள் .

.மிகச்சிறிய கடைதான் அது .நான்கே ரேக்குகளில் சாமான்கள் ஒழுங்கில்லாமல் குவிந்து கிடந்தன .இதன் பெயர் சூப்பர் மார்க்கெட்டாம் .சென்னையின் நவ நாகரீக மால்கள் மனதில் வர , புன்னகைத்தபடி சோம்பு பொடியை தேடினாள் .

ஒரு மூலையில் கேட்பாரற்று கிடந்த்து அது .தூசு தட்டி அதனை எடுத்து மேனுபேக்சரிங் டேட் பார்க்க முயற்சித்தபடி இருந்த போது ...
" ருத்ரா ...எப்படி இருக்கீங்க ...? ," பக்கத்தில் குசுகுசுவென ஒரு குரல் . இங்கே வந்த்திலிருந்து ஆருதரா என உமாபதி , கமலாவால் அழைக்கப்பட்டு ,இப்போது திடுமென கேட்ட இந்த ருத்ரா ...ஆருத்ராவிற்கே அந்நியமாக தெரிந்த்து . திரும்பி அருகிலிருந்தவனை ஆராய்ந்து , யாரென இரண்டு நிமிடம் யோசித்து பின் ஆள் பிடிபட்டு ...
" நீங்கள் ...? " இன்னமும் அவன் பெயருக்கு திணறினாள் .

" நான் மனோகர் ...பஸ் ஸ்டான்டில் மீட் பண்ணினோமே ..." அவன் திரும்பி வாசலை பார்த்துக் கொண்டான் .

" ஆ...யெஸ் ..சாரி உங்க பெயர் மறந்துவிட்டது .எப்படி இருக்கிறீர்கள் ...? "

" நான் ...ஓ.கே .நீங்கள் ஏன் அங்கேயே தங்கிவிட்டீர்கள் ...? வேண்டாம் .அங்கிருந்து வெளியேறி விடுங்கள .அது உங்களுக்கு பாதுகாப்பான இடமில்லை ...."

ஆருத்ராவிற்கு புரியவில்லை ." எதை சொல்கிறீர்கள் ...? உமா வீட்டையா ...? "

" உமா வீடா ...அந்த அளவு நெருங்கி விட்டீர்களா இருவரும் ..."
" மனோகர் சரியாக நின்று சத்தமாக என் முகத்தை பார்த்து பேசுங்கள் .என்ன சொல்ல வருகிறீர்கள் ...? " அதட்டலாய் கேட்டாள் .
ஏனெனில் மனோகர் அப்படித்தான் யாருக்கோ பய்ந்தாற்போல் ரேக்கினுள் தலையை விட்டுக் கொண்டு பொருட்கள் தேடுவது போல் பேசிக் கொண்டிருந்தான் .

" ஷ் ...கத்தாதீர்கள் .அந்த நாய்க்கு தெரிந்த்தும் என் தொடைக் கறியை ஒரே கவ்வில் பிய்த்து எடுத்து விடும் .நீங்கள் முதல் வேலையாக அந்த வீட்டிலிருந்து வெளியே வாருங்கள் ..." என்றவனின் பேச்சு பாதியில் நின்றது .பயத்தால் கண்கள் அகன்றது .ஏனெனில் மணி மெல்ல கடை வாசல் வழியாக உள்ளே நுழைந்து கொண்டிருந்த்து .

" பஸ் ஸ்டாண்ட் ...வாங்க ....பார்க்கலாம் ..." துண்டு துண்டாய் பேசிவிட்டு கடையின் பின்வாசல் வழியாக ஓடிவிட்டான் .மணி உள்ளே வந்து ஆருத்ராவின் சுடிதாரை கவ்வி இழுத்தது .வா ...போகலாமென்பது போல .

--------------------

" இந்த வீட்டில் எதுவும் பயங்கரம் இருக்கிறதா உமா ...? " அவன் பிசைய பிசைய ரசத்தை ஊற்றியபடி கேட்டாள் ஆருத்ரா .
" ரகசியமா ...? இங்கேயா ...? ஏன் அப்படி கேட்கிறாய் ...? " உமாபதி ஆருத்ராவின் தட்டில் உருளைக் கிழங்கு வைத்தான் .

" புதையல் ரகசியம் , நகைகளை பாதுகாக்கும் பூதம் , பழி வாங்க துடிக்கும் ஆவி ...இது போல் எதுவேனும் இங்கே இருக்கிறதா ...? "
" ம்ஹூம் சுத்தமாக புரியவில்லை .கொஞ்சம் தெளிவாக பேசு ஆருத்ரா ...." தனது கிண்டலுக்கான ஒத்திசைவு அவனிடம் இல்லாததை உணர்ந்தவள் விளையாட்டுத்தனத்தை விட்டாள் .அன்று நடந்த்தை கூறினாள் .

" அந்த மனோகர் என் நண்பனாமா ...? அப்படி உன்னிடம் சொன்னானா ...? ராஸ்கல் ..." என்றவன் தொடர்ந்து ஒரு கெட்ட வார்த்தையை உதிர்க்க ,ஆருதரா அதிர்ந்தாள் .

" உமா ...எ...என்ன ஆயிற்று ...? "

ஒரே நிமிடத்தில் தன் முகத்தை சரி செய்து கொண்டான் உமாபதி .
" அந்த மனோகர் ஒரு ரோக் ஆருத்ரா .என்னிடம் கொஞ்சநாள் வேலையில் இருந்தான். கணக்குகளில் தில்லுமுல்லு செய்து நிறைய பணம் அடித்துவிட்டான் .அவன் அப்பாவிற்காக அவனை மன்னித்து

போலீஸ் கம்ப்ளெண்ட் கொடுக்காமல் வேலை மட்டும் நீக்கி விட்டு விட்டேன் .இப்போது என்னிடமே மோதி பார்க்கிறான் ..."
" ஓ...ஆனால் முதலில் நான் இங்கே வந்த போது அவர்தான் என்னை இங்கே கொண்டு வந்து விட்டார் ...."

" அந்த பொறுக்கிக்கு என்ன மரியாதை ....? சும்மா அவன் ...இவன்னே சொல்லு ..." கத்தரியாய் விழுந்த அவன் வார்த்தைகளுக்கு விழித்தாள் . அவளது திகைப்பை பார்க்கவும் அவன் சட்டென தனது பாவனையை மாற்றிக் கொண்டான் .

" உனக்கு பொல்லாதது ஒன்று நான் சொல்வேனா ஆரா ....? அந்த மனோகர் ஒரு பொறுக்கி .இனி வெளியில் எங்கு பார்த்தாலும் அவனிடம் பேசாமல் வந்து விட வேண்டும் .செய்வாயா ...? " பவ்யமாய் கேட்டு அழகாய் புன்னகைத்தான் .

பளீரிடும் அவன் பற்களை பார்த்தபடி தன்னால் தலையசைத்தாள் ஆருத்ரா .

## 6

" இது வளையல்கள் செக்ஷன் ..." உமாபதி காட்டிய பக்கம் வரிசை வரிசையாக அடுக்கப்பட்டிருந்த வித விதமான வளையல்கள் கண்ணை பறித்தன .

" சிங்கப்பூர் வளையல் , ரேடியம் கோட்டடு , குந்தன் வளையல் , ஆன்ட்டிக் வளையல் , எனாமல் , ஒயிட் கோல்டு வளையல் , செட்டிநாடு வளையல் ...." உமாபதி அடுக்க ஆரம்பிக்க ...

" ஓ ...உமா , போதும் ...போதும் .இத்தனை வெரைட்டியா ...? ஹப்பா கேட்கவே பிரமிப்பாக இருக்கிறது .போட்டு பார்க்கனும் போல இருக்கு ...." ஆருத்ரா ஆவலாதிக்க ...

" எது வேணும்னு சொல்லு .ஷோகேஸ்ல இருந்து எடுத்து தர சொல்றேன் .போட்டு பாரு ..."

" பொண்ணுங்க கிட்ட நகையை எது வேணும்னு கேட்க கூடாதுப்பா . அவுங்க கடை பூராவும் கை நீட்டுவாங்க ...அப்புறம் உங்க சேல்ஸ் என்ன ஆகிறது ...? "

" சரி அப்போ இங்கே வேண்டாம் .நீ பேக்டரிக்கு வா .அங்கே வேண்டியதை எடுத்துக்கொள் ...." விளையாட்டுத்தனம் இல்லை அவன் குரலில் .ஆருத்ராதான் திணறினாள் .

" ம் ...இந்த கவரிங் நகையை கொடுத்து என்னை ஏமாற்றலாமென நினைத்தீர்களா ...? நானெல்லாம் தங்கமதான் போடுவேனாக்கும்

.கவரிங் எனக்கு அலர்ஜி ...." பேசியபடி அவனுடன் அந்த மரப்படிகளில் ஏறினாள் .

இரண்டு தளங்களாக அமைந்திருந்த அந்த கோல்டு கவரிங் கடை தனி தனி செக்சன்களாக  அழகாக அமைக்கப்பட்ட பெரிய தங்க நகை ஷோருமை ஒத்திருந்த்து .மாடியில் உமாபதிக்கான தனி அறை இருந்த்து .அதனுள் அவளை அழைத்து சென்றான் .

" நிஜமாகவா ஆரா ...? " கொஞ்சம் கவலையுடன் கேட்டான் .

" என்னது ...? " புரியாமல் கேட்டாள் .

" உனக்கு கவரிங் அலர்ஜியா ...? ஆனால் நம் கடை கவரிங்கில் அது போல் அலர்ஜி வராதே ..." வேகமாக அவளை நெருங்கி அவள் கழுத்தை , காதை ஆராய தொடங்கினான் .

அவள் கழுத்தை சுற்றியிருந்த ஷாலை விலக்கிவிட்டு முன் கழுத்தை ஆராய்ந்தவன் , பின்னலை முன்னால் எடுத்து போட்டுவிட்டு பின் கழுத்தையும் ஆராய்ந்தான் .

" ஒன்றும் தெரியவில்லையே ..." கழுத்தையும் தொடர்ந்து காதுகளையும் அவன் கை வருடி ஆராய , உடல் ரத்தம் முழுவதும் முகத்திற்கு பாய , பேச்சு வராமல் தடுமாறினாள் ஆருத்ரா .

" இ..இல்லை ...வே ...வேண்டாம் ....த...தள்ளுங்கள் ...." ஏதேதோ வார்த்தைகள் திக்கி திக்கி வர , அவன் விழித்தான் .பின் கழுத்தை வருடியபடி முன்னால் குனிந்து அவள் முகம் பார்த்தான் .

" அலர்ஜி உன் முகத்திலா ஆரா ...? அங்கேதான் சிவந்திருக்கிறது ...."

" எ...எங்கே ...? "

" இங்கே ..." வலது கை நான்கு விரல்களை நீட்டி கன்னத்தை தொட்டான் .

" உன் கன்னம் ஏன் இவ்வளவு சூடாக இருக்கிறது ...இதுவும் நம்கடை நகை அலர்ஜியாலா ...ம் ...? "

" இது உன்னால்தான்டா ..." உதட்டை மடித்து கடித்து வார்த்தைகளை உள்ளே விழுங்கிக் கொண்டாள் .

" இப்படி இருக்கும் போது அழகாக இருக்கிறாய் ஆரா .சொல்லு கவரிங் அலர்ஜி இல்லைதானே உனக்கு ." இரு கைகளாலும் இரு கன்னங்களையும் பற்றியபடி கண்களுக்குள் பார்த்தபடி கேட்டான் .

" ம்ஹூம் ..." ஆருத்ராவின் விழிகள் அவன் கண்களை தயக்கமின்றி சந்தித்தன . அந்த கண்களின் சேதியில்  மயங்கி சொருகின .

அவள் நெற்றி முடியை ஒற்றை விரலால் வருடி ஒதுக்கியவன் " ஆரா ...."

என்றான் .

" உமா ...." இதழ் பிரிந்து வந்த வார்த்தையில் கிறங்குவது இப்போது அவன் முறையாயிற்று .

" கவரிங் வேண்டாமா ...நான் தங்கத்தில் நகை வாங்கி தரவா ...? "

" தங்கமா ...? அதெப்படி உங்களிடம் ....நான் ....? " சட்டென அவள் இதழ்கள் மேல் தன் ஆட்காட்டி விரலை வைத்து அழுத்தினான் .

" திரும்ப அப்படி பேசாதே ..."

" எப்படி ...? "

" நீ வேறு ...நான் வேறு ...என்று ஏதாவது சொல்லாதே .என்னுடையது எல்லாமே உன் உரிமைதான் ...." உணர்வு பெருக்குடன் சொன்னான் . அவள் தோள்களை பற்றி அவளை ஒரு சுற்று சுற்றியவன் " இங்கே உட்கார் ..." என அமர வைத்தான் .

" இப்போது உத்தரவு நீதான் போட வேண்டும் .நான் கேட்க வேண்டும் ..." அடிமை போல் கை கட்டிக் கொண்டான் .

புரியாமல் சுற்றி பார்த்த போதுதான் அவன் தன்னை முதலாளி நாற்காலியில் ...அவனது இருக்கையில் அமர்த்தியிருப்பதை உணர்ந்தாள் .அவசரமாக எழப்போனவளின் தோளகளை அழுத்தி அமர்த்தினான் .

" உன்னை இங்கேதான் ...இப்படித்தான் வைத்திருக்க விரும்புகிறேன் ஆரா ..." துடித்துக் கொண்டிருக்கும் அவள் இமைகளை பார்த்தபடி கூறினான் .

சட்டென விழி மூடிக்கொண்டாள் ஆருத்ரா .உணர்ச்சி வசப்பட்டதில் அவள் இமையோரம் சிறு நீர்த்துளி கூட எட்டிப் பார்த்தது .

" இல்லை ...இது ...சரியா ....எ..எனக்கு ..."

" வேண்டாம் ஆரா ...நாம் ரொம்ப யோசிக்க வேண்டாம் .இது சரிதான் .சரியாகத்தான் வரும் ..." கைகளை பற்றி அழுத்தினான் . அவளெதிரில் மேசையில் சாய்ந்தாற் போல் அமர்ந்து அவளை பார்வையால் விழுங்கியபடி இருக்க , எழுந்து நகர முடியாமலும் ,அவன் பார்வையை சந்திக்க முடியாமலும் தவித்து போனாள் ஆருத்ரா .

அவளை காப்பது போல் அறைக்கதவு லேசாக தட்டப்பட, எழுந்து கொண்டவன் " யெஸ் ...வாங்க ..." என்றான் .

" ஹாய் பதி , ஹவ் ஆர் யு ...இன்று காலைதான் ஊரிலிருந்து வந்தேன் .உடனே உங்களை பார்க்க வந்துவிட்டேன் ..." பேசியபடி கதவை திறந்து உள்ளே வந்தாள் அந்த பெண் .

உள்ளே முதலாளி இருக்கையில் அமர்ந்திருந்த ஆருத்ராவையும் , அருகில் நின்று கொண்டிருந்த உமாபதியையும் திடுக்கிடலோடு பார்த்தவள் குழப்பமாக நின்றாள் .

" ஹாய் இந்திரா ...வா .போன காரியம் நல்லபடியாக முடிந்த்தா ...? " உமாபதி அவளை புன்னகையோடு வரவேற்க ,அவள் பார்வை ஆருத்ரா மேல் இருந்த்து .

அப்போதுதான் தான் அமர்ந்திருந்த இடத்தை உணர்ந்த ஆருத்ரா அவசரமாக எழுந்தாள் ." நீங்க உட்காருங்க ...." உமாபதியிடம் கூறிவிட்டு தள்ளி நின்றாள் .

அவளை ஒரு விதமாக பார்த்தவன் , ஏதோ சொல்ல நினைத்து பின் மாறி தானே இருக்கையில் அமர்ந்தான் ." இங்கே உட்கார் ..." பக்கவாட்டு நாற்காலியை அவளிக்கு காட்டினான் .

" நீயும் உட்கார் இந்திரா .சொல்லு என்ன விசயம் ...? "

" இது யார் பதி ...? " ஆருத்ராவை உற்று பார்த்தபடி அமர்ந்தாள் இந்திரா .

" இது என் ப்ரெண்ட் .சென்னையில் இருந்து வந்திருக்கிறார்கள் .இப்போது என் வீட்டில்தான் தங்கியிருக்கிறார்கள் .நீ சொல்லு ..."
" ஹலோ நான் இந்திரா .உங்கள் பெயர் ....? " என இந்திரா இவளிடம் கை நீட்டிய பிறகுதான் இருவரையும் அறிமுகம் செய்விக்கும் எண்ணம் அவனுக்கில்லை என ஆருத்ரா உணர்ந்தாள்.

இந்திராவின் நீட்டிய கைகளுக்கு உமாபதியின் முகம் பார்த்தாள் .உதட்டை பிதுக்கினாள் இந்திரா .

" அட ...என்ன ப்ரெண்ஷிப்புப்பா உங்களுக்கிடையே ....சின்ன அறிமுகத்திற்கு கூட உங்கள் முகம் பார்க்கிறார்களே ..." இந்திரா கிண்டல் செய்தபடி எழுந்து தானாக ஆருத்ராவின் கையை இழுத்து பற்றி குலுக்கினாள் .இதன் பிறகும் பேசாமலிருக்க முடியாமல் ...
" நான் ஆருத்ரா ...." புன்னகைத்தாள் .

" வாவ் ...என்ன அழகான பெயர் .நீங்கள் இருவரும் ஒன்றாக படித்தீர்களா ...? "

உமாபதி சொல்லட்டுமென ஆருத்ரா மௌனமாக இருக்க , அவன் ...
" அப்புறம் ...மினிஸ்டரை பார்த்து பேசியாச்சா இந்திரா ...? " என வேறு கேட்டான் .

" நான் போய் முடியாத காரியம் இருக்கிறதா பதி ...? வெல் டன் ..." கட்டை விரலை உயர்த்தி காண்பித்தாள் .

" பைன் ...அப்போது நமது வேலையை ஸ்பீட் பண்ணலாமில்லையா ....? "

" ஷ்யூர் .வாருங்கள் சைட்டுக்கு போகலாம் ...." உடனேயே எழுந்து கொண்டாள் .

" நீ போ. நான் ஆருத்ராவை வீட்டில் விட்டுட்டு வர்றேன் ...."

" ம் ....கடைசி வரை உங்கள் ப்ரெண்ட்ஷிப் சஸ்பென்ஸா ....? ஆருத்ரா பார்த்து பழகுங்க .ரொம்ப டேன்ஞரான பையன் ...." இந்திரா உண்மை சொல்கிறாளா ....கிண்டலா ...ஆருத்ரா விழித்துக் கொண்டு நிற்க ...உமாபதி எழுந்து அவள் கையை பற்றிக் கொண்டான் .
" வா போகலாம் ..." அவன் முகம் முழுவதும் எரிச்சல் இருந்தது .இந்திராவிற்கு முன் அவன் வாசலுக்கு நடக்க ஆரம்பித்தான் .ஆருத்ராவை இழுத்துக் கொண்டே ....இந்திரா தோள்களை குலுக்கிக் கொண டு அவர்களை பின்தொடர்ந்தாள் .

வாசலில் நின்ற தனது காரில் ஏறிக் கொண்டு இவர்களை எட்டிபார்த்து " அரை மணியில் சைட்டில் உங்களை எதிர்பார்க்கவா ....? " என்றாள் .
" ஒரு மணி நேரமாகும் ...." காரை ரிவர்ஸ் பார்த்து எடுத்தபடி அவளுக்கு பதில் சொன்னான் உமாபதி ." சிவுக் " என அம்பு போல் பாய்ந்து போனது அவளது கார் .கோபமோ அல்லது அவள் கார் ஓட்டும் பாணியே அதுதானோ ....தெரியவில்லை .
" நீ போய் சாப்பிடும்மா .நான் வந்து விடுகிறேன் ...." ஆருத்ரா இறங்கியதும் உமாபதி காரை எடுத்துக் கொண்டு போய்விட்டான் . கொஞ்ச நேரம் முன்பு அவளை முதலாளி நாற்காலியில் அமர வைத்து அழகு பார்த்தவன் , இப்போது திடீரென எந்த விளக்கமுமின்றி இப்படி திடுமென உதறிப் போனது ...ஆருத்ராவிற்கு ஏதோ போல் இருந்தது . சாப்பிட அழைத்த கமலாவிடம் வேண்டாமென சொல்லி விட்டு ரூமுக்குள் நுழைந்து கொண டாள் .ஒரு மணி நேரம் ஆகுமென்றுதானே சொன்னான். ஆனால் இப்படி ஏன் உடனே ஓடினான் ....இருப்பு கொள்ளாமல் அறையினுள் அங்குமங்கும் நடந்தாள் ....உட்கார்ந்தாள் ....எழுந்தாள் ...நின்றாள் ....நடந்தாள் .

ஒரு மணி நேரத்தில் வந்து விடுவானென நினைக்க மதியம் போய் மாலை போய் இரவு வந்தது .ஆனால் உமாபதி வரவில்லை .அறைக்குள் நடந்து சலித்து ...வீட்டினுள் நடந்து ...வெறுத்து , நிலா முற்றத்தில் வந்து நின்றாள் .

மலர்ந்து கிடக்கும் மலர் கூட்டங்களும் , காய்ந்து கொண்டிருக்கும் அரை வட்ட நிலவும் அவள் மனச் சூட்டை ஆத்தவில்லை .சை ...ஏன் இன்று

இவ்வளவு வெப்பமாக இருக்கிறது ....? ஷாலால் விசிறிக் கொண டாள் .கழுத்தை துடைத்துக் கொண்டாள் .
" வியர்த்தால் உள்ளே ஏ.சியில் இருக்கலாமே ...? " பின்னால் கேட ட குரலுக்கு திரும்பாமல் நிலவை பார்த்தாள் .
" ஆருத்ரா ....? "
செவ்வரளி செடியின் பூக்களை எண்ணினாள் .
" ஆரா ...? "
கல்வாழையின் வாடி துவண்டு தொங்கிய பூவை நிமிர்த்த முயன்றாள் .
" அது வாடிவிட்டது .திரும்ப வராது ...." உமாபதியின் குரல் இப்போது அருகாமையில் கேட்க , தன்னையறியாமல் சிலிர்த்த உடலை அடக்கியபடி நகர போனாள் .அவள் கையை அழுத்தமாக பற்றினான் .
" வா சாப்பிடலாம் ...."
" எனக்கு பசியில்லை ..."
" காலையில் சாப்பிட்டது .பசிக்காதா ....? "
" என் பசி எனக்கு தெரியும் .நீங்கள் சொல்ல வேண்டாம் "
" நான் என் பசியை சொன்னேன்மா ..."
ஆருத்ராவின் வீம்பு ஓடிப்போனது .
" நீங்களும் சாப்பிடவில்லையா ...? "
" நானும் ...உன்னைப் போலவே ....சாப்பிடவில்லை ...." உதட்டை பிதுக்கினான் .
" மணி இப்போது பத்து ஆகிறது .காலையில் ஒன்பது மணிக்கு சாப்பிட்டது .இத்தனை மணி நேரம் சாப்பிடாமல் இருந்தால் என்ன ஆவது ...? " அதட்டியபடி பரிமாறிய அவளிடம் தாய்மை இருந்த்து அவள் சொன்ன அதே வார்த்தைகளை அப்படியே அட்சரம் பிசகாமல் திருப்பி சொல்லியபடி பரிமாறிய அவன் குரலில் தந்தைமை இருந்த்து . இருவரும் எப்போதும் போல் ஒருவர் தட்டை அடுத்தவர் கவனித்து ஒருவருக்கொருவர் பரிமாறியபடி சாப்பிட்டு முடித்தனர் .

சாப்பிட்டு முடிந்த்தும் ஹாலில் அமர்ந்தனர் .  ஓடிக்கொண்டிருந்த டிவியில் மனம் பதியவில்லை ஆருத்ராவிற்கு .எதிரேயிருந்து அவளையே பார்த்தபடி அமர்ந்திருந்த உமாபதியின் பார்வை அவளை இன்பமாய் இம்சித்துக் கொண்டிருந்த்து .
" டிவி பார்த்து முடித்து விட்டாய்தானே ஆரா ...? " உமாபதியின் கேளவியில் விழித்தாள் .

ரிமோட்டால் டிவியை ஆப் செய்தவன் அவளை நோக்கி எழுந்து வந்தான் . சோபாவில் அவளுக்கு இருபுறமும் தன் கைகளை ஊன்றி அவள் முகத்திற்கு நேராக குனிந்தான் .

" இன்னும் நாம் எதற்காக காத்திருக்கிறோம் ஆரா ...? " கொஞ்சலாய் ஒலித்தது அவன் குரல் .

வெடித்து விடுமோவென்ற சந்தேகத்தில் தன் இதயத்தை அழுந்த பற்றிக் கொண்டாள் ஆருத்ரா .

7

" என்ன ...எதற்கு ...யார் ...காத்திருக்கிறார்கள் ...? " மிக அருகே வந்து புன்னகைத்த அவன் இதழ்களை எதிர் கொள்ளும் திராணியின்றி வார்த்தைகளை கடித்து துப்பினாள் .

" வேறு யாருமில்லை .நாம்தான் ...நமக்கிடையே இருக்கும் அந்த மெல்லிய கோட்டை எப்போது தாண்ட போகிறோம் ...? "

அவன் முகம் இன்னும் அருகே நெருங்கியது .இதழ்கள் குவிய வேறு செய்த்து .இதோ ....இப்போது ...இந்த கண்ணை சிமிட்டினாளானால் ...அந்த துளி நேரத்திற்குள் அவன் இதழ் அவள் கன்னத்தில் பதிந்து விடலாம் .விழிகளை அகட்டி விழித்துக் கொண்டாள் .

" எ ...எனக்கு பு ..புரியவில்லை ...? " அவசரமாக சொன்னாள் .

" என்ன புரியவில்லையா ....? " இன்னமும் அவன் முகம் நெருங்க ....

" இ...இல்லை .ஒன்றும் புரியவில்லை .உங்கள் பேச்சே புரியவில்லை ...." ஆருத்ரா கண்களை இறுக மூடிக்கொண்டாள் .

" ஓ ..." சட்டென நிமிர்ந்து எழுந்தான் .உட்கார்ந்த நிலையிலேயே அண்ணாந்து பார்த்த ஆருத்ராவின் கண்களுக்கு அவன் விஸ்வரூப சிவனாக தோற்றமளித்தான் .

அகன்ற தன் கரங்களை அவளுக்கு நீட்டி , அவள் கைகளை அழுந்த பற்றி தூக்கி நிறுத்தினான் .

" புரிய வைக்காத்து என் தப்புதான் .நாளை முடித்து விடுகிறேன் . ..." விசம்ம் வழிந்த்து அவன் குரலில் .

" என்ன ...? " விழித்தவளின் கன்னத்தில் ஒற்றை விரலால் தட்டினான்.

" இப்போது போய் தூங்கு .நாளை பிச்சாவரம் போகலாம் ..." அவன் அறையை நோக்கி நடக்க தொடங்கினான் .

" பிச்சாவரமா ...? அப்படி என்றால் ...? "

" கடல் மேல் காடு பார்த்திருக்கிறாயே ...? " நின்று கேட்டான் .

" ம்ஹூம் ..."

" நாளை பார்ப்பாய் .குட்நைட் ..." அழகாய் புன்னகைத்து விட்டு போனான் .

ம்க்கும் ...சும்மாவே இரவு முழுவதும் இவன் நினைப்பில் தூக்கம் வருவதில்லை .இதில் இவன் ஏதேதோ சஸ்பென்ஸ் வைத்து விட்டு எளிதாக தூங்க சொல்கிறானே ...எப்படி வரும் தூக்கம் ...? இதில் அந்த சிரிப்பு வேறு ...

அலுத்தபடி படுத்தவளுக்கு அவள் சந்தேகப்படி தூக்கம் வரவில்லை .எதையோ முடிக்க போவதாக சொன்னானே ...அது என்னவாக இருக்கும் ...இப்படி ஓடிய சிந்தனைக்கு கிடைத்த பதில் மிக வில்லங்கமாக ....அவளுக்கு கூச்சம் தருவதாக இருக்க , அரண்டு போனவள் கண்ணோடு , நினைவையும் பொத்தி வைத்துக் கொண்டு தூங்க முயன்றாள் .ஆனால் அவள் நினைவுகள் கட்டுக்களை தகர்த்து தான் வாழ்ந்து கொண டுதான் இருந்தன .

--------------------

கடல் மேல் காடு ...எவ்வளவு சாதாரணமாக இதை நினைத்து விட்டேன் ...உமாபதி அவள் தொட்டு உலுக்கவும்தான் நினைவு வந்து வேகமாக மூச்சை இழுத்து விட்டாள்.

கடல் மேல் காடென்றால் ...ஏதாவது தீவு போல் ...இல்லை மண் திட்டு போலிருந்து அதன் மேல் மரங்களடர்ந்து காடு போல் ...இப்படித்தான் எண்ணியிருந்தாள் .ஆனால் இந்த காடு ....

கடல் நீருக்குள்ளேயே காடு முளைத்திருந்த்து .மரங்கள் வளர்ந்திருந்த்து .கடலின் கரையோரங்களில் வரிசையாக அடர்த்தியாக அந்த மரங்கள் அடர்ந்து நெடுக வளர்ந்திருந்தன .ஏக்கர் கணக்கில் நீளம் இருக்கும் போல ...இப்படி ஒரு காடுகளா ...?

" இவை மாங்குரோவ் பாரஸ்ட் .தமிழில் அலையாத்தி காடுகள் .உலகிலேயே இரண்டாவது பெரிய மாங்குரோவ் காடுகள் இவை ."

" இந்த மரங்கள் எப்படி தண்ணீருக்குள் ...அதுவும் கடல் நீருக்குள் வளர்கின்றன ...? "

" இவை புன்னை மரங்கள் .இந்த நீருக்கடியில சதுப்பு நிலம் உள்ளது .இவை அந்த நிலத்தில் வளர்கின்றன .இதை சதுப்பு நிலக்காடுகள் என்றும் சொல்வார்கள் ...."

" புன்னை மரங்களா....? நான் முருங்கை மரமென்று நினைத்தேன்....ப்ச்

...சிரிக்காதீர்கள் உமா .இந்த மரக்காய்களை பாருங்களேன் முருங்கைக்காய் மாதிரிதானே நீளம் நீளமாக தொங்குகறது ...."

" அந்த காய்கள் எதற்கும் உதவாது .அவை அப்படியே முற்றி தண்ணீரில் விழுந்து அந்த காய்கள் வெடித்து மீண்டும் மரங்கள் முளைக்கன்றன .இப்படித்தான் இந்த காடுகள் இயற்கையாகவே தங்களை வளர்த்து கொள்கின்றன.இவை உப்பங்கழி காடுகள் .சரி ....வா "

" எங்கே ...? "

" இந்த காடுகளுக்குள் போய் பார்க்க வேண்டாமா ...? "

" வேண்டும் ...வேண்டும் .அப்படி போகலாமா ...? "

" ம் ...அப்படி போகவேண்டும் ..." அவன் காட்டிய இடத்தில் இயந்திர படகுகள் இருந்தன .பயணிகள் அதில் ஏறிக் கொண்டிருந்தனர் .
" ஹை ...நாமும் போகலாம் ..." வேகமாக முன்னே ஓடினாள் .போய் வரிசையில் நின்றவளை கையை பிடித்து இழுத்தான் .

" அங்கே வேண்டாம் ஆரா .இந்தப் பக்கம் ...." அவன் காட்டிய இடத்தில் ஒரு படகு நின்றது .

" வா ..." அவள் கை பிடித்து ஏற்றி விட்டு தானும் ஏறினான் .படகு ஆடிய ஆட்டத்திறகு உமாபதியின் இடுப்பில் கை கோர்த்துக் கொண்டாள் .
" ஒன்றுமில்லைடா ...அப்படியே உட்கார் ..." அவளை அமர வைத்தான் .
" ஏன் உமா இந்த படகு பயணத்தை விட அந்த போட் சேப்டி இல்லை ...? " ஆடிய படகில் தடுமாறியபடி கேட்டாள் .

" இரண்டுக்கும் வித்தியாசம் நான்போகும் போது சொல்கிறேன். .நானிருக்கிறேனே ஆரா ...பிறகும் பயமா ...? "அவளருகே நெருங்கி அமர்ந்து கொண்டு ஆழ்ந்த குரலில் அவன் கேட்க ,ஆருத்ராவின் பயம் ஆவியாகிப் போனது .

படகோட்டி படகை தள்ள அலையாத்தி காடுகளுக்குள் அவர்கள் பயணம் ஆரம்பமானது .அடர்ந்த மரக்கூட்டங்களுக்கிடையே ஓடுக்கமான ஓடைகளுக்குள் பயணம் இருந்த்து . முதலில் ஒரு சிறு வளைவை தாண்டியதுமே பின்புறம் கரை மறைந்து விட அடர்ந்த காட்டுக்குள் நதியில் பயணிக்கும் உணர்வை தந்த்து .காட்டு மரங்கள் படகை உரசியபடி வந்த்து புதுமை .

இள நீலத்தில் நீரும் , அடர் பச்சையில் சூழ்ந்திருந்த மரங்களும் , பஞ்சு வெண்மையில் வானும் ,மரங்களின் மீது வந்து அமரும் ...பின் பறக்கும் வித விதமான பறவைகளின் கூச்சலுமாக வேறு ஏதோ ஓர் உலகத்தினுள் நுழைந்து விட்ட பாவனையை ஆருத்ராவிற்கு உண்டாக்கியது .

மிக குறுகிய வழி ஒன்றுக்குள் வழியில் அடர்ந்து கிடந்த கொடிகளை விலக்கிக் கொண்டு படகோட்டி தோணியை செலுத்திய போது , மயிர் கூச்செறியும் இனிய அனுபவமாய் அது இருந்த்து .உமாபதியின் முகம் பார்க்க , அவன் இப்போது புரிகறதா ...எனப் பார்வையில் கேட்டான் . ஆம் .புரிந்த்து , பத்து பேர் வரை ஏற முடியும் அந்த பெரிய எந்திர படகில் இந்த நுண்மையான அனுபவம் கிடைப்பதேது ...? சிறு சிறு கால்வாய் வழிகளில் வளைந்து நெளிந்து ஓடத் தொடங்கியது அவர்கள் படகு .உள்ளே போக ...போக நிறைய கால்வாய் வழிகள் பகுதி பகுதியாக பிரிந்து தெரிய , அது ஒரு மாதிரி அமானுஷ்யத்தை அந்த இடத்திற்கு கொடுத்தது .

கொஞ்சம் பயத்துடன் உமாபதியை ஒட்டி அமர்ந்து கொண்டாள் .

"இந்த பகுதிக்கு பழகாத புதிய ஆட்கள் வந்தால் , நிச்சயம் இங்கே வழி தவறிவிடுவார்கள் ஆரா ..." உமாபதி தகவல் சொன்னான் .

" இந்த இடத்தில் ஆழம் எவ்வளவு இருக்கும் உமா ...? "

" ரொம்ப அதிக ஆழமிருக்காது ஆரா ...ஓரளவு நீச்சல் தெரிந்தாலே தப்பித்து விடலாம் .வர்றியா குதித்து நீந்தலாமா ...? " நீந்த கூப்பிட்டதை படகோட்டி காதில் விழாமல் அவள் தோளோடு ஒட்டி அமர்ந்தபடி கேட்டான் .

" ஐயே ...சீ ...இந்த தண்ணீரிலா ...? " அழுக்காய் தென்பட்ட அந்த உப்பங்கழி நீருக்கு முகம் சுளித்தாள் .

" இது அழுக்கு இல்லைடா .இந்த மரங்களின் விதை , இலை எல்லாம் உதிர்ந்துதான் இந்த தண்ணீர் இப்படி தெரிகிறது ." விளக்கியவனின் பார்வை அவள் முகத்திலேயே இருந்த்து .அதை உணர்ந்தும் உணராத்து போல் நீருக்குள் நீளக்கால்களில் நின்று மீன் தேடிக்கொண்டிருந்த கொக்குகளை வேடிக்கை பார்த்தாள் ஆருதரா .

" உனக்கு என்னிடம் கேட்க  ஒன்றுமில்லையா ஆரா ....? " அவன் மீசை முடிகள் அவள் தோளில் உராய்ந்தன .

எதை சொல்கிறான் ....? இவன் ஏன் எப்போதும் ஒரு மாதிரி புதிராகவே பேசி தொலைகிறான் ...மனதிற்குள் அலுத்தபடி " ம்ஹூம் ...." தலையாட்டி மறுத்தாள் .

" இந்திராவை பற்றி கூட ஒன்றும் தெரிய வேண்டாமா ...? "

வேணும் ...வேணும் என ஆர்ப்பரித்த மனதை அடக்கியபடி " சொல்லவேண்டுமென்றால் நீங்களே சொல்வீர்களென நினைத்தேன் ...." என்றாள் .

மிக திருப்தி அவன் முகத்தில் தெரிந்த்து . " நன்றி ஆரா .என்னை புரிந்து கொண்டதற்கு . உன்னுடைய நியாய தேவைகளை நான் எப்போதும் மறுப்பதில்லை .இதனை நீ உணர்ந்து கொண்டாலே போதும் ...." ஆருத்ராவின் அருகே இன்னமும் நெருங்கி மரங்களின் மேல் குவிந்து கிடக்கும் பறவை கூட்டங்களை காட்டுவதான பாவனையில் அமர்ந்து கொண்டு " இந்திரா இந்த ஊர் பெரிய மனிதர் ...மகள் .அவருக்கும் என்னைப் போல் சில தொழில்கள் உண்டு. கவரிங் பிஸினஸ்ஸும் செய்து வருகிறார் .தொழில் ரீதியாக எங்கள் இருவருக்குள்ளும் புரிதல் உண்டு . அதை வைத்து இந்திராவின் அப்பா எனக்கு அவளை மணம் முடிக்க கேட்டார் ...."

அதிர்ந்த ஆருத்ராவின் உடலை உணர்ந்தவன் அவள் தோள்களை சுற்றி தனது கையை போட்டு அணைத்து தோள்களை வருடினான் .
" இந்திரா கேட்டரிங், ஹோட்டல் மேனேஜ்மென்ட் ப டித்தவள் .அவள் படித்த படிப்பிற்கு ஏற்றாற் போல் அப்பாவின்சிறிய ஹோட்டலை கவனித்து வந்தாள் .தொழிலில் மிகுந்த ஈடுபாடுடையவள் .அவளது தொழில் ஆர்வம் என்னையும் இந்த திருமணத்திற்கு தலையசைக்க வைத்தது ...."

ஆருத்ராவின உடலில் இப்போது அதிகப்படி அதிர்வு .உமாபதியின் கைகள் இப்போது இன்னமும் முன்னேறி அவள் கன்னங்களை வருடின .மென்மையாக ...ஆறுதலாக .

" ஏனென்றால் நான் அப்போது ஒரு புது தொழிலுக்கு ஆயத்தமாகி கொண்டிருந்தேன் .சிதம்பரம் நிறைய சுற்றுலா பயணிகள் வரும் இடம் .அதனால் அவர்கள் தங்குவதற்கு ஒரு உயர்தர லாட்ஜ் ...ஐந்து நட்சத்திர வசதிகளோடு ஆரம்பிக்கும் எண்ணத்தில் இருந்தேன் . எனது சிந்தனைக்கு ஏற்ற மனைவி அமைவது நல்லதுதானே என்ற தொழில் காரணத்திற்காக மட்டும் இந்திராவை திருமணம் செய்ய நான் சம்மதித்தேன் . "

" திருமணத்தை முடிவு செய்துவிட்டீர்களா ...? " அந்த வார்த்தைகள் காதில் கேட்ட பிறகே அதனை தானே கேட்டதை உணர்ந்தாள் ஆருத்ரா .

" ஷ் ...ஆரா ..." உதட்டில் விரல் வைத்து கண்ணால் தோணி ஓட்டுபவரை காட்டி அவளது உயர்ந்து விட்ட குரலை அடக்கினான் .
" நீ பயப்படும்படி ஒன்றும் நடந்து விடவில்லையடா .ரிலாக்ஸ் ...." அவள் கையை வருடினான் .

உனது திருமண நிச்சயத்தில் எனக்கென்ன பயம் வந்துவிட போகிறது ,

அலட்சியமாக நினைத்துக் கொண்டாலும் , அவனது சமாதானத்திற்கு பிறகு நிஜமாக ரிலாக்ஸாகி கொண்டாள் ஆருத்ரா .

நீரில் துடுப்பு போடும் சத்தம் துல்லியமாக கேட்க , மரங்களில் அமர்ந்திருந்த பறவைகள் ,திடுமென சடசடவென ஒன்று போல் சிறகடித்து பறந்தன.

" உண்மையான நேசமற்ற பந்தங்கள் உறவுகளாக மாறுவதில்லை ஆரா ." ஆருத்ராவின் இதய மைய நரம்பொன்று இதமாக மீட்டப்பட்டது .
" எனது நோக்கம் போல் , இந்திராவுடையதும் வியாபாரம் மட்டுமே . அதனால் எங்கள் திருமண பேச்சு பேசி வைத்த பத்து நாட்களில் தானாகவே கலைந்து போனது ...."

நீருக்குள் மீன் துழாவிக் கொண்டிருந்த நாரைக் கூட்டங்கள் மிக அழகாக தெரிந்தன ஆருத்ராவிற்கு .நிமிர்ந்து அவனை பார்த்தாள் .வேறொன்றுமில்லையே என்ற அவள் விழிக் கேள்விக்கு இல்லையென இமை மூடி பதில் தந்தான் அவன் .

ஒருவரையொருவர் பார்த்தபடி இருந்த போது , திடுமென அவர்கள் படகு அதிர்ந்த்து .திடுக்கிட்டு திரும்பி பார்க்க அவர்கள் படகில் இன்னொரு படகு மோதியிருந்த்து .அதில் இந்திரா அமர்ந்திருந்தாள் .

## 8

" என்ன பண்ற இந்திரா ...? " உமாபதியின் குரல் கடுமையாக ஒலித்தது .

" ஏன் இவ்வளவு கோபம் பதி ...? சும்மா இந்த பக்கம் வந்தேன் .உங்களை பார்த்ததும் உங்கள் பின்னாலேயே வந்தேன் ...."
" எங்கள் பின்னால் ஏன் வருகிறாய் ...? "

" ஹேய் சும்மாப்பா .ஆருத்ரா சென்னை பொண்ணு . உங்களை போல் எனக்கும் அவுங்களுக்கு நம்ம ஊரை சுற்றிக் காட்டும் ஆசைதான் .நீங்க முன்னால் போங்க .நான் பின்னால் வர்றேன் ..."
உமாபதி " கணேஷா ...." படகோட்டியின் தோளை லேசாக தட்ட , அவன் தலையசைத்து படகை தள்ள தொடங்கினான் .அவர்கள் படகு சரசரவென அந்த ஒற்றையடி நீர்ப்பாதையில் போகத் தொடங்கியது .இந்திராவின் படகு அவர்களை பின்தொடர்ந்த்து .

ஒரு திருப்பத்தின் பின் நீரிலேயே சில கிளை வழிகள் பிரிய அதில் ஒன்றில் திரும்பியதும் , உமாபதி படகோட்டுபவனின் தோளில் இரண்டு

முறை தட்ட ,அவன் சட்டென படகை சுற்றி இன்னொரு பக்க வழியில் செலுத்தினான் .அந்த வழியில் சுரபுன்னை மரங்கள் மிக அடர்ந்திருந்தன .மரங்களின் இலைகளும் , நீண்ட காய்களும் தளர்ந்து படகிலுள்ளோரின் உடலை ஸ்பரிசத்தன .
சிறு பயத்துடன் தனக்குள் குறுகிய ஆருத்ராவை பாதுகாப்பாக தன் அணைப்புக்குள் இழுத்துக் கொண்ட உமாபதி " ம் ...." என படகோட்டுபவனை உந்தினான் .இப்போது படகு மேலும் ஒரு குறுகிய பாதைக்குள் நுழைந்த்து .அங்கே பாதையையும் அடைத்து மரங்கள் நிறைந்திருந்தன .திடுமென முகத்திற்கு நேராக வந்துவிட்ட மரங்களை பார்த்ததும் அலறினாள் ஆருத்ரா .

" ஆரா ...ஒன்றுமில்லை ...பயப்படாதே ..." அவள் வாயை தன் கையால் இறுக பொத்தியவன் " போ கணேஷா ..." உத்தரவிட்டான் .
படகோட்டி துடுப்பை உயர்த்தி அந்த மரங்களை குத்தி பிரித்தான் .உமாபதி கைகளால் தோணிக்கான பாதையை மரங்களை விலக்கி உண்டாக்கினான் .இப்போது அவர்கள் பயணத்திற்கான வழி கிடைத்து விட சுலபமாக உள் நுழைந்தனர் .பயணம் தொடர்ந்த்து .
பின்னால் திரும்பி பார்த்தாள் .இந்திராவின் படகை காணவில்லை ." இனி அவள் வர மாட்டாள் ..." உமாபதி புன்னகைத்தான் .

ஏதோ ஒரு திருப்தி கிடைத்தாலும் , த்ரில்லான இந்த ஓடை பயணம் திதும் திதுமென ஆருத்ராவின் மனதை அதிர வைத்தபடி இருந்த்து . " நாம் இப்போது எங்கே போகிறோம் ...? " அவள் கேட்டு வாயை மூடிய விநாடி , படகு எதிலோ மோதி அதிர்ந்து நின்றது .
" இதோ இங்கேதான் .வா ..." எழுந்து கீழே குதித்துநின்று கொண்டு அவள் இறங்க கை நீட்டினான் .அந்த இடம் ஒரு மண் திட்டு .சுற்றிலும் நீர் சூழ , அடர்ந்த மரங்களுக்கிடையே அது ஒரு குட்டி தீவு போலிருந்த்து .அதன் கரையில்தான் படகு மோதி நின்றிருந்த்து .

" நீ இங்கே இரு கணேஷா .நாங்கள் உள்ளே போய்விட்டு வருகிறோம் ...." படகோட்டியை அங்கேயே இருத்தினான் .படகில் எழுந்து நின்று கீழிறங்க தடுமாறிய ஆருத்ராவின் இடையை ஒற்றைக் கையால் வளைத்து தூக்கி மண் மேட்டின் மீது இறக்கினான் .

அவள் கையுடன் கை கோர்த்தபடி அந்த தீவினுள் நுழைந்தார்கள் ." இது என்ன இடம் உமா ...? இந்த காடுகளே எனக்கு அதிசயமாக இருக்கின்றன .இதற்கு நடுவே இப்படி ஒரு தீவு வேறா ...? "
" இவை தீவுகள் இல்லை ஆரா .கடலுக்கு நடுவே இயற்கையாகவே உண்டான சற்று பெரிய மண்திட்டுக்கள் .முன்பு இதில் சில

மீனவக்குடும்பங்கள் வசித்து வந்தனர் . சில வருடங்களுக்கு முன்னால் கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டு இந்த மண்திட்டுகள் நீருக்குள் முழுகி விட்டன .அதன்பிறகு இங்கே யாரும் வசிப்பதில்லை .சினிமா பட ஷூட்டிங்கிற்கு மட்டுமே இப்போது இவை உபயோகமாகின்றன "
" ஹை ...இங்கே ஷூட்டிங் நடக்குமா ...? என்ன படம் ஷூட்டிங் ...? "
" அது நிறைய ...முதன் முதலில் எடுத்த படம் எம்.ஜி.ஆரின் இதயக்கனி .அதனால் இந்த திட்டுக்கே எம்.ஜி.ஆர் திட்டு என்ற பெயர் கூட உண்டு ..."
" ம் ...சினிமா ஷூட்டிங்கு ஏத்த இடம்தான் .லவ்லி பிளேஸ் ...."
இடுப்பில் கைகளை வைத்தபடி பரவசமாக சுற்றிலும் பார்த்தாள் .அந்த இடத்தில் கடல்நீர் நீலம் மாறி பச்சை வாங்கியிருந்த்து.பச்சை நீரும் , வெண் மணலும் , நீல வானமும் , மனிதர்கள் சஞ்சாரமின்றி , நீர்ப்பறவைகளின் வித விதமான ஓசைகளுடன் அந்த இடம் ஆருத்ராவை மயக்கியது .

படுகையாய் கரடு முரடாக நிண்டு கிடந்த அந்த கரும்பாறை கூட அழகாக தோன்ற , இன்ப பெருமூச்சு ஒன்றுடன் அந்த பாறையில் சரிந்து கொண்டாள் ." இந்த இடம் எனக்கு ரொம்ப பிடித்திருக்கறது உமா ...." நீல வானத்தை பார்த்தாள் .

" இது எனக்கும் பிடித்த இடம் ஆரா .மனது குழப்பமாக இருக்கும் போது நான் இங்கேதான் வருவேன் .இதோ இப்போது நீ சாய்ந்திருக்கிறாயே இதே பாறையில்தான் ...ஒரு மணிநேரம் படுத்திருப்பேன் .மனக்குழப்பமெல்லாம் ஓடிப்போய்விடும் .தெளிந்த மனத்துடன் வெளியே வருவேன் ..." உமாபதியும் அவளருகிலேயே சரிந்து கொண்டு வான் பார்த்தான் .

" இப்போதும் குழப்பமா உமா ...? "

" ஆமாம் நிறைய குழப்பம். இங்கிருந்து போகும் போது தெளிந்து விடும் ."

" இந்திராவா ....? "

" அவளை விடு .அவளெல்லாம் ஒரு ஆளென்று ...."

" அப்படி நம்மை விரட்டி வந்தார்களே ...."

" ம் ...நம்மை வேவு பார்க்கத்தான் .நாம்தான் அவள் கண்ணிலிருந்து தப்பி வந்துவிட்டோமே ...."

" வேவு பார்க்க நம்மிடம் என்ன இருக்கிறது உமா ...? "

" இந்திரா நம் வாழ்வில் இடையிட மாட்டாள் ஆரா "

குறிப்பு காட்டிய அவன் பேச்சிற்கு பதில் சொல்ல தெரியாமல் மௌனமானாள் ஆருத்ரா .

" அவளது நோக்கம் நானல்ல ஆரா .நம் வீடு ...."

" என்ன சொல்கிறீர்கள் ...? " படுத்தபடி திரும்பி அவனை பார்த்தாள் .

" ஆமாம் .நம் வீட்டை ஹோட்டலாக , லாட்ஜாக மாற்ற வேண்டிமென்பதுதான் அவள் எண்ணம் .ரொம்ப தைரியமாக வீட்டினுள் நுழைந்து நின்று கொண்டு இது ரிஷப்சன் , இது டைனிங் ரூம் , இந்த ரூம் கிளாசிக் , இது டபுள் ரூம் , இது சிங்கிள் , இது வி.ஐ.பி ரூம் என்று பாகம் பாகமாக ஒருநாள் பிரித்தாள் .வீட்டை செங்கல் செங்கலாக பிரிப்பது போலொரு வேதனை எனக்குள் . நான் எப்போது வீட்டை லாட்ஜாக்க சம்மதித்தேன் என்று கேட்டேன் ....

லூசுப்பயலே பார்வை என்னை பார்த்தாள் .தொடர்ந்து என்னை ப்ரைன் வாஷ் பண்ண முயன்றாள் . இது போன்ற பழமையும் , புதுமையும் கலந்த இடங்கள் வெளிநாட்டு பயணிகளை மிகவும் கவருமென்று தொடர்ந்து வற்புறுத்தினாள் . இந்த எண்ணத்துடன் இருப்பதாக இருந்தால் திருமணமே வேண்டாம் என பேசிய திருமணத்தை நிறுத்தி விட்டேன் . அவள் அப்பா சமாதானத்திற்கு வந்தார் .வீடு வேண்டாம் .வேறு இடத்தில் ஹோட்டல் தொடங்கலாம் என்றார் .தொழிலும் , உறவும் வேறு வேறு என்றார் .திருமண பேச்சை தள்ளி வைத்துவிட்டு ஊருக்குள் ஒரு முக்கிய இடத்தில் நிலம் வாங்கி கட்டிட வேலையும் ஆரம்பித்து விட்டோம் .அங்கே ஹோட்டல் கட்ட பரமிசனுக்காகத்தான் மந்திரியை பார்க்க சென்னை போயிருந்தாள் .அவள் அப்பாவிற்கு அரசியல் ரீதியாக கொஞ்சம் செல்வாக்கு உண்டு .நேற்று கடையில் வைத்து அந்த விபரம்தான் பேசினோம் .

என் வாழ்வில் இந்திராவின் பங்கு இவ்வளவுதான் ஆரா .நாங்கள் இருவரும் இப்போது தொழில் பாரட்னர்கள் மட்டும்தான் ...."

" ம் ...." விழிகளை மூடி அவன் சொன்ன சேதிகளை மனதிற்கனுப்பி அலசிக் கொண்டிருந்தாள் .

" ஆனால் இப்போது எனக்கு தேவையான தெளிவு இந்திரா அல்ல ஆரா .நீ ...." அவன் குரல் கன்னத்தில் கேட்க ,பட்டென விழிகளை திறந்தாள் .அவள் முகத்திற்கு நேராக கிறங்க வைக்கும் அந்த இம்சை புன்னகை முகம் .

" எ...என்ன ...? " அவனது மீசை முடியில் தள்ளி நீண்டிருந்த ஒற்றை முடியை துல்லியமாக பார்த்தபடி கேட்டாள் .

" இது போன்ற தனிமை நேரங்களில் நாம் நம்மை பற்றி மட்டுமே

நினைக்க வேண்டும் ...பேசவேண்டும் ."

" நமக்குள் பேச என்ன இருக்கறது ...? நா ...நான் சரவணனை தேடி வந்தேன் .அவனுக்கு நீங்கள் கொடுத்த வேலை முடிந்து திரும்ப வர சில நாட்களாகலாம் என்றுவிட்டீர்கள் . என் ஆபிசில் நான் எடுத்து வந்த லீவ் முடிய போகிறது . அதனால் நான் இரண்டு நாட்களில் கிளம்பலாமென்று இருக்கிறேன் ."

" என்ன ...போகப் போகிறாயா ...? "

" ஆமாம் ..."

" இங்கே ...நான் இந்த பக்கம் இருக்கிறேன் ஆரா .அங்கே வானத்தில் இல்லை .திரும்பி என்னை பார்த்து சொல்லு ...நீ சென்னை திரும்ப போகிறாயா ...? " தலையை ஒற்றைக்கையில் தாங்கி புரண்டு படுத்து அவள் முகத்தை நெருங்கியபடி கேட்டான் .

அப்போது அங்கே சூழ்நிலை மிக அமைதியாக இருந்த்து .எப்போதாவது கேட்கும் பறவைகளின் கூவலை தவிர வேறு எந்த சபதமும் இல்லாமலிருந்த்து .அந்த நிசப்த்த்திற்கெல்லாம் சேர்த்து ஆருத்ராவின் இதயம் தாறுமாறாக அடித்துக் கொண்டிருந்த்து .நிச்சயம் தனது இதயத்துடிப்பு அவனுக்கு கேட்கத்தான் போகிறது ...பதட்டத்துடன் தன் இதயத்தை அழுத்திக் கொண்டாள் .

" ஆர்ப்பரிக்கும் உணர்வுகளை அடக்கிக் கொள்ளும் அவசியம் நமக்கிடையே தேவையில்லை ஆரா ...உன் நெஞ்சத்தின் துடிப்பை வெளியே விட்டு விடு ..." இதயத்தை அழுத்திக் கொண்டிருந்த அவள் கையின் மேல் தன் கையை வைத்தான் .

" நம் இருவரின் துடிப்பும் ஒன்றுதான் .ஒருவருக்காக ஒருவர்தான் ...." அவளது வலது கையை எடுத்து தன் இதயத்தின் மீது பதித்துக் கொண்டான் .

" எனக்கும் அதே துடிப்புதான் . உனக்காகத்தான் ...."

கதகதப்பான அவன் நெஞ்சத்தின் சூடு அவள் உடல் முழுவதும் பரவியது .தாள முடியாத தவிப்பில் மீண்டும் விழி மூடிக்கொள்ள , சிப்பியாய் கவிந்திருந்த அவள் இமைகள் மேல் ஈரம் படிந்த்து . பட்டென திறந்து கொண்ட ஆருத்ராவின் விழிகள் அவனை கெஞ்சின .அலட்சியம் செய்த அவன் இதழ்கள் அடுத்து அவள் மூக்கு நுனியில் அமர்ந்தன .

" வேண்டாம் உமா ...." தழைந்து கெஞ்சியது அவள் குரல் .

" ஒன்றுமில்லை ஆரா .இது நமக்கான பிரத்யேக நேரம் .கண்களை

மூடிக்கொள் ...." காதிற்குள் கிசுகிசுத்த அவன் இதழ்கள் அடுத்து கன்னத்தில் பதிந்த்து .முதலிரண்டு ஒற்றுதல் போல் மென்மையில்லை அதில் .வன்மையுடன் கூடிய உரிமை ஒற்றலாயிருந்த்து அது .

" நாம் பேச வேண்டும் உமா ..." அவன் நெஞ்சில் பதிந்திருந்த தன் கைகளால் அவனை தள்ள முயன்றாள் .

" பேசலாம் ஆரா ...இதோ ...இப்போது பேசலாம் ..." அவனது வேக குரலில் பேசுவதற்கான அறிகுறிகள் எதுவும் இல்லை .

மோகம் கொப்பளிக்க தன் இதழ்களை நெருங்கிய அவன் விழிகளில் தென்பட்ட மின்னலில் , தன்னை இருளாக உணர்ந்தவள் திடுமென தோன்றிய வேகத்தில் ஓர் உந்துதலில் அவனை தள்ளி விட்டு எழுந்துவிட்டாள் .

" நாம் உடனே இங்கிருந்து போகவேண்டும் ...." வேகமாக நடக்க தொடங்கினாள் .

" நில் ஆரா ...." இரண்டு எட்டில் அவள் தோள்களை அழுந்த பற்றினான் .தொடர்ந்து அவளை தழுவ முயன்றான் .

" தப்பு பண்றீங்க உமா .என்னை விடுங்க ..." அவனது ஆதிக்கத்தின் முன் ஆருத்ராவின் எதிர்ப்பு மிக பலவீனமாக இருந்த்து .ஒரு கட்டத்தில் இதோ தோற்றுவிட்டேனென ஆருத்ரா நினைத்த கணத்தில் , அழுந்த பற்றியிருந்த அவள் கன்னத்தை தள்ளினான் .சட்டென அவளுக்கு முதுகு காட்டி நின்றான் .

" ம் ...போ ..." எனக் கையாட்டினான் .

விட்டால் போதுமென ஆருத்ரா ஓடத் தொடங்கினாள் .பின்னால் அவன் வருகிறானா எனக் கூட திரும்பி பார்க்கவில்லை .திடுமென பாதை புதர்களால் மறைக்கப்பட வழி எங்கே ...திகைத்து அவள் நின்ற போது ,

" வலதுபக்கம் ...." பின்னாலிருந்து அவன் குரல் கொடுத்தான் .

அவனுக்கு பயந்துதான் தனியாக ஓடி வந்து கொண்டருந்தாள் .ஆனாலும் , இதோ பின்னால் ஒலித்த அவன் குரலில்தான் கால்களுக்கு புது தெம்பு பெற்றாள் .தயங்கி நின்றவள் ...பிறகு அந்த வலதுபுற பாதையில் புதர்களை விலக்கி நடந்தாள் .ஓட்டம் இப்போது நடையாகி இருந்த்து .

படகில் உட்கார்ந்து பீடி பிடித்துக் கொண்டிருந்த கணேஷன் இவர்களை பார்த்ததும் பீடியை எறிந்துவிட்டு துடுப்பை எடுத்தான் .தண்ணீருக்குள் மிதந்து  நின்ற படகில் ஏற தடுமாற்றத்துடன் அவள் கால்களை தூக்கியபோது அவள் இடுப்பில் கோர்த்த கைகள் அவளை மென்னிறகாய் சுமந்து பத்திரமாய் படகேற்றியது .

வந்த பயணத்தை போல் இல்லை போகும் பயணம் .உமாபதியும் வரும்போது போல் அவளை உரசியபடி அமரவில்லை .ஏதோ சிந்தனையுடன் பறவைகளை , மரங்களை பார்த்தபடி இருந்தான் .ஆருத்ரா இவைகளோடு பயத்துடன் அவன் முகத்தையும் பார்த்தபடி இருந்தாள் .அவனோ ஒரு முறை கூட திரும்பி அவளை பார்க்கவில்லை . கரையிறங்கும் போது ஞாபகமாக அவளுக்கு கை கொடுத்து இறக்கியவன் , அவனை யாரோ அழைக்க அவர்களுடன் பேசியபடி கொஞ்சம் ஒதுங்கி நின்றான்

" காருக்கு போ " சாவியை கொடுத்தான் .

.கார் எங்கே நிற்கிறது ...விழிகளை சுற்றி பரவ விட்டபடி ஆருத்ரா நடந்தாள் .

" உமாபதியை முழுவதுமாக நம்பி எந்த முக்கியமான முடிவையும் எடுத்து விடாதே ஆருத்ரா ...." கார் கதவை திறந்து கொண்டிருந்தவள் காதில் விழுந்த இந்த வார்த்தையில் திடுக்கிட்டு திரும்பினாள் . எச்சரிப்பு பார்வையுடன் நின்று கொண்டிருந்தாள் இந்திரா .

## 9

இட்லியை பிய்த்து சாம்பாரில் தொட்ட ஆருத்ராவின் விரல்களில் லேசான நடுக்கம் இருந்த்து ." போதும் ....போதும் ..." சட்னி ஊற்றிய அவன் கைகளை தடுத்த அவள் குரலிலும் அதே நடுக்கம் .

" சாப்பிட்டு விட்டு நிலாமுற்றத்திற்கு வா ஆருத்ரா .பேசலாம் " உமாபதி தன் தட்டுடன் எழுந்து விட்டான் .

இவன் சாப்பிட்டானா ...இல்லையா ...கவனிக்கவேயில்லையே .அவன் எப்போதும் போல் தன் தட்டை கவனித்து பரிமாறியது நினைவு வர , லேசான குற்றவுணர்வு வந்த்து அவளுக்கு .அவசரமாக தட்டிலிருந்த்தை அள்ளி விழுங்கிவிட்டு எழுந்தாள் .

நிலாமுற்றம் ....

தினமும் இரவு உணவின் பின் இருவருமாக அங்கே உட்கார்ந்து நடந்து , ஊஞ்சலாடி ஏதேதோ கதைகள் பேசிய இடம் .அதே வழமைக்குத்தான் இப்போதும் அழைக்கிறான் .

கைப்பிடி சுவரை பிடித்துக் கொண்டு கீழே பார்த்தபடி நின்றிருந்தான் உமாபதி .இவள் காலடி ஓசை கேட்டதும் திரும்பாமலேயே " உட்கார் ..." என்றான் .

" பரவாயில்லை ..." நின்றபடி கைகளை கட்டிக் கொண்டாள் .
" என்னை நம்பி வந்த்தற்கு நன்றி ..." திரும்பி அவளை பார்த்தபடி சொன்னான் .
" நம்பிக்கை இல்லாமலில்லை ..." முணுமுணுத்தாள் .
" ம் ...ஆனால் எனக்கு நம்பிக்கையில்லை ஆருத்ரா ...என் மேலேயே ..."
புரியாமல் நிமிர்ந்து பார்த்தவளை பார்த்து புன்னகைத்தான் .
" உன் அருகாமை இந்த அளவு என்னை பித்தேற வைக்கும் என நானே எதிர்பார்க்கவில்லை .அந்த தனிமையும் , உன் இனிமையும் ...நம் இளமையும் என் மூளையை குழப்பி விட்டது .நம் எதிர்கால வாழ்வை பேச வேண்டுமென்றுதான் , தனிமைக்காகத்தான் உன்னை அங்கே அழைத்து போனேன் .ஆனால் அந்த தனிமையே நமக்கு விரோதியாகி விட்டது ."
ஆருத்ரா மௌனமாக இதழ்களை கடித்துக் கொண்டாள் .
" ஒரு நொடி ...ஒரே ஒரு நொடி என்னை வில்லன் போல் பார்த்தாய் பார் .அந்த நொடியில் தான் என்னை மீட்டுக் கொண்டேன் .சுயநினைவுக்கு வந்தேன் "
" அந்த நேரத்தில் நான் என்ன செய்ய ...? நீ ....நீங்கள் ரொம்ப வேகமாக இருந்தீர்கள் ..." தடுமாறி பதில் சொன்னாள் .
அவனிடமிருந்து பதிலில்லாமல் இருக்க , கோபமாக இருக்கிறானோ நிமிர்ந்து பார்க்க அவன் முகம் புன்னகைத்தபடிதான் இருந்த்து .அவளது சித்தத்தை குலைக்கும் அந்த மோகன புன்னகையோடு .நேரங்கெட்ட நேரத்தில் இப்படி சிரித்து தொலையாதேடா ...மனதிற்குள் புலம்பியபடி வான் நிலவுக்கு பார்வையை திருப்பிக் கொண்டாள் .
" ஊஞ்சலில் உட்கார் ஆரா .இன்று பேசி முடித்து விடுவோம் ...."
அவனது வார்த்தைகளில் கூட அந்த புன்னகை இருந்த்து .
யோசனையாய் அவனை பார்க்க " ப்ராமிஸ் .நான் இந்த இடத்தை விட்டு நகரமாட்டேன் ..." உறுதியோடு கைகளை கட்டிக் கொண்டான் .
தயக்கத்தை மீறி புன்னகை வழிய ஊஞ்சலில் அமர்ந்துகொண்டாள் .கைபிடி சுவரில் சாய்ந்து கொண்டான் உமாபதி .
" நாம் திருமணம் செய்து கொள்வோமா ஆரா...? "
" என்ன ....? ம்ஹூம் ...அதெப்படி ...? "
" இது போன்ற பதில்களை எதிர்பார்த்துதான் இந்த கேள்வியை உன்னிடம் கேட்க நிறைய ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தேன் ...."
மனதிற்குள் உமாபதியை சந்தித்த முதல் நாளிலிருந்து ஓட்ட

தொடங்கினாள் .நாட்களை எண்ண ஆரம்பித்தாள் .இவனை சந்தித்து எத்தனை நாட்களாகிறது ...?

" பதினோரு  நாட்களாகிறது .போதும் எண்ணுவதை நிறுத்து ," அவன் குரலின் எரிச்சலில் எண்ணவோட்டத்தை நிறுத்தினாள் .

" உண்மையான காதலுக்கு நாட்களின் எண்ணிக்கை அவசியமில்லை ஆரா "

ஆருத்ரா தன் காதுகளை தேய்த்து விட்டுக் கொண்டாள் .

" காதலென்றா சொன்னீர்கள் ...? "

" ஆமாம் காதல்தான் .எனக்கு துளி சந்தேகம் கூட இல்லை .எனக்கு உன் மீது ...உனக்கும் என் மீது .காதலேதான் "

" ம்ஹூம் .இல்லை .பத்து நாட்களில் ஒரு காதல் வருமா ...? "

" இதோ வந்திருக்கிறதே ...."

" ப்ச் .போதும் உமா .எதையாவது நம்ப முடியாத மாதிரியே சொல்லாதீர்கள் .நான் என் ஆபிசிற்கு இரண்டு வாரம் லீவ் சொல்லவிட்டு வந்திருக்கிறேன் . பதினோரு நாள் போய்விட்டது .நாளை ஒருநாள் இங்கே இருந்து விட்டு மறுநாள் சென்னை கிளம்புகிறேன். சரவணன் வேலை முடிந்து வந்த்தும் அனுப்பி வையுங்கள் ..."
" என்னடி சொன்னாய் ...? " இலகுவாக தரையில் காலை மிதித்து பின் லேசாக உந்தி ஆடிக் கொண்டிருந்த அவள் ஊஞ்சல் அதிரடியாக பிடித்து நிறுத்தப்பட்டது . விழி சிவக்க அவளை முறைத்தபடி நின்றான் உமாபதி .

ஆருத்ராவின் கைகள் மீண்டும் நடுங்க தொடங்கின .இவன் ஏன் வித வித அவதாரம் எடுக்கிறான் .இந்திராவின் எச்சரிக்கை வேறு நினைவில் வந்து அவளை மருட்டியது .

" இங்கிருந்து போக போகிறாயா ...? " ஊஞ்சல் கம்பியை பிடித்திருந்த அவள் கையை அழுத்தி பிடித்து உறுமியவன் , அவள் கைகளின் நடுக்கம் உணர்ந்து மெல்ல தன் வேகத்தை குறைத்தான் .

" இப்படி அடிக்கடி பய பார்வை பார்க்காதே ஆருத்ரா .அது என்னை நீ வில்லன்டான்னு சொல்லாமல் சொல்கிறது ."

" வில்லன் வேலை செய்தால் அப்படித்தான் பார்க்க தோணும் " முணுமுணுத்தாள் .

" ஹேய் ...நான் உன் ஹீரோ செல்லம் ...." அவன் கை அவள் கன்னம் வருடியது .

" அந்த இடத்தை விட்டு நகரமாட்டேனென்று சொன்னீர்கள் ...." கனிந்த

கன்னங்களை மறைக்க முடியாமல் தலையை குனிந்து கொண்டாள் .

" ம் ...ஆமாம் ..." விலக மனமின்றி அவள் கன்னத்தை வருடிபிரிந்த்து அவன் கை .மீண்டும் நகர்ந்து நின்று கொண்டான் .

" இரண்டு நாட்கள் டைம் எடுத்துக் கொள் ஆரா .நம் திருமண முடிவை யோசித்து சொல்லு .அதை விட்டு விட்டு சென்னை போகிறேன் ...வேலை ...அது ...இதுவென உளறிக் கொண்டிருக்காதே ." உறுதிபட சொல்லி விட்டு உள்ளே போய்விட்டான் .

-------------------

" முடிவெடுத்து விட்டாயா ஆரா ...? " காலை எழுந்து வந்த உடனேயே கேட்டவனை திகைப்புடன பார்த்தாள் .

" இரண்டு நாட்கள் டைம் கொடுத்திருக்கிறீர்கள் " நினைவுபடுத்தினாள் .

" இரண்டு முழு நாட்களும் வேண்டுமா ....? "

முதலில் இருந்த இப்படி நெருக்குகிறானே என்ற எண்ணம் மாறி , லேசாக சிரிப்பு வந்த்து .

" நம் வாழ்க்கை இல்லையா உமா ..."

" ஆ...மாம் .சரி யோசித்தே சொல் ..." அரை மனதுடன் அ வளை திரும்பி திரும்பி பார்த்தபடிதான் அன்று வேலைக்கே போனான் .

மதிய உணவுக்கு வந்த போதும் அதே கேள்வி .

" தட்டை பார்த்து சாப்பிடுங்கள் ...." என்பது அவளது பதிலாக இருந்த்து .

இரவு படுக்க போகும் போது அவன் பார்த்த ஏக்க பார்வை அவளது அடி மனதை கிளறி கொத்த , ம் ..என்று தலையசைத்து விட்டால்தான் என்ன ...என்ற எண்ணம் வந்த்து அவளுக்கு .

அவசரமாக தனது தலையை அசைத்து நினைவை உதறியவள் அவனது பார்வையை மறுமுறை பார்க்காமல் அறைக்குள் நுழைந்து கொண்டாள் .

வெகுநேரம் தூக்கமின்றி புரண்டு விட்டு , ஒரு வழியாக கண்கள். சொருகிய கொஞ்ச நேரத்திலேயே ஏதோ சத்தம் கேட்டு விழித்துக் கொண்டாள் .முதலில் புரியாத சத்தம் கொஞ்சம் கொஞ்சமாக அதிகமாக உடலில் பற்றிக் கொண்ட பரபரப்புடன் தன் அறையை விட்டு வெளியே வந்தாள் .

சடசடவென்ற சத்தங்கள் வீட்டின் பின்புறமிருந்து கேட்க , பின்வாசலை நோக்கி வேகமாக நடந்தாள் .திறந்து கிடந்த பின்வாசலை அடைந்தவள் வெளித்தெரிந்த இருட்டினுள் காலை யோசித்தபடி வைக்க நீட்டியபோது

, சட்டென இடுப்பை பற்றி பக்கவாட்டில் இழுத்துக் கொள்ளபட்டாள் .சத்தம் வராமல் வாய் பொத்தப்பட்டாள் .

பயத்தில் விரிந்த விழிகள் உமாபதியை உணர்ந்த்தும் ஆசுவாசமாயின .

" சத்தம் போடாதே ஆரா ...,"

" நீங்கள்தானா ...பயந்துவிட்டேன் .என்ன பிரச்சனை ...? "

" யாரோ வீட்டிறகுள் நுழைந்திருக்கிறார்கள் ...."

" நிஜமாகவா ...? " ஆருத்ராவிற்கு ஆச்சரியம்தான் .கோட்டை மதில் போல் உயர்ந்திருக்கும் அந்த வீட்டின் காம்பவுண்ட் சுவர் தாண்டி உள்ளே நுழைந்திருக்கிறார்களா?

" மணியை தாண்டியுமா ...? " இரவு முழுவதும் மணி உறங்குவதில்லை .வேங்கையின் வேகத்தோடு விரைத்த காதுகளோடு வீட்டை சுற்றி வருவதை அவள் அறிவாள் .அதையும் தாண்டி யாரால் நுழைய முடியும் ?

" நீ இங்கே இரு .நான் மணியை பார்த்து வருகிறேன் ..." அந்த பெரிய தூணின் பின்புறம் மறைவாக அவளை இருத்திவிட்டு இருட்டுக்குள் நடந்தான் .அவன் இருட்டுக்குள் போவது ஆருத்ராவிற்கு பயத்தை கொடுத்தது .

இவனென்ன இப்படி கொஞ்சம் கூட பயமில்லாமல் போகிறானே .படபட நெஞ்சுடன் காத்திருந்தாள் .உமாபதியின் பேச்சு வெளியே தெளிவற்று கேட்டது .அந்த வாட்ச்மேன் தாத்தாவுடன் பேசுவானாயிருக்கும் .வெளியே போகும் எண்ணம் வந்தாலும் அவன் சொல்லுக்கு கட்டுப்பட்டு அங்கேயே அமர்ந்திருந்தாள் .

கொஞ்ச நேரத்தில் திரும்பி வந்த உமாபதி அவன் சொன்ன இடத்திலேயே அசைவின்றி அமர்ந்திருந்தவளை கனிவாக பார்த்தான் .

" யார் உமா ...? என்னாச்சு....? " அண்ணாந்து பார்த்து கேட்டவளுக்கு கை நீட்டினான் .கை பற்றி எழுந்தவளை தன்னருகே நெருக்கமாக இழுத்துக் கொண்டான் .

" ஒன்றுமில்லடா .யாரோ ...திருடர்களாயிருக்கலாம் .நம் மணியின் மீது மயக்க மருந்து ஸ்பிரே தெளிக்க பார்த்திருக்கிறார்கள் .அது தப்பித்து குரைக்கவும் பயந்து ஓடி விட்டார்கள் ..." அவள் தோள்களை வருடி ஆறுதலளித்தபடி சொன்னான் .

" ஓ ....வாட்ச்மேன் தாத்தா என்ன ஆனார் ...? "

" மணி குரைக்கவும் அவர் விழித்து விட்டார் .உடனே திருடர்கள் ஓடிவிட்டனர் "

" இப்படி இதற்கு முன் வந்திருக்கிறார்களா உமா ...? இத்தனை காவலை

மீறி துணிச்சலாக ....யாரோ இந்த வீட்டை பற்றி நன்கு அறிந்தவர் போல் தெரிகிறதே ...? "

" குட் .நீ பாயிண்டை பிடித்துவிட்டாய் .இந்த வீட்டை நன்கு அறிந்த யாரோவாகத்தான் இருக்கும் "

ஆருத்ரா தயங்கினாள்." அது ....ஒரு வேளை இந்திரா அனுப்பிய ஆட்களாக இருக்குமோ ...? "

" ஏன் அப்படி நினைக்கிறாய் ...? " கவனமாக கேட்டான்.

" அவர்கள் தானே இந்த வீட்டை நன்கு அறிந்தவர்கள் .அத்தோடு நம்மையும் கண்காணிப்பவர்கள் ...."

" ம் ...இப்போது நம் மீது மிகவும் பொறாமையில் இருப்பவள் ..."
" ஆமாம் ..." தலைகுனிந்து முணுமுணுத்தவளின் முகம் பற்றி நிமிர்த்தினான் .

" இந்திராவின் பொறாமையை உணர்ந்தாயா ஆரா ...? அது எதறகானது என்பதை தெரிந்து கொண்டாயா ...? "

" ம் ...உங்களுக்கானது "

" இல்லை .நமக்கானது .இந்திரா இன்னமும் இந்த வீட்டை விட விரும்பவில்லை ஆரா .அத்தோடு என்னையும் .அதனால் இப்படி ஏதாவது குட்டி கலாட்டா பண்ணிக் கொண்டேதான் இருப்பாள் "
" உங்களை நம்ப வேண்டாமென்று என்னை எச்சரித்தார்கள் ."

" அட ..இது எப்போது...? "

" நேற்று பிச்சாவரத்தில்...கார் அருகில் வைத்து "

" பார்ரா ...நான் உன்னை கண்கொத்தி பாம்பு போல் கவனித்துக் கொண்டிருக்கிறேன் .அப்படியும் நான்றியாமல் உன்னிடம் பேசி விட்டாளா ..? "

" பத்தே செகண்ட்தான் .சொல்லிவிட்டு போய்விட்டார்கள் "

" நம் எதிரிகள் பலமானவர்களாயிருக்கிறார்களே ஆரா .நாம் என்ன செய்யலாம்..? "

என்ன செய்வது என யோசனையுடன் அவனை பார்த்த ஆருத்ராவிற்கு அப்போதுதான் அது உறைத்தது .உமாபதி அவளருகே மிக நெருக்கமாக நின்றிருந்தான். இடக்கையால் .இடையை வளைத்து பிடித்திருந்தான் .வலக்கையால் அவள் சிகையை , நெற்றியை , புருவங்களை, தோள்களை என வருடியபடியே பேசிக் கொண்டிருந்தான் .
இவனென்ன இப்படி செய்கிறான் ...இதை எப்படி கவனிக்காமல் விட்டேன் .அவன் மார்பில் கை வைத்து தள்ள முயன்றவளை தடுத்து

எளிதாக இன்னமும்  தனக்கு நெருக்கமாக்கி கொண்டான் .
" இந்திராவின் பிடியிலிருந்து தப்பிப்பதற்காகவாது நம் திருமணத்தை உடனே நடத்த வேண்டியிருக்கறதே ஆரா ...சொல்லு அடுத்த வாரம் வைத்துக் கொள்ளலாமா ...? ஏற்பாடு செய்து விடவா ...? "

என்ன இவன் ...ஆருத்ரா திணறினாள் .மீள முடியாத மாயவலையொன்றில் அவள் உடலும் மனமும் மாட்டிக்கொண்டு தவித்தது .

வெள்ளி நிலா தனது மயக்கு கதிர்களை வஞ்சனையின்றி அவர்கள் மேல் தெளித்து கொண்டிருக்க , அந்த பெரிய தூணின் பின்னால் நின்றிருந்த்தால் நிலா வெளிச்சம் மறைந்து அரை குறையாக அவர்கள் மேல் படிந்த்து .குளிர் கதிரும் , நிலவிருட்டுமாக அந்த ஏகாந்த வேளை ஆருத்ராவின் கன்னி மனதை பிசைந்த்து .

அச்சலனத்தில் எதிரில்  கோகுல கண்ணனின் வசீகர புன்னகையோடு நின்றபடி , தன்னை மணக்க யாசிக்கும் அந்த இளைஞனின் வேண்டுதல் அவளை ...தன்னை தேவ கன்னிகையாய் நினைக்க தூண்டியது .
பளீரிடும் அவன் பற்களையும் , மின்னலிடும் அவன் விழிகளையும் ...கொத்தான அந்த மீசையையும் பார்த்தபடி மெல்ல இதழசைத்தாள் ஆருத்ரா .
" சம்மதம் ."

10

நடுவில் பெரிய வட்டமும் , சுற்றிலும் குட்டி குட்டி வட்டமுமாக அரக்கு சிவப்பாய் சிவந்திருந்த தன் கை மருதாணியை ஆச்சரியமாக பார்த்தாள் ஆருத்ரா .அப்படியே கைகளை முகத்தில் பொதித்து மருதாணி வாசம் சுவாசித்துக் கொண்டாள் .கண்களை மூடி மூச்சிழுத்தவள் கண்களை திறந்த போது விழுங்கும் பார்வையுடன் எதிரே நின்ற உமாபதி விரலிடுக்கு வழியாக தெரிந்தான் .

பட்டும் , நகையும் , பூவுமாக மணப்பெண் கோலத்தில் நின்றவளை ரசனை பார்வை பார்த்தான் .
உயிர் உறிஞ்சும் அவன் பார்வையை தாள முடியாது அப்படியே விரல்களால் முகம் பொத்திக் கொண்டாள் ஆருத்ரா .இந்த வெட்கத்தில் இன்னமும் போதையேறிய முக பாவனையுடன் உமாபதி அவளருகில் வந்தான் .முகம் மூடியிருந்த அவள் மருதாணி விரல்களை பிரித்து விட்டான் .

" ஆரு குட்டி , என்னடா பண்ற ...? " அவள் முகத்தின் ஒவ்வொரு இணுக்கையும் உண்டன அவன் விழிகள் .

" இந்த மருதாணி வாசம் பிடித்தேன் .நான் எப்போதாவது மெஹந்தி போடுவேன் .இந்த அளவு சிவக்காது .இப்போது பாரங்கள் எவ்வளவு அழகாக சிவந்திருக்கறது ..." கைகளை விரித்து காட்டினாள் .

" இந்த சிவப்பு மருதாணி இலையால் வந்த்தில்லைடா .என் மீது உனக்கிருக்கும் காதலால் வந்த்து ." அவன் கைகள் அவளது ஒவ்வொரு விரலாக வருடி உருவியது .

" ஷ் ...எதையாவது சொல்லாதீர்கள் ..."

" தம்பி சொல்வது சரிதாம்மா .இது கல்யாண மருதாணி .இந்த சிவப்பும் கல்யாண சிவப்புதான் ..." கமலா இரண்டு பை நிறைய சாமான்களுடன் வந்தபடி சொன்னாள் . அவள் முகம் உற்சாகம் சுமந்திருந்த்து . கமலாதான் முதல் நாள் இரவு " மருதாணி இல்லாத கல்யாணப்பொண்ணா ..." என்றபடி தோட்டத்தில் இருந்த மருதாணி மரத்தில் இலைகளை உருவி அரைத்து ஆருத்ராவின் கையில் இட்டு விட்டிருந்தாள் .மருதாணி இல்லாமலேயே ஆருத்ராவின் முகம் சிவந்த்து .

" நல்லா இவளுக்கு புரிகிற மாதிரி சொல்லுங்க சித்தி ...." அருகில் சித்தி நிற்கிறாளே என்றில்லாமல் ஆருத்ராவின் தோள்களில் தன் தோள்களால் இடித்தான் உமாபதி .இவன் ஒருத்தன்...எப்போதுடா என்னை உரசுவது என நேரம் பார்த்துக் கொண்டிருப்பான் .பொய் கோபத்துடன் தன் தோள்களை தடவியபடி நகர்ந்து கொண்டாள் .

கமலா கண்டு கொண்டோ ...கொள்ளாமலோ பை சாமான்களுடன் காருக்கு நடந்தாள் .அன்று காலை கோவிலில் அவர்கள் திருமணம் .அன்று இரவு சம்மதம் சொன்ன நான்காவது நாள் திருமணத்தை ஏற்பாடு செய்துவிட்டான் உமாபதி . திருமண நகைகள் முதல் , முகூர்த்த சேலை வரை எந்தக் குறைவும் இல்லாமலும் பார்த்து ...பார்த்து அவள் விருப்பம் கேட்டு செலக்ட் செய்தான் .எப்படி இத்தனை விரைவாக வேலைகளை முடிக்கிறான் என ஆருத்ரா ஆச்சரியப்பட்டாள் .

" உனக்கு எந்த மனக்குறையும் இருக்க கூடாது ஆரா .அதில் நான் மிக கவனமாக இருக்கிறேன் ...." உண்மை தெரிந்த்து அவன குரலில் .

" ப்ச் ...என் ஒரே உறவு அண்ணன் .அவனே வர முடியவில்லை .இது எனக்கு மிகப் பெரிய மனக்குறை இல்லையா உமா ..? "

" வேண்டாம்டா அதை நினைக்காதே .சரவணன் வேலை விசயமாக போன இடம் ஒரு சிறு கிராம்ம் .அங்கே அவனை போனில் கூட தொடர்பு கொள்ள முடியவில்லை .அதனால்தான் நம் திருமண விபரம்

அவனுக்கு சொல்லமுடியவில்லை .அவன் வரவும் நிச்சயம் சந்தோசப்படுவான் .நம்பு ஆரா"

எப்போதும் போல் இப்போதும் ஆருத்ரா அவனை நம்பினாள்.

" நம்பாமலா இந்த கோலத்தில் நிற்கிறேன் "தன் மணப்பெண் கோலத்தை சுட்டிக்காட்டினாள் .

உடன் உமாபதியின் பார்வை  அவளின் அலங்கார தோற்றத்தை ரசிக்க தொடங்கியது ." தேர் போல் இருக்கிறாய் செல்லம் ...." கொஞ்சல் குரலில் அவளது அருகாமை வர ஆரம்பித்தவனிடமிருந்து விலகி நின்று விரலாட்டி செல்லமாக எச்சரித்தாள் .

அவன் அவள் கைகயோடு  தன் கையை கோர்த்துக் கொண்டு அங்கிருந்த ஆளுயர கண்ணாடி முன் நின்றான் ." நம் ஜோடி பொருத்தம் பாரு ஆரா ..."

உயரமும் , அகலமுமாய் ஆண்மையின் ஆகிருதியான அவன் உருவும் , மெல்லிடையும் , மெனமையுமாக  நாணி சிவக்கும் பெண்மையுமாக அவளும்  மிக  பொருத்தம்தான் .செழித்துயர்ந்த தேக்கும் , மரம் சுற்ற துடிக்கும் கொடியுமாக நின்றிருந்தனர் .மிக இயல்பாக அவனுடன் ஒன்ற துடிக்கும் தன் உடல் அமைப்பில் நாணம் கொண்டு தலை கவிழ்ந்தாள் ஆருத்ரா .

" ஆதரவிற்காக மரத்தை சுற்றியிருப்பது போல் கொடியை பார்த்தால் தெரிந்தாலும் உண்மை அதுவல்ல ஆரா .அத்தனை வலிய மரத்தை வளைத்து பிடித்து தாங்கியிருப்பதே அந்த கொடிதான் ..தெரியுமா ...? " அவள் கன்னத்தை மூக்கு நுனியால் ஸ்பரிசத்தபடி காதல் ரகசியம் சொன்னான் .

அவனது காதல் வார்த்தைகளும் , ஆசை தொடுதல்களும் ஆருத்ராவின் கன்னச் சிவப்பை நிரந்தரமாக்கியபடி அங்கேயே இருந்தன .அருகமர்ந்து வந்தவனின் உரிமை பார்வையில் தாளாது முகம் திருப்பி வெளியே பார்த்தவள் திடுக்கிட்டாள் .

" கார் எங்கே போகிறது உமா ...? "

" கோவிலுக்குத்தான் ஆரா "

" கோவிலுக்கென்றால் ...நடராஜர் கோவிலுக்கில்லையா ....? "

" இல்லைம்மா . நம் குலதெய்வம் கோவில் . ஊரை தாண்டி இருக்கிறது .கல்யாணம் அங்கேதான் "

இது ஆருத்ராவிற்கு சொல.லப்படாத தகவல் .கோவிலில் திருமணம் என்றிருந்தான் .அவள் சிதம்பரம் நடராஜரைத்தான் நினைத்திருந்தாள்

.இப்போது ஏதோ ஒரு கோவிலென்றால் ...அவளுக்குள் சிறு நெருடல் .
" உங்கள் பக்கமும் சொந்தங்களில்லாமல் , என் பக்கமும் இல்லாமல் , அறிந்தவர் , தெரிந்தவரின்றி ...இது என்ன திருமணம் உமா ...? " வருத்தமாக சொன்னாள் . உமாபதியின் முகம் இறுகியது .இவ்வளவு நேரமிருந்த உல்லாச பாவனை மாறி கவனமும் , இறுக்கமும் வந்திருந்த்து .

" நான் அம்மா , அப்பாவை இழந்தவன் . கமலா சித்தியும் தூரத்து சொந்தம்தான் .இதெல்லாம் உனக்கு தெரியுமதானே ஆரா . இப்போது திடீரென என்ன ...? தெரியாமல் இந்த அநாதையிடம் மாட்டிக் கொண்டேமேயென நினைக்கிறாயா ...? "

அந்த அநாதை எனும் சொல் கூர் ஊசியாய் ஆருத்ராவின் நடு நெஞ்சில் தைத்து நின்றது .தந்தை , தாயற்றவன் எனபது இவனை இந்த அளவு பாதிக்குமா ...? சடுதியில் உணர்வுகள் மாறி கரும்பாறையாய் தோற்றம் காட்டியவனை கவலையாக பார்த்தாள் .அவளது பிடித்த சிரிப்பற்ற அவன் முகம் அவளுக்கு பிடித்தமானதாக இல்லை .

மெல்ல அவனருகே நகர்ந்து அமர்ந்து அவன் கைகளை பற்றிக் கொண்டு தோளில் லேசாக சாய்ந்து கொண்டாள் ." மூகூர்த்தம் எத்தனை மணிக்கு உமா ...? " கொஞ்சல் குரலில் கேட்டாள் .

அவளை திரும்பி பார்த்தவனிடம் போதும் விட்டுவிடு என பார்வையில் வேண்டினான் .நொடியில் மாறிப் போனான் உமாபதி .அவள் தலை மேல் தன் தலையை சாய்த்துக் கொண்டவன் , " நான் சரண்டர் " என முணுமுணுத்தான் .

" அப்படி தெரிந்தவர் யாருமேயில்லாமல் நம் திருமணம் நடக்க போவதில்லை ஆரா .உனக்கு ரொம்ப தெரிந்தவர்கள் வரப் போகிறார்கள் பாரேன் ..."

" அது யார் உமா ...? " ஆவலாக கேட்டாள் .

" சஸ்பென்ஸ் கோவிலில் வந்து பார் ..."

ஊருக்கு ஒதுக்குபுறமாக இருந்த அந்த கோவில் சிறியதாக இருந்த்து .ஆள் நடமாட்டமில்லாமல் இருந்த்து .ஆருத்ரா விழிகளை சுற்றிலும் செலுத்தி சளித்தாள் ."யாரையும் காணோமே ...." செல்லமாக சிணுங்கினாள்.

" வருவார்கள் பாரேன் ...." ரகசிய புன்னகையோடு கோவிலினுள் போனான் அவன் .மெல்ல ஒவ்வொருவராக வர ஆரம்பித்தனர. அவர்கள் ஆருத்ராவிற்கு பழக்கமில்லாதவர்களென்றாலும் தெரிந்தவர்கள்தான் . அந்த ஊர் முக்கிய புள்ளிகள் சிலரை

திருமணத்திற்கு அழைத்திருப்பதாக உமாபதி சொல்ரியிருந்தான் .மெல்லிய புன்னகையுடன் அவர்களை எதிர் கொண்டவளின் கண்கள் தனக்கு தெரிந்த அந்த ஆட்களை தேடியது .

அருகிலிருந்து அவள் தேடலை உணர்ந்தாலும் , தெரியாத்து போல் விருந்தினர்களை வரவேற்றுக் கொண்மிருந்தான உமாபதி .கொஞ்சமாவது இந்த பக்கம் திரும்புகிறானா பார் ...போடா ..நானே பார்த்துக் கொள்கிறேன் .

" என்னடி சொன்னாய் ...? " அவன் குரல் அருகில் கேட்கவும்தான் அந்த ," டா " வை வாய் விட்டு சொல்லி விட்டதை உணர்ந்து நாக்கை கடித்தாள் .கோப்படுவானோ...பயத்துடன் அவனை நிமிர்ந்து பார்க்க அவன் உடல கூச வைக்கும் மோக பார்வை பார்த்துக் கொண்டிருந்தான் .

" ஏன்டி " டா " வா சொல்ற ...தாலி கட்டி முடித்து வீட்டுக்கு போய்கொளவோம் .அங்கே வைத்து இதற்கு உனக்கு தண்டனை இருக்கிறது ...." அவனது பேச்சிலேயே அவன் தண்டனை தரும் விதம் புரிந்து போக , அவனது தாபம் தனக்கும் தாவிக்கொள்ளுமோ என்ற பயத்துடன் சற்று நகர்ந்து நின்று கொண்டாள் .

" ஹேய் அங்கே பாரு செல்லம் ...." முழங்கையால் அவள் இடையை இடித்து சுட்டினான் .மின்சாரம் பாய்ந்த தன் இடை ஸ்பரிசத்திலிருந்து மீண்டு நிமிர்ந்து பார்த்த ஆருத்ரா குழம்பினாள் .அது யார் ....? அங்கே வருவது ....இந்திராவா ...?

" சந்தேகமே படாதே .இந்திராவேதான் .இவள் உனக்கு தெரிந்தவள்தானே .நம் திருமணத்திற்குத்தான் வந்திருக்கிறாள் ...." முணுமுணுத்து விட்டு " வாங்க ...வாங்க " இந்திராவிற்கும் , அவளுடன் வந்த அவள் அப்பாவிற்கும் கை கூப்பினான் .

" இங்கே என்ன நடக்கிறது பதி ...? " இந்திராவின் அப்பா கேட்டார் . ஓ...அப்போது இவர்களுக்கு திருமண விபரம் தெரியாதா ...? இந்திராவை விட ஆருத்ராதான் அதிகம் விழித்தாள் .

" என் திருமணம் அங்கிள் . ஆருத்ராவும் , நானும் ஒரவரையொருவர் விரும்பினோம் .இதோ திருமணமும் செய்து கொள்ள போகிறோம் ..."
" அப்படியா ஆருத்ரா ...? " இந்திரா சட்டென ஆருத்ராவிடம் திரும்பி கேட்ட கேள்வியில் இல்லையென்று விடு என்ற வேண்டுதல் இருந்த்து .
" ஆமாம் இந்திரா ...." ஆருத்ராவின் பார்வை நேரடியாக இந்திராவின் கண்களை சந்தித்தது .இந்திராவின் கண்களில் மெல்லிய அதிர்வு வந்த்து .

" என் வீட்டு பக்கம் சொல்லும்படி பெண் சொந்தமில்லை அங்கிள் .அதனால்  இந்திராதான் ஆருத்ராவின் தோழிப்பெண்ணாக இருந்து , தாலி முடிந்து வைக்கவேண்டும் ...."

இந்த வேண்டுதலில் இந்திராவுக்குள் உண்டான பலமான அதிர்வுகள் நன்கு வெளித் தெரிந்தன .ஆருத்ராவிற்கே இது மிக கொடுமையாக தெரிந்த்து .

" பாவம் அவர்கள் வேண்டாமே ...." உமாபதியிடம் முணுமுணுத்தாள் .

" இல்லை இதனை அவள்தான் செய்ய வேண்டும் .அப்போதுதான் அவளால் நம் வாழ்வில் பின்னால் தொல்லை இருக்காது ..." உமாபதி எஃகாய் இறுகியிருந்தான் .

" அவர்கள் இருவரும் திருமணத்தையே விட்டு விட்டு போய்விட போகிறார்கள் ...."

" அப்படியெல்லாம் போக மாட்டார்கள் .அதன்பிறகு அவர்கள் இந்த ஊரில் தொழில் செய்ய வேண்டுமே ...." உமாபதியின் அலட்சிய கையசைவில் ஆருத்ராவின் இதயத்துடிப்பு அதிகரித்தது .

என்ன இவன் ....இப்படி பேசுகிறான் ...அப்போது அவன் ...ஆருத்ரா அடிக்கடி பார்த்து பயப்படும் அந்த வில்லனின் தோற்றம் காட்டினான் .நிமிர்ந்து ஆருத்ராவை பார்த்தவன் நொடியில் தன் முக பாவனையை மாற்றிக்கொண்டான் .

" ஹேய் ஆரா , ஒரு சாதாரண விசயம் .இதற்கு நீ மறுபடியும் என்னை வில்லனாக்காதே .வா ...வா ..போகலாம் " அவளை கைபிடியாய் இழுத்து வந்து மணமேடையில் அமர்ந்தான் .மணமேமையின் பக்கத்திலேயே அட்சதையுடன் அமர்ந்திருந்தார் இந்திராவின் தந்தை . ஆருத்ராவிற்கு தாலி முடிந்து விட்ட இந்திராவின் விரல்கள்  கழுத்தில் நடுங்கின .மாலையை சரி செய்வது போல் அவளருகே குனிந்தவள் ...

" நான் அவ்வளவு சொன்ன பிறகும் இப்படி மாட்டிக் கொண்டாயே ..." என முணுமுணுத்தாள் .அந்த குரலில் உண்மையான ஆதங்கமே இருந்த்து .

## 11

மொத்தமே ஐம்பது பேர் வந்நதிருப்பார்கள் திருமணத்திற்கு .அவர்களுக்காக ஹோட்டலில் விருந்திற்கு ஏற்பாடு செய்திருந்தான் உமாபதி .அனைவரும் வயிறாற உண்டு வாயாற வாழ்த்தி போனார்கள் .ஆருத்ரா இப்போது கொஞ்சம் திருப்தியாக உணர்ந்தாள் .

" இப்போது ஓ.கே வா ...? " அவள் பக்கம் சாய்ந்து கேட்டான் உமாபதி .

" ம் ..." மையலாய் தலையசைத்தாள் .

" அடுத்து என்ன செய்யவேண்டும் ...? "

" ம் ...என்னிடம் கேட்டு கேட டுத்தான் எல்லாம் செய்கிறீர்களா...? " செல்லமாய் சிணுங்கினாள் .

" நிச்சயம் ஆரா .உன்னைக் கேட்காமல் நான் இதுவரை என்ன செய்திருக்கிறேன் .எல்லாமே உன்னைக் கேட்டுத்தான் ...உன் சம்மதத்தோடுதான் ..."

அப்படியா செய்கிறான் ...ஆருத்ரா யோசிக்க தொடங்கும் போதே ,..

" சரி வா ... அடுத்து இன்னொரு வேலை ..." என அவசரமாக அவளை பிடித்திழுத்து காரிலேற்றினான் .

எங்கே என்ற அவளது அடுத்த யோசனை முடியும் முன்பே கார் , நடராசர் கோவில் முன் நின்றது .

" இறங்குங்கள் மகாராணி .இதுவும் உங்கள் விருப்பம்தான் ..." கார் கதவை திறந்து விட்டபடி அடிமை போல் கை கட்டி நின்றான் .

இது அவனது ஊர் .இங்கே அவன் பேசப்படும் பெரும்புள்ளி .அந்ழ எண்ணமின்றி இப்படியா ரோட்டில் நின்று மனைவக்கு கை கட்டுவான் ...? ஆருத்ராவிற்குத்தான் தரம சங்கடமாக இருந்த்து .

" ச்சு ... கையை இறக்குங்கள் .யாராவது பார்த்தால் என்ன நினைப்பார்கள் ...? "

" என்னமும் நினைத்து விட்டு போகிறார்கள் .என் மனைவி ...என் உரிமை ..." தேவைக்கு அதிகமாகவே அவளை உரசியபடி கோவிலினுள் நுழைந்தான் .

கோவில் ஊழியர்களிடமிருந்து ...அர்ச்சகர்கள் வரை அவர்களிடம் திருமணம் விசாரித்தார்கள் .ஆருத்ராவின் மீது மரியாதையாக , பயமாக ...பொறாமையாக கூட பல்வேறு பார்வைகள் விழுந்தன .அவர்கள் திருமணத்திற்கான விசேச பூஜை கோவிலில் செய்யப்பட , ஆருத்ரா மிக திருப்தியாக அந்த ஆதிநாதனை மனமுருக வேண்டிக் கொண்டாள் . கண்களை மூடி ஆழ்ந்த வேண்டுதலில் இருந்த ஆருத்ராவை கலைக்காமல் , உமாபதி அர்ச்சகர் ஒருவருடன் பேசியபடி சற்று ஓரம் நகர ...

" படித்தவள் தானே நீ .லேசாக சுட்டிக் காட்டினால் உணர்ந்து ஒதுங்கிக் கொள்ள தெரியாதா உனக்கு ...? " சீறலாய் காதருகில் கேட்ட குரலில் வேண்டுதல் கலைந்து கண் திறந்தாள் ஆருத்ரா .

அருகில் இந்திரா நின்று கொண்டிருந்தாள் ஆனால் அவளை

பார்த்தபடி நிற்கவில்லை .சுவாமி தரிசனம் போல் பார்வையை மூலஸ்தானத்தில் பதித்திருந்தாள் .பேச்சு இவளுக்கானதாயிருந்த்து .ஆருத்ரா விழி சுழற்றி பார்த்தாள் .உமாபதியின் சந்தன நிற சட்டை தள்ளி தூணின் பின்புறம் தெரிந்த்து .அந்த பக்கம் யாரோடோ பேசுகறான் போலும் .

" உங்களுக்கு என்ன வேண்டும் இந்திரா ...? "

" நீ சரவணனின் தங்கைதானே ...? "

" ஆமாம் .அதனால் என்ன ...? "

" இந்த விபரம் உமாபதி என்னிடம் கூறவில்லை .நானாக கண்டுபிடித்தேன் .உன்னை பற்றிய எந்த விபரமும் என்னுடன் பேச அவர் தயாரில்லை ..."

" அதில் அவருக்கு விருப்பமில்லாமல் இருக்கலாம் " ஆருதராவின் பார்வையில் குற்றச்சாட்டை காணவும் இந்திரா தலையசைத்து மறுத்தாள் .

" நீ நினைப்பது போலில்லை ஆருத்ரா . உமாபதியுடன் இந்த வாழ்க்கை உனக்கு வேண்டாம் .நீ திரும்ப சென்னை போய்விடு ..."
ஏகவசனத்தில் அவளை பேச துடித்த நாவை அடக்கிய ஆருத்ரா " அவர் என் கணவர் " பொறுமையாக கூறினாள் .

" வேண்டாம் ஆருத்ரா .உன் மென்மைக்கு உமாபதி பொருத்தமானவரில்லை .உனக்கு அவரை தெரியாது .நீ அவரை விட்டு ....,"
" இதனை நீங்கள் உமாபதியின் முன்னாலேயே சொல்லிவிடலாமே ...."
" என்னை கிண்டல் செய்கிறாய் ...ம் .அப்படி நான் செய்தால் அதன் பிறகு நானோ , என் தந்தையோ இந்த ஊரிலேயே இருக்க முடியாது .உமாபதி வஞ்சம் வைத்து பழி வாங்கி விடுவார் .அவர் வேட்டை நாயை போன்றவர் ..." இதை சொன்ன போது இந்திராவின் குரல் நடுங்கியது .
" உங்கள் தகவலுக்கு நன்றி .நான் என் கணவரிடம் போகிறேன் ...."
உமாபதியை நோக்கி நடந்தவளின் கையை பற்றினாள் .

" என்னை நம்பவில்லை இல்லையா ...? சரி உன் விருப்பம் போல் உமாபதியை பற்றி எல்லா விபரங்களும் உனக்கு சொல்கிறேன் .நீ உமாபதி வீடு இருக்கும் தெரு முனை விநாயகர் கோவிலுக்கு வந்து விடு ...."

" இதை நான் செய்தால் என் உமாவை நான் நம்பாத்து போல் ஆகிவிடுமே ...."

" கடவுளே இவள் ..." பற்களை நறநறத்தவள் ....

" உன்னால் முதலில் அந்த வீட்டை விட்டு தனியாக வர முடிகிறதா எனப் பார் .மற்றதை பிறகு பேசலாம் " நகரப் போனாள் .

" இதற்கு என்ன அர்த்தம் ....? "

" உமாபதி அந்த வீட்டில் உன்னை சிறை வைத்திருக்கிறார் என்று அர்த்தம் ." உமாபதி திரும்பி வந்து கொண்டிருக்க , இந்திரா இந்த வார்த்தைகளை அவசரமாக உதிர்த்து விட்டு ஒரு தூணின் மறுபுறம் மறைந்து போனாள் .

" வேண்டுதல் முடிந்த்தா ....? " புன்னகையோடு வந்த உமாபதி ஆருத்ராவின் முகத்தை உன்னிப்பாக பார்த்தான் .

" ஆரா என்னடா ...எதுவும் பிரச்சனையா ....? " இப்படி முகத்தின் சிறு மாறுதலையும் கவனித்து அக்கறை காட்டுபவனிடம் சந்தேகம் கொள்ள முடியுமா ...?

" ஒன்றுமில்லை உமா .நம் வீட்டிற்கு போகலாமா ...? " ஆருத்ராவின் உரிமை பேச்சில் உமாபதியின் முகத்தில் உற்சாகம் முகாமிட்டது .
" போகலாம்டா ..." என்றவனின் குரலில் துள்ளலுடன் , ஆவலும் வழிந்த்து .
காரிலும் அவளை முடிந்தளவு உரசியபடி அமர்ந்து வந்தவன் " வீட்டுக்கு போனதும் உனக்கு பனிஷ்மென்ட் இருக்கு " என்றான் .
" பனிஷ்மென்டா ...என்ன தப்பு பண்ணினேன் ...? " இவன் இந்திராவுடன் பேசியதை சொல்கிறானா ...ஆருத்ராவின் இதயம் லயம் தப்பியது .

" ஆமாம் ...."டா" சொன்ன இந்த உதடுகளுக்கு ...." ஒற்றை விரலால் அவள் இதழ்களை வருடினான் .

இப்போதும் ஆருத்ராவின் இதயம் பலமாகத்தான் அடித்து கொண்டது .ஆனால் இனிமையாக ...

ஆளுயர அந்த கேட் அகல விரிந்து அந்த மாபெரும் வீடு அவர்களை உள்வாங்கிக் கொண்டது .

--------------------

தன் அறைக்குள் நுழைந்து பட்டு சேலையிலிருந்து சாதாரண சேலைக்கு மாறிக்கொண்டாள் ஆருத்ரா .கண்ணாடி முன் நின்று தன்னை பார்த்துக் கொண்டாள் .திடீரென இந்த வனப்பு எப்படி முகத்திற்கு வந்த்து ...தன்னை தானே கேள்வி கேட்டு கொண்டாள் .கழுத்திலும் , காதிலும் , கைகளிலுமாக கனத்து கொண்டிருந்த

நகைகளை சுழற்றி வைத்து விடலாமா ...யோசித்தபடி நெக்லசின் கொக்கியில் கை வைத்த போது ....

" ம்ஹூம் ...எதையும் தொடக்கூடாது .எல்லா நகைகளும் அப்படியே இருக்க வேண்டும் ..." சொன்னபடி உள்ளே வந்தான் உமாபதி .

" வெயிட்டாக இருக்கிறதுப்பா ...." ஆருதரா சிணுங்கினாள் .

" பரவாயில்லை .இருக்கட்டும் "

" சை மனைவி கஷ்டப்படுகிறாள் .இருக்கட்டுமென்கிறீர்களே ...."

" இன்னும் கொஞ்ச நேரம்டா .எனக்கு உன்னை இந்த மணமகள் கோலத்தில் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போலுள்ளது ." அவள் தோள்களில் கை வைத்து விழியால் அவளை அளந்தான்.

" பனிஷ்மென்ட்டை எப்போது தொடங்கலாம் ...? " அவள் காது மடல்களில் இதழுரசி கிசுகிசுத்தான் .

" சீ விடுங்க எனக்கு வேலை இருக்கிறது "

" ம்ப்ச் இப்போது என்னடி வேலை ...? "

" இதோ இந்த சாமான்களையெல்லாம் அடுக்க வேண்டாமா ...? " பெட்டி பெட்டியாய் அறை முழுவதும் நிறைந்திருந்த சாமான்களை காட்டினாள் .

அவை ஆருத்ராவிற்கென உமாபதி வாங்கி குவித்திருந்த துணுமணிகள் , அலங்கார சாமான்கள் போன்றவை .அவற்றை தன் அறையில்தான் பிரித்து வைக்கவேண்டுமென அவன் கூறிவிட , சம்மதித்து ஒரு பெட்டியோடு அவன் அறைக்குள் போக கிளம்பியவள் , அவன் அறை வாசலில் மோக பார்வையோடு அவளை எதிர்பார்த்து நின்றதை பார்த்ததும் முகம் சிவக்க ஓடி வந்துவிட்டாள் .

" ஏய் ஏன் வந்துவிட்டாய் ...? " பின்னாலேயே வந்து கேட்டான் .

" ம்ஹூம் நான் வர மாட்டேன் .நம் கல்யாணம் முடியட்டும . பிறகு அடுக்கிக் கொளகிறேன் ...." அவனின் மோகத்தில் மூழ்கி விடுவோமோ என பயந்து அன்று உறுதியாக சொல்லிவிட்டாள் .உமாபதியின் முகத்தில் அன்று கொஞ்சம் கோபம் கூட தெரிந்த்து .பிறகு தன்னை சமாளித்து கொண்டான் .

இதோ இப்போது ...

" ஆஹா ...வா ...வா .நானும் ஹெல்ப் பண்றேன் .இரண்டு பேருமாக எடுத்து வைக்கலாம் ." ஒரு கையில் பார்சலையும் , மறு கையில் அவள் இடையையும் வளைத்து பிடித்தான் .

" என்னிடம் கொடுங்கள் ..." பார்சலுக்காக கை நீட்டியவளை மறுத்தான்

.

" இனி பாரமெல்லாம் என் தோளில்தான் .நீ இன்ஸ்ட்ரக்சன் மட்டும் சொல்லு ...." ஆசையோடு  பொறுப்பான கணவனாகவும் அவன் பேச ஆருத்ரா நெகிழ்ந்தாள் .

சொன்னது போல் அவளை கட்டிலில்  உட்கார வைத்து அவளிடம் கேட்டு கேட்டு சாமான்களை அடுக்கினான் .அவன் மீதிருந்த மதிப்பு உயர ...காதல் பொங்கி வழிந்த்து ஆருத்ராவிற்கு .

சேலைகளை ஒவ்வொன்றாக பொறுமையாய் ஹேங்கரில் கோர்த்து பீரோவில் மாட்டிக் கொண்டிருந்தவன் , மனைவியின் காதல் பார்வையை உணர்ந்து திரும்பினான் .ஆருதரா அவசரமாக பார்வையை மாற்றிக் கொண்டாள் .

" ம்ஹூம் மறைக்காதே ஆரா .நான் பார்த்துவிட்டேன் ..." கையிலிருந்த்தை போட்டுவிட்டு வேகமாக அவளருகில் அமர்ந்தவன் வேகத்துடன் அவளை அள்ளி இதழில் இதழ் பதித்தான் .

திடுமென பெற்ற இந்த எதிர்பாராத முத்தம் ஆருத்ராவை ஆழ் சுழலில் தள்ளியது .முத்தத்தை தொடர்ந்த அவனது அவசர ஆலிங்கனங்கள் அவளை திணற வைத்தன .உடல் பதறி வியர்க்க அவனை தள்ளினாள் .

" விடுங்க உமா ...எ...எனக்கு...ஒரு மாதிரி ...."அவனது அவசரத்தில் தடுமாறினாள் .

" என்னடா ...கொஞ்சம் பயமாக இருக்கிறதா ...? எனக்கும் கூட .ஏனென்றால் எனக்கும் உன்னை போல் இதெல்லாம் புதுசுதான் ...." கண் சிமிட்டி அவளை சிவக்க வைத்தான் .முகம் நிமிரும் துணிவின்றி அவன் மார்பில் முகம் புதைத்து கொண்டாள் .

" கமலா அத்தை வந்திடப் போறாங்க .விடுங்க ..." அவளது மெல்லிய திமிறலை அடக்கியவன் ,

" சித்தி என்றைக்கு என் ரூமுக்கு வந்திருக்கிறார்கள் ஆரா ...? " அவன் உரைத்ததின் உண்மையில் துவண்டது அவள் தேகம் .
ஏதோ அபாய மணி போல் ஒன்று மண்டைக்குள் ஒலிக்க , மயக்கத்திலிருந்து வெளி வர திணறினாள் ஆருத்ரா .

திடுமென அவளை தன்னிலிருந்து விலக்கியவன் பாக்கெட்டில் ஒலித்துக கொண்டிருந்த போனை எடுத்து காதுக்கு கொடுத்தான் .வினாடியில் கிசுகிசுப்பு மாறி கம்பீரத்திற்கு மாறி விட்ட அவன் குரலை , இயல்பாக வருடிக்கொண்ட மீசை நுனியை , ராஜ களை குடியமர்ந்து விட்ட முகத்தை ரசித்தபடி இருந்தாள் ஆருதரா .

" பத்து நிமிடத்தில் அங்கே இருப்பேன் ..." அவனது உறுதி பேச்சில்

திடுக்கிட்டு அவன் முகம் பார்க்க , அவனோ ....

" நீ ரெஸ்ட் எடு ஆருத்ரா .நான வந்துவிடுகறேன் " திரும்பி அவள் முகத்தை கூட பார்க்காமல் வெளியேறினான் .

12

அன்று அந்த எம் ஜி.ஆர் திட்டில் நடந்த சம்பவத்திலிருந்து உமாபதி ஆருத்ராவுடன் அதிக நேரம் செலவழிக்க நினைத்தான் .நினைத்ததையே முடித்தான் .எந்த நேரமும் வேலை ...வேலை யென ஓடும் பிள்ளை .இப்போது எப்போதும் வீட்டிலேயே இருக்கிறானே ....கமலா கூட ஆச்சரியப்பட்டாள் .

" இதில் உங்களுக்கு மகிழ்ச்சியா ...துக்கமா சித்தி ...? " உமாபதியின் கேள்வி கூர் அம்பாய் இருக்க , கமலா பதறினாள் .

" ஐயோ சந்தோசம்தான் சாமி . சமைச்சு வச்சதை முழுதாக சாப்பிடக்கூட செய்யாமல் நீ ஓடுவதில் ரொம்ப வருத்தப்பட்டிருக்கேன் .இப்போ ரொம்ப சந்தோசந்தான் சாமி .இதுக்குத்தான் உரிமைப்பட்டவள்னு ஒருத்தி வீட்டில இருந்தால் எல்லாம் சரியாக நடக்கும்னு பெரியவுக சொன்னது சரிதான் போலவே ..." கமலா அவசரமாக சொல்ல அதில் தெனபட்ட சிறு பயத்தை ஆச்சரியமாக பார்த்தாள் ஆருத்ரா .

" சாதாரண விசயம் .இதற்கு ஏன் அவுங்களை மிரட்டிட்டு ...? " மெலிதாய் ஆட்சேபித்தாள் .

" மிரட்டலா ...சும்மா விளக்கம் தானேடா சொலலிட்டிருந்தேன் ...." மின்னின பற்கள் .

" ஓ ...உங்க ஊரில் இப்படித்தான் விளக்கம் சொல்வாங்களாக்கும் ..." பற்களின் மின்னலில் இருந்து பார்வை மீட்டுக் கொண்டாள் .

" ஆமாம் . அவுங்கவுங்களுக்கு ஏற்றபடி விளக்கம் .இதுவே உனக்கு விளக்கம் சொல்வதாக இருந்தால் , என் பாணி வேறாக இருக்கும் .என்ன ...சொல்லட்டுமா ...? " என்றவனின் இதழ்கள் குவிய பேச முடியாமல் முகம் சிவக்க ஓடி வந்துவிட்டாள் .

அன்றைய நினைவில் இன்றும் முகம் சிவக்க , அருகில் உமாபதி இல்லாத தைரியத்தில் தன் முகத்தை தானே கண்ணாடியில் ரசித்துக் கொண்டாள் .அவன் இருந்தால் அந்த அனுமதி அவளுக்கு கிடைக்காது .ம்ஹூம் ....நான்தான் பார்ப்பேன் என அதற்கும் போட்டிக்கு வருவான் . சரியான ஆள் ...செல்லமாக கணவனை மனதிற்குள் சீராட்டிக் கொண்டவள் , அரை குறையாக ரூம் முழுவதும் கலைந்து கிடந்த

சாமான்களை சரி செய்ய ஆரம்பித்தாள் .பாதியிலேயே ....இதையெல்லாம் அவன்தானே செய்ய வேண்டுமென ஆசைப்பட்டான் ...எனத் தோன்றிவிட அப்படியே விட்டு விட்டு எழுந்தாள் . மணி மாலை ஆறை நெருங்கிக் கொண்டிருந்த்து .இந்நேரம் எங்கே போனான் ...? இத்தனை நாட்களாக விட்டு பிரியாமல் ஒட்டி இருந்துவிட்டு , இன்று அரிகிலிருக்க வேண்டிய நேரத்தில் ....நினைத்து விட்டு தன் நினைவுக்கு தானே வெட்கினாள் .ம்ஹூம் ...முதலில் இவன் அறையை விட்டு வெளியே போகவேண்டும் .இங்கே இருந்தால் இப்படித்தான் ஏதேதோ நினைவுகள் , வெட்கமில்லாமல் வரும் .வேகமாக அவன் அறையை விட்டு வெளியே வந்தாள் .

" இரவு சமையல் நான் பார்த்துக்கிறேன்மா .நீ போய் தம்பி வரும் வரை ஓய்வெடு " அடுப்படிக்கு போனவளை கமலா விரட்டி விட அங்கிருந்தும் வெளியேறினாள் .உமாபதி அவள் சமையல் செய்வதில் அவ்வளவாக அக்கறை காட்டுவதில்லை ".சித்தி இருக்கிறார்கள் ஆரா .நீ ஏன் கஷ்டப்படுகிறாய் ...வேண்டாம் .விட்டு விடு " என்றிருக்கிறான் . ஆருத்ராவிற்குத்தான் எப்போதும் உமாபதி பேச்சை மீறும் எண்ணம் வருவதேயில்லையே .இப்போதும் ...அதை நினைத்தபடி அடுப்பை எட்டிப் பார்க்கும் எண்ணத்தை கூட மாற்றிக கொண்டு வீட்டினுள் மெல்ல நடந்தாள் .

வீட்டின் நடு ஹாலில் நின்று சுற்றி பார்த்தாள் .பெரியபெரிய அறைகளும் , அகலமான சன்னல்களுமாக பிரம்மாண்டம் காட்டியது வீடு .இது ...இனி தன் வீடு .இந்த நினைவே ஆருத்ராவினுள் ஓர் சிலிர்ப்பை உண்டாக்க , மெல்ல வீட்டின் ஒவ்வொரு அறையாக நுழைந்து பார்க்கலானாள்.பார்க்க ...பார்க்க பிரமிப்பு கூட , இந்த வீட்டை இந்திரா கைப்பற்ற நினைப்பதில் ஆச்சரியமில்லை என தோன்றியது .

யாரை வேண்டுமானாலும் இந்த வீடு காந்தமாக இழுக்கத்தான் செய்யும் .அத்தனை ஆச்சரியங்கள் இதில் இருக்கின்றன . சரவணனை கூட சென்னையிலிருந்து இந்த சிதம்பரத்திற்கு இழுத்தது இந்த மாளிகை வீடுதானே ....அண்ணனின் நினைவில் மனம் கனிந்த்து ஆருத்ராவிற்கு . சரவணன் ஆர்க்கியாலஜி டிபார்ட்மென்டில் வேலை பார்ப்பவன் .பழமைகளை தேடித் தேடி ஆராய்பவன் .இது போல் ஒரு வீடு சிதம்பரத்தில் இருப்பதாக கூறி , அதன் ஓனரிடம் வீட்டை பற்றிய விபரஙகளை ஆராய அனுமதி வாங்கி விட்டதாகவும் சொல்லித்தான் இங்கே வந்தான் .வந்தவனிடமிருந்து எந்த தகவலும் இல்லையென்றுதான் அவனை தேடி ஆருத்ரா வந்தாள் .ஆனால் ...இந்த

சிதம்பரம் இப்படி அவள் வாழ்வையே மாற்றும் என்பதை அவள் எதிர்பார்க்கவில்லை .

வீட்டின் ஒவ்வொரு அறையாக திறந்து பார்த்து ரசித்து முடிப்பதற்குள் கால் வலிக்க தொடங்கி விட்டது .மாடியின் அந்த கடைசி சிறிய அறையை திறப்பது மிக சிக்கலாக இருந்த்து .கஷ்டப்பட்டு திறந்த போது , அந்த அறை தூசு படிந்து இருந்த்து . நெடுநாட்களாக சுத்தம் பண்ணவில்லை போலும் .அன்று உமாபதியுடன் வீட்டை பார்க்கும் போது கூட இதுபோல் சில அறைகள் திறக்கப்படாமலே இருந்தன .அவை எப்போதாவதுதான் திறந்து சுத்தப்படுத்த படும் என உமாபதி சொல்லியிருந்த்தால் அந்த அறைகளுக்குள. போகவில்லை . இப்போதும் தூசுக்கு பயந்து உள்ளே போகாமல் திரும்ப போனவளை , அங்கே வாசலுக்கு நேராக இருந்த பெரிய மர பீரோவின் கீழே காணப்பட்ட ஒரு வெள்ளை பரப்பு கவர ...என்னவாக இருக்கும் ...யோசனையோடு உள்ளே போய் எடுத்தாள் .

அது ஒரு பேப்பர் .முழு பேப்பர் இல்லை .பாதி கிழிந்திருந்த்து .அதில் ஏதோ எழுத்துக்கள் தெரிய , அந்த அறையின் மூடப்பட்ட இருளுக்குள் அது தெரியாமல் அறையை விட்டு வெளியே வெளிச்சத்திற்கு வந்தாள் .லேசான. வெளிச்சம் பேப்பரில் படவுமே தெரிந்து விட்டது .அது சரவணனின் கையெழுத்து .ஒரு பேப்பரின் கீழ் ஓரம் அது .கிழிந்த துண்டு .பிடித்து இழுத்து கிழித்தது போலிருந்த்து .

தகவல்கள் உறுதி செய்யப்பட்டன - சரவணன் .

இது மட்டும்தான் அதில் இருந்த்து . சரவணனின் கையெழுத்தோடு .ஆருத்ரா குழம்பினாள் ◌இது அண்ணனின் கையெழுத்தென்பதில் அவளுக்கு சந்தேகமில்லை . அது ...எப்படி ...இங்கே ...அதுவும் இப்படி கிழிபட்டு .ஒருவேளை சரவணன் இந்த அறையில்தான் தங்கியிருந்தானோ ...?

இது ...எதைப்பற்றி ...இப்படி எழுதியிருக்கிறான் ...? ஆருத்ரா மீண்டும் உமாபதி அறைக்குள் வந்தாள் .என்ன தேடுகிறாளென தெரியாமல் கொஞ்ச நேரம் அங்கிருந்த அலமாரிகளை உருட்டினாள் .சுவரோடு பதித்து வைத்திருந்த அந்த மர அலமாரியை தவிர மற்ற அனைத்தும் திறக்க வந்த்து .ஆனால் அவற்றினுள் ஆருத்ராவிற்கு எதுவும் கிடைக்கவில்லை .

பூட்டப்பட்டிருந்த அலமாரியினை திறக்கும் சாவி இல்லை .பாதி கிழிந்து கையிலிருக்கும் அந்த காகிதம் ஆருதராவினுள் ஏதோ ஓர் விபரீதத்தை சொன்னது .

உமாபதி வேட்டை நாயை போன்றவர் என்ற இந்திராவின் வார்த்தைகள் ஏனோ இப்போது நினைவில் வந்தன .ஆருத்ராவின் விரல்களில் மெல்லிய நடுக்கம் வந்த்து .மெல்ல நடந்து நிலா முற்றத்திற்கு வந்தவள் அங்கிருந்த ஊஞ்சலில் அமர்ந்தாள் .வானம் மெல்ல கருமை வாங்கிக் கொண்டிருந்த்து .மெல்லிய ஓடமென நிலா லேசாக தென்பட ஆரம்பித்திருந்த்து .

இருள் ஆரம்பிக்க போகும் அந்த நேரம் அன்று காலைதான் மணமுடித்திருந்த புது மணப்பெண்ணுக்கு  மயக்கத்தை ஊட்டாமல் ஆருத்ராவினுள் ஒரு கலக்கத்தை தந்த்து .ஊஞ்சலாடியபடி இந்திராவின் வார்த்தைகளை மெல்ல மனதிற்குள் கோர்க்க ஆரம்பித்தாள் .
அவனை திருமணம் செய்து கொள்ள ஆசை வைத்திருந்தவளையே அவனது திருமணத்திற்கு தாலி முடிய வைத்தானே ...உமாபதியின் சாணக்கியதனம் இப்போது அதிகமானதாக தோன்றியது .இது எதற்கான பழிவாங்கல் ...?இந்த வீட்டை ஹோட்டலாக்க நினைத்ததற்கானதா... ? அவன் சொத்துக்களை தொடுபவர்களை ...தொட நினைப்பவரகளை அவன் இப்படித்தான் பழி வாங்குவானா ...? இந்திரா பிச்சாவரக் காடுகளில் தங்களை தொடர்ந்து வந்ததன் காரணம் , உமாபதியை பற்றி எச்சரிக்கத்தானோ ....? அதை தடுக்கத்தான் உமாபதி தன்னை அத்தனை வேகமாக எங்கோ காட்டுக்குள் இழுத்து போனானோ ....? அங்கே போய் ...தொடர்ந்து அங்கே நடந்த நிகழ்வுகள் நினைவு வர , இந்த குழப்பத்திலும் ஆருத்ராவின் கன்னம் சிவந்த்து .
அங்கே அவன் அத்து மீறி நடந்து கொண்டானே ....ஆனால் நான் தடுத்ததும் விட்டு விடவும் செய்தானே ....இவனை எந்த கணக்கில் கொண்டு வர ...ஆருத்ரா குழம்பினாள் .ஆசையும் , காதலும் மண்டிக் கிடக்கும் உமாபதியின் மோகப்பார்வைகளும் , மயக்கு சிரிப்புகளும் அவனிடத்தலிருந்து முற்றிலும் தள்ளி வர முடியாமல் ஆருத்ராவை படுத்தின .
திடுமென அந்த மிகப் பெரிய வீடே , சிறு குகை போல் தோன்ற , மூச்சடைப்பது போல் உணர்ந்தாள் .கொஞ்ச நேரம் அந்த வீட்டை விட்டு வெளியே போனால் என்ன ....எனத் தோன்ற , இந்திரா கூப்பிட்ட தெருமுனை பிள்ளையார் கோவில் நினைவு வர சட்டென கிளம்பி விட்டாள் .

அந்த பெரிய வாசல் கதவை கடினத்துடன் நகரத்திய போது ,கமலா வந்துவிட்டாள் .
" எங்கேம்மா போகிறாய் ...? "

" பொழுது போகலை அத்தை .தெருமுனை பிள்ளையார் கோவில் வரை போய்விட்டு வருகிறேன் "

" உமா வந்த்தும் அவனுடன் போகலாமே ..."

" அவர் வர லேட்டாகும் .நான் அதற்குள் வந்துவிடுவேன"

வாசல் கேட்டில் மீண்டும் வாட்ச்மேனால் தடுக்கப்பட டாள் ." தனியாக எங்கேயும் போகாதேம்மா ..."

" நான் என்ன சின்னப்பிள்ளையா ....? இதோ இந்த தெரு முனைக்கு போக துணை எதற்கு ...? கதவை திறந்து விடுங்க தாத்தா ...." பின்னாலேயே கமலாவும் வந்து விட இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர. பிறகு ஒரு முடிவு போல் " சரிம்மா மணியை கூட்டிட்டு போ .உனக்கு துணையாகவும் இருக்கும் .அவனுக்கு வாக்கிங் போலவும் இருக்கும் ...." வாட்ச்மேன் மணியை அவிழ்த்து விட , முன்பொரு முறை இதுபோல் நாயை தனக்கு துணை அனுப்பியது ஆருத்ராவிற்கு நினைவு வந்த்து .

அது காவலா ....அல்லது கண்காணிப்பா ...? அன்று அவளிடம் பேச வந்த மனோகர் இந்த நாயை பார்க்கவும் பதறி ஓடியது நினைவு வந்த்து .மௌனமாக மணியின் கழுத்து சங்கிலியை பிடித்தவள் அதனை ஓரமாக கூட்டிப்போய் அதை கட்டிப் போடும் இடத்தில் பிணைத்தாள் .

" நான் தனியாகத்தான் போகப் போகிறேன் " அறிவித்து விட்டு நடந்தவளின் முன்னிருந்த காம்பவுண்ட் கேட் பூட்டு போடப்பட டது .

" தனியாக எங்கேயும் போக முடியாது .உள்ளே போங்க ..." இந்த அளவு அதிகாரத்தை வாட்ச்மேனின் குரலில் முன்பு கண்டதில்லை .ஆருதரா கமலாவை பார்க்க அவள் இவளின் கையை பிடித்து இழுத்தாள் .

" உள்ளே வாம்மா .உமா வந்தபிறகு வெளியே போகலாம் ..." கிட்டதட்ட அவளை வீட்டினுள் இழுத்து சென்றாள் .வேறு வழியின்றி அவளது இழுவைக்கு உள்ளே போன ஆருத்ராவின் மனம் வேதனையில் அழுத்து.ஆக ...இந்திரா சொன்னது நிஜம்தான் .அவள் இங்கே சிறை வைக்கப்பட்டிருக்கிறாள் .காரணம் என்ன ....?

சரவணன் மேலுள்ள கோபமோ ...? அதற்காகத்தான் என்னை சிறை வைத்தானா ....? அப்படியெனில் எதற்கு திருமணம் செய்தான் ....? முதலில் சரவணனுக்கு என்னவாயிற்று ...? அவனை எங்கே ...? ஒருவேளை இவன் ....உமாபதி சரவணனை கொன்றுவிட்டானோ ....? ஆருத்ராவின் உடல் தூக்கி போட்டது .

இல்லை ...உமாபதி அந்த அளவு கொடூரமானவன் கிடையாது .தன்னை தானே சமாதானப்படுத்திக் கொண்டாள் . தன் கையை இறுக பற்றி

வீட்டினுள் இழுத்த கமலாவை முறைத்தாள் . பட்டென தன் கையை உருவிக்கொண்டு தன் அறைக்குள் நுழைந்து கொண்டாள் . இவர்களிடம் பேசி பயனில்லை .இவர்கள் ஏவலாள்களள. ஆருத்ரா ஏவியவனுக்காக காத்திருந்தாள் .அவனோ அன்று இரவு முழுவதும் வரவில்லை .காத்திருந்து சோர்ந்து இறுதியில் ஆருத்ரா தன் அறையில் போய் படுத்து விட்டாள் .

இனி உமாபதி வரமாட்டோனோ ...தன்னை இங்கே சிறை வைத்து விட்டு அவன் எங்கோ போய்விட்டானோ ...என்று கூட ஆருத்ராவிற்கு தோன்ற தொடங்கிவிட்டது .ஆனால் அவள் பயம் தேவையற்றது எனபது போல் உமாபதி திரும்பிவிட்டான் .

அதிகாலை விடிய ஆரம்பித்து விட்ட போது ,உமாபதி வீடு திரும்பினான் .வந்தவுடன் தனது புத்தம் புது இளம் மனைவியை புதுக் கணவனின் வேகத்துடன் தேடி வந்தான் .

13

உமாபதி வரும் போது விடிய ஆரம்பித்து விட்டாலும் வானம் இன்னமும் கருமையை இழக்கவில்லை .ஆருத்ரா இரவு முழுவதும் காத்திருந்து சோர்ந்து அப்போதுதான் சிறிது விழி மூடியிருந்தாள் .அரை குறை தூக்கத்தில் ஹீரோவாக , வில்லனாக உமாபதி பலமுகம் காட்டி கனவிலும் அவளை இம்சித்துக் கொண்டிருந்தான் .

முதலில் உமாபதியின் மெல்லிய அழைப்பு கேட்டபோது , அதுவும் கனவென்றுதான் ஆருத்ரா நினைத்தாள் ."போடா ...நீ ரொம்ப கெட்டவன் ..".உதட்டிற்குள் முனகியபடி புரண்டு படுத்தாள. இப்போது மென்மையாக அவள் தலை வருடப்பட" ம் ....ஒன்றும் வேண்டாம் , போ ...." அவனது கையை தள்ளிய போது உணர்ந்த நிஜ ஸ்பரிசத்தில் விதிர்த்து விழி திறந்தாள் .

கனவல்ல , உமாபதி நிஜமாகவே அவளருகில் அமர்ந்திருந்தான் .தூக்கத்தில் முணுமுணுத்த அவள் இதழ் பேச்சை கேட்கும் பொருட்டோ என்னவோ அவள் முகத்தருகே மிக குனிந்து அவளை ஒட்டியபடி அமர்ந்திருந்தான் .

" ஆரு செல்லம் ,என்னடா ...பயந்துட்டியா ...? தூக்க கலக்கமா ...? என்னென்னவோ உளர்ற ....? " பேச்சோடு பேச்சாக அவன் இதழ்கள் அவள் கன்னம் வருடின .

" சை விடுங்க என்னை .." தள்ளினாள் .

" ஏய் என்னடா ...இங்கே பார் .நான்தான்டா ....உன் உமா ...." தூக்க கலக்கமென அவளை தெளிய வைக்க முனைந்தான் .

" விடுங்க ...என்னை தொடாதீங்க "

" நேற்று தீடீரென போய்விட்டேனென்ற கோபமா செல்லம் ...? ஒரு அவசர வேலைடா ...இல்லையென்றால் அப்படி...அந்த நேரத்தில் ...உன்னை விட்டு போவேனா ..ம் ...எத்தனை நாட்களாக காத்திருந்த நேரம் அது ...இப்படி வீணாகி விட்டதே ....?.அதனால் என்ன ....இனி எப்போதும் நம் நேரம்தான் ...." சொன்னதோடு அவளது தள்ளல்களை பொருட்படுத்தாது அவளை இறுக அணைத்து தனக்குள் புதைத்துக் கொள்ள தொடங்கினான் .

" அப்படி அவசரமாக போய் எங்கே ...யார் குடியை கெடுத்து விட்டு வந்தீர்கள் ....? " நிதானமாக ஆருத்ரா இந்த கேள்வி கேட்டபோது உமாபதி அவள் கன்னத்தில் இதழ் பதித்து கொண்டிருந்தான் .கேட்க கேட்கவே அவளது கேள்வியின் தீவிரத்தின் தாக்கம் அவனது இதழிலும் தெரிய அந்த இதழ் ஒற்றலின் இறுதியில் க ன்னங்கள் கன்றி சிவந்தன .உதடுகளால் கூட இப்படி காயப்படுத்த முடியுமா ...எரிந்த கன்னத்தை வருடியபடி யோசித்தாள் ஆருத்ரா .

" என்னடி கேட்ட ....? " எரிந்து கொண்டிருந்த கன்னத்தில் இப்போது வலுவாக பற்றியிருந்தன அவன் விரல்கள் .அப்படியே அவள் முகத்தை உலுக்கினாள் .

" யார் வாழ்க்கையை கெடுத்து விட்டு வந்தீர்களென கேட்டேன் ..." உள்ளூர பயமிருந்தாலும் இந்த கேள்வியை கேட்க ஆருத்ரா தயங.கவில்லை .

அறைக்குள் பரவியிருந்த அரை இருளில் அவள் முகத்தை உற்று பார்த்தவன் " என்ன விசயம் ஆரா .? என்றபோது அவன் குரல் பழையமாதிரி அவளுக்கானதாக கொஞ்சலாய் , குழைவாய் மாறியிருந்த்து .விரல்களும் கன்னத்தை மென்மையாக நீவ ஆரம்பித்தன .

இவன் ...இப்படித்தானே ...கொஞ்சலும் ...தடவலுமாக என்னை இத்தனை நாட்களாக ஏமாற்றி வந்தான் .அவமானத்தோடு நினைத்துக் கொண்டவள் ....

" கையை எடு ....தள்ளி உட்கார் ..." குரலை உயர்த்தி சீறினாள் .

அவளது செல்லமான " டா " வை கூட ரசித்தவன்தான் . ஆனால் இந்த ஆத்திர ஒருமையை ரசிக்க முடியாமல் முகம் சினந்தான் .மெல்ல அவளை விட்டு தள்ளி அமர்ந்தான் .

" என்ன விசயம் சொல்லு ...? " அவன் குரல் மரத்திருந்த்து .

" எதற்காக இந்த நாடகம் ...யாரை ஏமாற்ற ....என் அண்ணனையா

....அவரை எங்கே ....உயிரோடு வைத்திருக்கிறாயா ...கொன்றே விட்டாயா ...? " தன் கழுத்திலிருந்த தாலி சங்கிலியை உயர்த்தி காட்டியபடி கேட்டாள் .

உமாபதி பதில் சொல்ல தெரியாமலேயோ , என்ன பதில் சொல்வது என்ற யோசனையுடனோ மௌனமாக அவளை பார்த்தபடி இருந்தான் .
" சொல்லு , என் அண்ணனை கொன்றுவிட்டு அதனை மறைப்பதற்காக என்னை இங்கே சிறை வைத்திருக்கிறாயா ...? நான் போலீஸ் வரை போய் சட்டப்படி எந்த நடவடிக்கையும் எடுத்து விடக் கூடாதென்றுதானே ...இந்த நாடகம் நடத்தினாய் ....? "

ஆருத்ராவின் கையில் உயர்த்தி பிடித்து ஆட்டப்பட்டுக் கொண்டிருந்த தாலி செயினை பார்த்தான் உமாபதி .பின் நிதானமாக அவள் கையிலிருந்து தாலியை வாங்கி , அவள் சேலை தலைப்பை நெகிழ்த்தி அதனுள் போட்டான் .

" விளையாட்டு சாமானல்ல அது .பத்திரமாக நெஞ்சினோரம் பொத்தி வைத்துக் கொள்ள வேண்டியது .இன்னொரு முறை இப்படி செய்யாதே ..." அதிகாரமாக சொன்னான் .

அடாதவைகள் செய்து விட்டு என்ன அதிகாரம் இவனுக்கு ...? அப்படி என்ன எல்லோருமே இவனை கண்டதும் நடுங்குவார்களென திட்டவட்டம் ....?

" ஆமாம் ....உன்னை போலீசிலிருந்து காப்பற்ற கூடியதல்லவா ....உனக்கு தெய்வத்தை பார்த்தது போலத்தான் அந்த தாலி தெரியும் ...."
" ஏன் அப்படி ...? " கவனமாக தலை சாய்த்து கேட்டவனின் தலையில் நங்கென கொட்டும் ஆவலை தன் விரலை தானே பிடித்து அடக்கிக் கொண்டாள் .

" இந்த தாலியை என் கழுத்தில் கட்டியிருப்பதால் தானே , நான் உன்னை பற்றி யாரிடமும் குற்றம் சொல்லாமல் உன் பேச்சை கேட்டுக் கொண்டிருப்பேனென நினைக்கிறாய் ....? "

" அப்படி இருக்க போகிறாயா என்ன ....? "

" நிச்சயமாக இல்லை .என் அண்ணன் மீதிருக்கும் பாசத்தையும் , என் நியாய சிந்தனைகளையும் , என் சுதந்திர போக்கையும் ...கேவலம் இந்த பத்து பவுன் செயினால் கட டுப்படுத்த முடியாது ...."
" ம் ....பிறகு இதில் என் வெற்றி எங்கே இருக்கிறது ...? " எள்ளலான இதழ் வளைவுடன் அவன் கேட்ட கேள்வி ஆருத்ராவை குழப்பியது .
அதுதானே ....அவன் அப்படி நினைத்து தாலி கட்டினானென்றால் ,

அவள் அதற்கு கட்டுப்பட்டால் தானே ....அவன் நினைவு நிறைவேறும் .அவள் அப்படி இல்லையெனும் போது ...இது வெறும் பொன் சங்கிலிதானே ....? ஆனால் ....பிறகு ஏன் இந்த தாலியை கட்டினான் . உமாபதி இம்மியும் பார்வையை நகற்றாமல் அவள் முகத்திலேயே விழி பதித்திருந்தான் .அடுத்ததை கேள் என்பதான முக பாவனையுடன்.

" என் அண்ணனை என்ன செய்தாய் ....? "

" நான் அவனை ஒன்றும் செய்யவில்லை .அவன்தான் என்னை ஏமாற்றிவிட்டு ஓடிவிட்டான் " உமாபதியின் பற்கள் நெறிபடும் சத்தம் கேட்டது .

அந்த சத்தம் ஆருத்ராவினுள் குளிர் பரப்பியது .உமாபதி வேட்டை நாயை போன்றவர் ...இந்திராவின் குரல் உள்ளுக்குள் ஒலித்தது . அண்ணனை பழி வாங்கத்தான் இவன் என்னை சிறை வைத்திருக்கிறானா ....? பிறருக்கு சந்தேகம் வராமலிருக்கத்தான் இந்த மனைவி என்ற ஸ்தானம் தந்தானா ....?

" பொய் ...என் அண்ணன் அப்படி செய்யமாட்டார் .நீ பொய் சொல்கிறாய் ...." கத்தினாள் .

உணர்ச்சியற்ற பார்வையுடன் அவளை பார்த்தபடி மெல்ல தலையசைத்தான் அவன் .சரியென்கிறானா ...? இல்லையென்கிறானா ....? அந்த தலையாட்டலின் அர்த்தத்தை ஆருத்ராவால் புரிந்து கொள்ள முடியவில்லை .

" எங்கள் பரம்பரை சொத்து ஒன்றை ஆராய்ச்சி என்ற பெயரோடு வந்த உன் அண்ணனை நம்பி கொடுத்தேன் .அவன் அதனை தூக்கிக் கொண்டு ஓடிவிட்டான் ."

" நான் நம்பமாட்டேன் .சரவணன் அதனை ஆராய்ச்சிக்காகத்தான் எடுத்திருப்பான் .அது உனக்கும் தெரியும் .இதோ பார் .என் அண்ணன் எழுதிய கடிதம் .இதனை நீதான் பிடுங்கி கிழித்திருக்கிறாய் ...." தான் கண்டெடுத்த துண்டு பேப்பரை எடுத்து காட்டினாள் .

" இது எங்கே கிடைத்தது ...? " மெல்ல கேட்டவன் நொடியில் அந்த பேப்பரை அவள் கையிலிருந்து பிடுங்கிவிட்டிருந்தான் .ஆருத்ரா திகைப்பில் இருக்கும் போதே அதனை மடித்து தன் பேன்ட் பாக்கெட்டினுள் திணித்துக் கொண்டவன் ,...

" இரவு முழுவதும் உன் அண்ணனை தேடித்தான் அலைந்து கொண்டிருந்து விட்டு வந்திருக்கிறேன் ஆருத்ரா .ரொம்ப டயர்டாக இருக்கறது .ஒரு இரண்டு மணி நேரம் தூங்கிவிட்டு வருகிறேன் .நாம் பிறகு பேசலாம் " ஒன்றும் நடவாத்து போல் வாசலை நோக்கி நடக்க

ஆரம்பித்தான் .

எவ்வளவு திமிர் ...அவள் ஆதாரமென வைத்திருந்த ஒரே பொருளையும் கண் மூடி முழிப்பதற்குள் எளிதாக பிடுங்கிக் கொண்டுவிட்டு , ஓய்வெடுக்க போகிறானாம் .என்ன தைரியம் ....இவனை .... அவனை நோக்கி பாய்ந்து எட்டி அவன் தோள்களை பற்ற முயன்று தோற்று , கைக்கு கிட்டிய அவன் மார்பில் அடிக்க தொடங்கினாள் ." அந்த பேப்பர் எனக்கு வேண்டும் ...கொடு " சொன்னதோடு அவன் பேன்ட் பாக்கெட்டிலிருந்து அதனை எடுக்க முனைந்தாள் .
" முடிந்ததா ....? " கேட்ட அவன் குரலில் கலந்திருந்த போதையில் நிமிர்ந்து அவன் முகத்தை பார்த்தவள் திகைத்தாள் .இவனை ...திட்டிக் கொண்டிருக்கிறேன் ....அடித்து கொண்டிருக்கிறேன் ....பிறகு ஏன் இப்படி என்னை பார்க்கிறான் .அவன் மோக பார்வையின் வேகம் தாங்காமல் தவித்தபடி தன்னை பார்த்தவள் திடுக்கிட்டாள் .

அந்த பேப்பரை எடுக்கும் நோக்கத்தில் மற்ற நினைவின்றி முழுதுமாக அவன் மேல் சரிந்திருந்தாள் .கிட்டதட்ட அவனை ஆர தழுவியிருந்த நிலை .அந்த நிலைதான் அவனுக்கு இப்படி ஒரு போதையை அளித்திருக்கிறது .

" இப்படித்தான் நீ என்னை நிறைய நேரங்களில் தடுமாற வைக்கிறாய் ஆரா ..." அவன் விரல்கள் அவள் இதழ்களை வருடியது .

அழுத்தி அவன் நெஞ்சில் கை வைத்து அவனை தள்ளினாள் ." போ ....போய்விடு .என் முன்னால் நிற்காதே ...." கத்தியபடி பின்னடைந்தவள் அப்படியே தரையில் அமர்ந்து அழத் துவங்கினாள் .

அந்த அழுகை ஒரே ஒரு அரை நொடி அவனது வருடலில் சிலிர்த்து விட்ட தனது தேகத்தின் பலவீனத்திற்கும் சேர்த்துத்தானிருந்த்து . முழங்கால்களில் முகத்தை புதைத்தபடி அழுது கொண்டிருந்தவளை பெருமூச்சுடன் பார்த்தபடி நின்றவன் , பின் மெல்ல நடந்து போய் ஒரு ஸ்டூலை எடுத்து வந்து அவளுக்கு எதிராக போட்டு அதில் உட்கார்ந்து கொண்டான் .

" சொல் ஆருத்ரா .எல்லாவற்றையும் இப்போதே பேசி முடித்து விடுவோம் " என்ற போது அவனது குரலில் உறுதி தெரிந்த்து . சமாளித்து அழுகையை அடக்கிக் கொண்டு கன்னங்களை துடைத்துக் கொண்டு நிமிர்ந்தாள் ஆருத்ரா .

" சரவணனுக்கும் , உங்களுக்கும் என்ன தகராறு ...? அவனை இப்போது எங்கே ...? "

" பரம்பரை பரம்பரையாக எங்கள் வீட்டிற்கான சொத்து ஒன்று ....ஒரு மரகதலிங்கம் .அதனை ஏதோ பழைய ஓலைசுவடி குறிப்புகளிலிருந்து அறிந்து கொண்டு சரவணன் இங்கு தேடி வந்தான் .அதன் பழைமையை ஆராய விரும்புவதாக கேட்டான் .நம்பி கொடுத்தேன் .எடுத்துக் கொண்டு ஓடிவிட்டான் ."

" அது போன்றவை அரசாங்க சொத்துக்களல்லவா ....அரசாங்கத்திடம் ஒப்படைக்க அண்ணன் எடுத்து போயிருப்பான் ...."

" நான் விசாரித்த வரை அப்படி இல்லை .அவன் அதை வெளிநாட்டிற்கு விற்க ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கறான். நான் அவனை தேடிக் கொண்டிருக்கிறேன் . இவ்வளவுதான் எங்களுக்குள் ...."

" இதில் நான் எங்கே வருகிறேன் ....? நீங்கள் சரவணனுக்கு விரித்த வலையில் பொறியா நான் ....? " ஆத்திரத்துடன் கேட்டபடி நிமிர!ந்து பார்த்தவள் அதிர்ந்தாள் .

தன் பேன்ட் பாக்கெட்டிலிருந்து சிகரெட் ஒன்றை எடுத்து பற்ற வைத்துக் கொண்டிருந்தான் உமாபதி .அவன் சிகரெட் பிடிப்பவனென்பது ஆருத்ராவிற்கு தெரியும் .நிறைய நேரங்களில் அவனிடம் சிகரெட் வாடையை நுகர்ந்திருக்கிறாள் .ஆனால் அவள் முன்பு பிடித்ததில்லை . ஒரு முறை சிக்ரெட் பிடித்துக் கொண்டிருந்தவன் கூட அவளைக் கண்டதும் கீழே போட்டு மிதித்திருக்கிறான் .புகையை கைகளால் விரட்டியபடி இவளிடம் சாரி கேட்டிருக்கிறான் .

அன்று அதை அவன் தனக்கு தந்த கௌரவமாக கருதி பெருமிதப்பட்டாள் .ஆனால் ...இன்றோ , உன் நினைவை பற்றிய கவலை எனக்கில்லை , என்ற அலட்சியத்தோடு அவள் எதிரிலேயே சிகரெட் பிடித்தபடி அலட்சியமாக அமர்ந்திருந்தவன் , அவளுக்கு ஒரு பக்கா வில்லனாக தோற்றமளித்தான் .

## 14

" சரவணன் உங்கள் பரம்பரை சொத்தை திருடி விட்டதாக எதை வைத்து சொல்கிறீர்கள்....? "

கேள்வியை தன்னிலிருந்து அண்ணனுக்கு திருப்பிக் கொண்டாள் .இது போல் அவன் தன்னை அலட்சியம் செய்து அமர்ந்திருக்கும் தருணமொன்றில் , தன்னை பற்றியே பேச விரும்பவில்லை அவள் .

" விலை மதிப்பற்ற பொக்கிசம் அந்த மரகதலிங்கம் . அதன் வயது எனக்கே தெரியாதே .அதனை சில ஆராய்ச்சிகளின் மூலம் கண்டறியலாம் என சொன்னான் உன் அண்ணன் .அது தேவையா ...எனக் கேட்டதற்கு , அதன் பழமைதான் அதன் மதிப்பை தீர்மானிக்கும்

என்றான் .என் மூதாதையரின் பூர்வீக பொக்கிசம் ஒன்றின் வயதை கண்டறிய நானும் ஆர்வமானேன் .அதனால் அவனை இங்கேயே தங்கி ஆராய சொன்னேன் ."

" இது போல் பழமைகளை கண்டறிவதில் சரவணன் எப்போதுமே திறமையானவன் .அவனது திறமைகளை கண்டறிய உங்களுக்கு தெரியாது "

" அவன் திறமையை அறிந்து கொண்டதால்தான் , கோடிகளை தாண்டும் அந்த மரகதலிங்கத்தை அவன் வசம் நம்பி கொடுத்திருந்தேன. அவனும் நம்மிக்கையாகத்தான் .அந்த மனோகரை சந்திக்கும் வரை ...."
" மனோகர் ....அவர்தான் என்னை முதன் முதலில்  இங்கே கொண்டு வந்துவிட்டார் "

" தெரியும் .அப்போது நீ சரவணனின் தங்கையென மனோகருக்கு தெரியாது . தெரிந்திருந்தால் அப்போதே உன்னை சரவணனிடம் கொண்டு போயிருப்பான் .நாமும் சந்திக்க முடியாமலேயே போயிருக்கும் ..." வாயிலும் , நாசியிலும் நூலாக புகை கசிய ஆருத்ராவை பார்த்தவனின் பார்வையில் சிறு கலக்கம் தெரிந்த்து . இத்தனை நாட்களாக அவனுடன் நெருங்கி பழகிய வரையில் ,இப்போதைய உமாபதியின் மனநிலை அவளை அள்ளி இறுக அணைத்துக் கொள்வதாக இருந்த்தை ஆருத்ரா உணர்ந்தாள் . உதட்டை மடித்து கண்களை இறுக மூடி திறந்து அவனை பார்த்த போது , அவன் முகம் சாதாரணமாகத்தான் தெரிந்த்து .பிரமை ...என தன்னைத் தானே கடிந்து கொண்டாள் .

" மனோகர் இங்கே ஒரு தங்க நகை ஆசாரி மகன் .அவன் மட்டுமல்ல ....அவன் தந்தை ....அவன் தாத்தா என பரம்பரை பரம்பரையாக எங்கள் வீட்டு மரகதலிங்கத்தை பற்றி அறிந்து வைத்திருக்கிறார்கள் .எந்த அளவுக்கென்றால் ஒரு மண்டலத்திற்கு அந்த லிங்கத்தை பால் அபிசேகம் செய்து தொடர்ந்து அந்த பாலை அருந்தி வருபவர்களுக்கு , பல உயிர்கொல்லி நோய்கள்  குணமாகுமாம் .எங்கள் குடும்பத்தினரே அறியாத உண்மை இது ."
ஆருத்ராவின் விழிகள் அகன்றன ." உண்மையா இது ...? "

" தெரியாது .உன் அண்ணனும் ஆமாம் என்றான் .ஏதேதோ ஓலைச்சுவடி ஆதாரம் காட்டினான் .பச்சை வண்ணத்தில் இருப்பதால் அது மரகதலிங்கம் இல்லை .ஏதோ மூலிகை லிங்கம் என்றான் .அதனை இன்னமும் தீவிரமாக ஆராய வேண்டுமென்றான் .நானும் சம.மதித்தேன் ."

" இங்கேயே அவனது ஆராய்ச்சி க்குரிய அனைத்து ஏற்பாடுகளும் செய்து கொடுத்தேன் . என்னென்னவோ செய்து கொண்டிருந்தவன் , தீடீரென ஒருநாள் அந்த லிங்கத்தை வெளியே எடுத்து போய் சிலரிடம் காட்ட வேண்டுமென்றான் .நான் மறுத்தேன் .யாராக இருந்தாலும் இங்கேயே அழைத்து வந்து காட்டும்படி சொன்னேன் .அவனுக்கு கோபம் வந்த்து . இது அரசாங்க சொத்து .நீங்கள் வைத்திருப்பதே சட்டவிரோதமானது .நான் ஒரு வார்த்தை சொன்னால் கவர்ன்மென்டிலிருந்து இந்த லிங்கத்தை வாங்கிக் கொள்வார்களென மிரட்டினான் ...."

" அது உண்மைதானே .இது போல் ஒரு அரிய பொக்கிச பொருள் அரசாங்கத்தைத்தானே சேர வேண்டும் .அப்படியே இதில் மூலிகைகள் இருந்தாலும் அது அரசாங்கம் மூலம் மக்களைத்தானே சேரவேண்டும் "
" நான்றிந்து ஐந்து நலைமுறைகளாக பாதுகாத்து வந்த எங்கள் குல சொத்து ஆருத்ரா .அத்தனை எளிதாக அதனை அரசாங்கத்திற்கோ , ஊருக்கோவென தூக்கி கொடுத்து விடுவேனென நினைத்தாயா ...? " உமாபதி முடிந்து கொண்டிருந்த சிகரெட்டிலிருந்தே மற்றொன்றை பற்ற வைத்தான் .

" அதானே ...அப்படிப்பட்ட பரோபகாரியா நீ ...? உன் புத்தி தெரிந்துதான் உன்னிடமிருந்து அதனை சரவணன் பிடுங்கிக் கொண்டு போயிருப்பான் " வெறுப்போடு பேசினாள் .

" பிடுங்கிப் போய் கவர்ன்மென்டிடம் கொடுத்திருந்தால் பரவாயில்லை .இவன் அதனை வெளிநாட்டிற்கு விற்க திட்டமிட்டான் "

" இல்லை .இது பொய் .நான் நம்பமாட்டேன் .சரவணன் அப்படி பட்டவனில்லை " உணர்ச்சி வசப்பட்டு எழுந்து நின்றாள்
" நீ நம்பவேண்டுமென்ற வேண்டுதலோடு நான் இதை சொல்லிக் கொண்டிருக்கவில்லை .புரிகிறதா ...? இப்போது எதற்கு ஸ்பிரிங் போல் துடித்துக் கொண்டு நிற்கிறாய் .முதலில் உட்கார் " அதட்டினான் .
ஆருத்ராவிற்கு வந்த ஆத்திரத்திற்கு அப்போதே அவன் முகத்தில் விழிக்காமல் அந்த வீட்டை விட்டு ஓடியிருக்க வேண்டும் .ஆனால் அதுதான் முடியாதே ...ஆத்திரத்தை அடக்கியபடி மீண்டும் அமர்ந்தாள் .
" பணம் ...எப்படிப்பட்ட மனிதனின் நல் மனதையும் மாற்றி விடும் ஆருத்ரா .மனோகரின் தொடர் உபதேசத்தால் உன் அண்ணன் மனம் பிறழ்ந்து விட்டான் . நான் கொஞ்சம் அசந்திருந்த ஒரு நேரத்தில் அந்த மரகதலிங்கத்துடன் ஓடிவிட்டான் . நான் போலீசுக்கு போக முடியாது .விசாரணையின் பிறகு அந்த லிங்கம் அரசாங்கத்தின் கைக்கு

போனாலும் போய்விடும் .அதனால் நானே ஆட்களை வைத்து அந்த லிங்கத்தை ...உன் அண்ணனை தேடிக் கொண்டிருக்கிறேன் .நேற்று இரவு கூட சரவணன் இங்கே பக்கத்திலிருக்கும் ஒரு சிறிய ஊரில் இருப்பதாக தகவல் வந்த்து . இரவு முழுவதும் அந்த ஊரில் ஒவ்வொரு வீடாக அவனைத்தான் தேடிக்கொண்மிருந்தேன்"

" இதையெல்லாம் நான் நம்பவேண்டுமா ....? "

" அது மாதிரி வேண்டுதலெதுவும் எனக்கு இல்லையென்றுதான் முன்பே சொன்னேனே ...."

" சோ ....என் அண்ணனை உன்னிடம் வரவழைக்க தூண்டில் முள்ளாய் என்னை இங்கே இழுத்து வந்தாய் .இப்போதும் என் அண்ணனை எதிர்பார்த்துதான் என்னை இங்கே அடைத்து வைத்திருக்கிறாய் ...அப்படித்தானே ....? "

" நானா உன்னை வரவழைத்தேன் ....? நன்றாக யோசித்து பார் ஆருத்ரா ...." உமாபதி சிகரெட் புகையை வானத்திற்கு ஊதினான் .

இல்லையே ....இவன் ....வேண்டாமென்றுதானே மெயில் அனுப்பியிருந்தான் .நான்தானே அவசரப்பட்டு வந்தேன் ....? குழம்பினாள் .

" எல்லாவற்றையும் சொல்லிவிட்டேன் .இனி சொல்ல ஒன்றுமில்லை .நான் போய் தூங்க போகிறேன் ...." சிகரெட்டை காலடியில் போட்டு நசுக்கி விட்டு எழுந்தான் .

எல்லாம் சொல்லி விட்டானா ....? முழுவதும் சொன்னது போன்றும் , ஒன்றுமே சொல்லாத்து போன்றும் தோன்றியது ஆருத்ராவிற்கு .
" இல்லை , எனக்கு இன்னமும் நிறைய விளக்கங்கள் தரவேண்டும் ...." எழுந்து நின்று சோம்பல் முறித்துக் கொண்டிருந்தவனை அண்ணாந்து பார்த்து கேட்டாள் .

" என் வரையில் எல்லா விளக்கங்களும் கொடுத்தாயிற்று. இனி உனக்கான தெளிதலை நீதான் பெற்றுக் கொள்ளவேண்டும் .உன்னிலிருந்தே ...." தெளிவாக அவளை குழப்பிவிட்டு கதவை நோக்கி நடந்தான் .

" நில்லுங்கள் .இன்னமும் எனக்கு நிறைய சந்தேகங்கள் இருக்கிறது ..." நின்று அவளை திரும்பி பார்த்தவன் மீண்டும் அவளை நோக்கி வந்தான் .விநாடியில் குனிந்து அவளை கைகளில் அள்ளி தூக்கிக் கொண்டான் .
" மூளைக்கு ஓய்வு கொடுத்தாலே நிறைய சந்தேகங்கள் முடிவுக்கு வந்துவிடும் .முதலில் சிறிதுநேரம் தூங்கு . பிறகு பேசலாம் ..." அவளை மென்மையாக கட்டிலில் கிடத்தினான் .

சட்டென்ற அவனது ஸ்பரிசத்தில் மெய் சிலிர்த்து கிடந்தவள் , படுக்கையில் படுக்க வைத்ததும் உடன் விலகாமல் , அவள் முகம் பார்த்தபடி நெருங்கிய அவன் முகத்தை விரிந்த விழிகளால் பார்த்தாள் .மிக நெருங்கவும் அவனிடமிருந்து வந்த சிகரெட் நெடியில் முகம் மாறியவள் அவனை தள்ளினாள் .

" சை ...நாற்றம் .தள்ளி போங்க ..." வெறுப்பாய் முகம் திருப்பியவளின் கன்னத்தில் வலுக்கட்டாயமாக இதழை அழுத்தமாக பதித்தவன் , சட்டென நிமிர்ந்தான் .

" சாரி ...இனி இந்த நாற்றத்தை தவிர்க்க பார்க்கிறேன் .அதனால் இப்போதிற்கு இத்தோடு நிறுத்திக் கொள்கிறேன் ...." சொல்லிக் கொண்டிருக்கும் போதே " ப்ச் " என அடுத்த கன்னத்திலும் இதழ்களை பதித்து நிமிர்ந்தான் .ஆருத்ரா கண் சிமிட்டி விழிக்கும் முன் அறைக் கதவை மூடிவிட்டு வெளியேறியிருந்தான் .

----------------------

" என்ன நன்றாக யோசித்தாயா ...? என்ன முடிவுக்கு வந்தாய் ....? " உப்பலாய் இருந்த சூடான பூரிகளில் இரண்டினை ஆருத்ராவின் தட்டில் எடுத்து வைத்தபடி கேட்டான் உமாபதி .

" அந்த மனோகர் வேண்டுமானால் பணத்தாசை பிடித்தவனாக இருக்கலாம் .ஆனால் சரவணன் நிச்சயமாக அப்படி பட்டவனில்லை .நீங்கள் சொன்னது முழுவதுமே தவறு .என் அண்ணன் எப்போதும் சரியானவன்தான் "

அலுப்பான மூச்சு ஒன்றினை மெலிதாக வெளியேற்றினான் உமாபதி ." இதைத்தான் இவ்வளவு நேரமாக சிந்தித்துக் கொண்டிருந்தாயா ....? "

" உங்களால் குற்றவாளியாக்கி நிறுத்தப்பட்டிருப்பது என் அண்ணன் .அவனை பற்றி யோசிக்காமல் வேறு என்ன யோசனை வரும் ....? இதோ இந்த நிமிடம் வரை அதை மட்டும்தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன் "

" ம் ....உருளைக்கிழங்கை பூரிக்குள்தானே உனக்கு வைக்க வேண்டும் ....? " கேட்டபடி உப்பலாயிருந்த பூரிகளுக்குள் துளையிட்டு கிழங்கை இட்டு நிரப்பினான் ." சாப்பிடு "

" அந்த பேப்பர் விசயம் என்ன ...? " ஆருத்ரா பூரியை மடித்து பிய்த்து வாய்க்குள் வைத்துக் கொண்டாள் .

" எந்த பேப்பர் ....? " உமாபதி தனக்கு பரிமாறிக் கொண்டான் .

" காலையில் என் கையிலிருந்து பிடுங்கிக் கொண்டு போனீர்களே அந்த பேப்பர் ...."

உமாபதி மௌனமாக சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

" உங்களைத்தான் கேடகிறேன் .அப்படி அவசரமாக பிடுங்கி வைத்துக் கொள்ளுமளவு அதில் என்ன இருந்த்து ....? "

" நீதான் படித்தாயே ....புரியவில்லை உனக்கு ...? "

" புரியாமல்தானே கேட்கிறேன் ..." குரலுயர்த்தினாள் .

" சித்தி இன்னமும் இரண்டு பூரி ...." அடுப்படியை பார்த்து குரல் கொடுத்தான் .

" என்னை பார்த்தால் உங்களுக்கு எப்படி தெரிகறது .நான் பேசிக்கொண்டே இருக்கிறேன் .நீங்கள் பாட்டுக்கு சாப்பிட்டுக் கொண்டே இருந்தால் எப்படி ...? "

" இப்போது  என்ன சொல்கிறாய் ...? என்னை சாப்பிடாமல் எழுந்து போ என்கிறாயா ....? " எரிச்சலாக கேட்டவன் , பூரியோடு வந்த கமலா கூப்பிட கூப்பிட எழுந்து போய்விட்டான் .

" என்னம்மா புருசன் மனசறிஞ்சு பரிமாற வேண்டாம் .கோப்பபடுத்தி எழுந்து போக வைக்காமலிருக்கலாமில்லையா ....? " கமலா குறைபடவும்தான் தான் அவன் தட்டை கவனிக்காத்து நினைவு வந்த்து ஆருத்ராவிற்கு .

புருசன் என்றால் பக்கத்திலிருந்து பவ்யமாக பரிமாறத்தான் வேண்டுமா என்று உள்ளிருந்து எழுந்த  உரிமை குரலை அவளே அழித்துக் கொண்டாள் .இந்த பரிமாறும் பழக்கம் கணவன் , மனைவி ஆகும் முனபே  ஒருவருக்கொருவரென அவர்களிடையே இருந்து வந்த்தே .இதோ ...இப்போது கூட பேசியபடியே அவளுக்கு பரிமாறிக் கொண்டுதானே இருந்தான் .
சிறு குற்றவுணர்வு மனதை நெருட காலை உணவுக்குப் பின்னான காபியை கமலாவிடமிருந்து வாங்கிக் கொண்டு ஹாலுக்கு வந்தாள் .உமாபதி வெளியே கிளம்பிக் கொண்டிருந்தான்.

" காபி குடிங்க ...." அவன் முன் நீட்டினாள் .

காபியை வாங்கிக் கொண்டு அவளிடமிருந்து திரும்பி நின்று கொண்டு குடிக்க தொடங்கினான் .

" நானும் உங்களோடு வரட்டுமா ...? " தயங்கி தயங்கி மெல்ல கேட்டாள் .

" எங்கே ....? " பட்டென திரும்பி கேட்டவனின் கண்களில் பொறி பறந்த்து .

" நீங்கள் சரவணனை தேடித்தானே போவீர்கள் ....? நானும் கூட

வரலாமென நினைத்தேன் " குறைந்த குரலில் முணுமுணுத்தாள் .
" உன் ப்ராடு அண்ணனை தேடுவதை தவிர எனக்கு வேறு எந்த வேலையும் இல்லையென்று நினைத்தாயா ...? "

" என் அண்ணன் ஒன்றும் ப்ராடு இல்லை ...."

" ஆமாம் திருடிக் கொண்டு போனவன் ப்ராடில்லை .திருட்டு கொடுத்தவன்தான் ப்ராடு ...சரிதான் போடி ..."

அவனது ஏகவசனம் ஆத்திரத்தை அளிக்க " நீங்கள் பெரிய உத்தமன் போலவே பேசுகிறீர்களே , ஒரு சின்ன துண்டு பேப்பரை பற்றி எனக்கு விபரம் சொல்ல உங்களுக்கு மனது வரவில்லை .நீங்கலெல்லாம் ...." தொடர்ந்து பேச விடாமல் அவள் குரல்வளையை பற்றியிருந்தான் உமாபதி .

" என்னடி பெரிய பேப்பர் ...? நீதான் அதை படித்தாயே ...புரியவில்லை ....? இங்கே மரகதலிங்கம் பற்றிய தகவல் உறுதிசெய்யப்பட்டு விட்டது என்று கவர்ன்மென்டுக்கு எழுதி வைத்து விட்டு , அதை காட்டி என்னை மிரட்டிக் கொண்டிருந்தான் உன் அண்ணன் . ஆத்திரத்துடன் அதை பிடுங்கி வைத்தேன் .அதிலிருந்து ஒரு துண்டு கிழிந்து கீழே விழுந்து அதனை நீ எடுத்து வைத்துக் கொண்டு என் உயிரை வாங்கிக் கொண்டிருக்கிறாய் ...." பேசி முடித்து அவளை பிடித்து தள்ளினான் .
தடுமாறி பின் சுதாரித்து நின்று கொண்டவள் , " அதற்கு எதற்கு என்னிடமிருந்து அதனை பிடுங்க வேண்டும் ....? " விடாமல் கேட்டாள் .
" என் சம்பந்தபட்ட ஒன்று என் எதிரியின் தங்கையிடம் இருப்பதை நான் விரும்பவில்லை ...." அழுத்தமாக சொல்லிவிட்டு நடந்தான்.

அவனது அந்த எதிரி ஆருத்ராவின் மனதை மிகவும் நோகடித்தது .

அதென்ன எப்போது பார்த்தாலும் இவன் மிக நல்லவன் வேசம் கட்டிக்கொண்டு எதிராளியை கெட்டவர்களாக்குகிறான் .....? தாலி கட்டி பொண்டாட்டி ஆக்கிக் கொண்டு வீட்டிற்குள் பூட்டி வைத்திருக்கிறானே ...ரொம்ப நியாயமோ இது ...? வெடிக்க துடிக்கும் வார்த்தைகளுடன் ஆருத்ரா படியிறங்கி வந்த போது உமாபதியின் கார் வீட்டை விட்டு வெளியேறியபடி இருக்க , வாசல் கேட் இழுத்து பூட்டப்பட்டு பூட்டு போடப்பட்டுக் கொண்டிருந்த்து .

## 15

" மதியம் சாப்பிட ஏன் வரவில்லை ....? " வீட்டிற்குள் நுழையவும் ஓடி வந்து கேட்டபடி படபடப்போடு முன்னால் நின்றவளை ஏறிட்டான்

.

" எனக்கு நிறைய வேலை இருந்த்து ..." அவளை சுற்றிக் கொண்டு உள்ளே போனான் .

" நான் வந்த இத்தனை நாட்களில் இல்லாத வேலை இன்று திடீரென வந்துவிட்டதோ ...? "

அவள் பேச்சு காதிலேயே விழா தது போல் தன் அறைக்கு நடந்தான் .என்ன திமிர் ...? நான் கத்திக்கொண்டே இருக்கிறேன் ....ஆத்திரத்துடன் பின்னாலேயே போனாள் . அவன் போன வேகத்தை பிடிக்க , பின்னாலேயே ஓடி போன பிறகும் , ஆருத்ரா அவன் அறைக்குள் நுழைந்த போது , அவன் பாதரூமிற்குள் போயிருந்தான் .

திமிர் பிடித்தவன் ...வரட்டும் ,வைத்துக் கொள்கிறேன் ...பொருமியபடி அறையை சுற்றி பார்வையை ஓடவிட டாள். முதல்நாள் அந்த அறையை விட்டு வந்த்திலிருந்து மீண்டும் அங்கே அவள் வரவில்லை . முதல்நாள் எடுத்து வைக்காமல் அவள் பாதியிலேயே அப்படியே பரத்தி போட்டு விட்டு வந்த பொருட்கள் எல்லாம் இப்போது ஒழுங்காக அலமாரியனுள் அடுக்கப்பட்டிருந்தன .

உமாபதி தான் செய்திருக்க வேண்டும் .இன்று காலையில் அவன் மிகுந்த அலுப்புடன் திரும்பியதை அவள் அறிவாள் .அத்தனை அலுப்போடு இந்த வேலையையும் செய்தானா ...? பாவம் ...நானே செய்திருக்கலாமோ ....? ஆருத்ராவினுள் கொஞ்சம் குற்றவுணர்வு .

முதலில் அவனுடன் இணைந்து சாமான்களை எடுத்து வைக்க வேண்டுமென்ற ஆர்வம் .பிறகு ....அவனை பற்றி தெரிந்த பிறகோ அவனது அறைக்குள் போகவே வெறுப்பு . அதனால் அந்த வேலை அப்படியே கிடந்துவிட்டது .

உமாபதி நினைத்திருந்தானானால் கட்டிலிலும் , சோபாவிலும் , டீப்பாயிலுமாக சிதறிக் கிடந்த அவளது பொருட்களை அள்ளி வெளியே எறிந்து விட்டு படுத்திருக்கலாம் .குறைந்தபட்சம் கட்டிலை அடைத்துக் கிடந்த பார்சல்களை தரையில் தள்ளிவிட்டாவது படுத்து தூங்கியிருக்கலாம் .ஆனால் அவன் அப்படி செய்யவில்லை .அத்தனை அலுப்பிலும் அந்த அகால நேரத்திலும் அவளது சாமான்கள் அனைத்தையும் பொறுப்பாக எடுத்து அடுக்கிவிட்டு படுத்திருக்கிறான் .

ஆருத்ராவினுள் மெல்லிய நெகிழ்வு படர்ந்த்து .இவன் ஏன் எப்போதும் இது போல் இதமானவனாகவே இருக்க கூடாது ....?

" நின்று கொண்டே தூங்குகிறாயா ...? " பின்னாலிருந்து கேட்ட அவனது குரலுக்கு பதில் சொல்லும் முன் ஆருத்ரா தனது நெகிழ்வை

சிறிது மட்டுப்படுத்திக் கொள்ள வேண்டியதிருந்த்து .

" உன் பொருட்களையெல்லாம் அப்படியே போட்டு விட்டு போய்விட்டாயே ....யார் எடுத்து வைப்பார்களென நினைத்தாய் ...? " அடுத்த கேள்வி .

" தேவையில்லாமல் இழுத்து விட்டுக் கொண்டவர் யாரோ , அவரேதான் எடுத்தும் வைக்க வேண்டும் ..." சொன்னபடி திரும்பியவள் " ஐயோ ..." என வாய் பொத்தினாள் .

" என்ன ....? இப்போ எதுக்கு இந்த கத்தல்.....? ," கேட்டபடி திரும்பி அவளை பார்த்து நின்றவன் , குளித்து விட்டு பாத்ரூமிலிருந்து துண்டை கட்டிக்கொண்டு வந்திருந்தான் .

" இ ...இல்லை .ஒன்றுமில்லை " சொல்லிவிட்டு அறையை விட்டு ஓடிப்போகும் எண்ணத்தில் அவள் இருந்த போது ....

" வந்த்திலிருந்து நை நையென எதையோ கேட்டுக் கொண்டிருந்தாயே ....என்ன அது ...இப்போது கேளு ...." என அவளை பேச்சில் இழுத்தான் . என்ன கேட்க நினைத்தேன் ....கேட்டுக் கொண்டிருந்தேன் ....ஒன்றும் நினைவில் இல்லையே .இப்போது என்ன பேசுவது ....எதையோ பேச வேண்டுமே ...அது எதை ....? எத்தனை யோசித்தும் பிடிபடாமல் தன் தலையில் தானே லேசாக கொட்டிக் கொண்டாள் .

" என்ன ....எவ்வளவு யோசித்தும் கேட்க நினைத்தது நினைவில் வரவில்லையாக்கும் ...? ஏதாவது புத்தியாக கேட்க நினைத்திருந்தால் நினைவில் நின்றிருக்கும் .வெட்டி வம்பிழுப்பெல்லாம் எங்கே நினைவிருக்கும் ...? "

" நான் வெட்டி வம்பு பேசுகிறவளா ...? " இடுப்பில் கை தாங்கி அவனை முறைக்க நிமிர்ந்தவளின் பார்வையில் பட்ட  மழைத்துளிகள் சிதறியிருந்த பாறைக்கற்களென திரண்டிருந்த அவன் புஜங்கள் தொண்டை காய வைத்தன .

" வ...வந்து ...நா ...நான் ..." இன்னமும் முழுமையான பேச்சு வராத மழலையாய் வார்த்தை சிதறிக் கொண்டிருந்தாள் .

" அ - அம்மா , ஆ - ஆடு , இ - இலை ....இப்படி ஆரம்பிப்போமா ....? உமாபதி இப்போது அவள் எதிரே வந்து நின்று இடுப்பில் கை தாங்கி அவளை உற்று பார்த்தான் .

அடேய் ...உன்னை யாருடா இப்படி பக்கத்தில் வரச் சொன்னது ....? தள்ளிப் போயேன்டா ...மனதிற்குள் அலறினாள் ஆருத்ரா .

" எதற்காக அப்படி கத்தினாய் ஆருத்ரா ...? " உமாபதிக்கு தள்ளிப்

போகும் எண்ணமெதுவும் இல்லை .

அட்லீஸ்ட் எதையாவது மேலே போட்டுக் கொள்ளவாவது செய்யேன் ...அவளது தொடர் மன அலறல் அவனை எட்டவேயில்லை .இப்போதைக்கு உடையணியும் எண்ணமெதுவும் அவனிடம் இல்லை .
" என்னை இப்படி பார்க்கவும் பயந்து அலறினாயோ என்று நினைத்தேன் ..." சொன்னபடி ஆருத்ரா இடுப்பில் சொருகியிருந்த முந்தானையை இழுத்தான் .

இவன் என்ன செய்கிறான் ....ஆருத்ரா விழி விரித்து பயமாய் அவனை பார்த்துக் கொண்டிருக்கும் போதே , அவளது முந்தானை சேலையால் தன் ஈர மார்பினை துடைத்துக் கொண்டான் .

" உனக்கு ஒன்றும் பாதிப்பில்லையே ஆருதரா ...? "

" எ ...எதற்கு ...? "

" இதற்கு ..." அவளை முந்தானையோடு இன்னும் கொஞ்சம் அருகிழுத்துக் கொண்டு தன் தோள்களையும் துடைக்க தொடங்கினான் .

" என்னை பற்றி ஏதாவது நினைப்பிருந்தால் தானே ....இதிலெல்லாம் உனக்கு மனது சலனப்படும் .உனக்குத்தான் அது போல் எதுவும் கிடையாதுதானே ...?"
மிக அருகில் இழுக்கப்பட்டு அவன் மேனி வாசத்தில் திணறிக் கொண்டிருந்தவளிடம் இந்த கேள்வியை கேட்டவன் மிக கொடூரமானவனாக , அரக்கனின் மறு அவதாரமாகத்தான் அந்நேரம் அவளுக்கு தோன்றினான் .

" ராட்ச்சா ..." முணுமுணுத்தாள் .

" என்ன ...? " அவள் முந்தானையை தன் கைகளில் சுற்றியபடி அ வள் பக்கம் காதை சாய்த்தான் .

" பொண்டாட்டியை வீட்டிற்குள் வைத்து பூட்டி விட்டு வெளியே போகிறவனெல்லாம் , அரக்கன் ...ராட்ச்சன் என்றேன் " அவன் கையிலிருந்து தனது சேலையை பிடுங்கினாள் .

" ஓ...ராட்ச்சன் என்ன செய்வான் தெரியுமா ...? " வெளியே போக போன ஆருத்ராவை பின்னாலிருந்து அப்படியே கைகளில் தூக்கினான் .கொண்டு வந்து கட்டிலில் உருட்டினான் .

" நீ ...அரக்கர்களையோ ....ராட்ச்சர்களையோ ...பார்த்ததில்லை அல்லவா .... ? இப்போது பார்ப்பாய் ...." உமாபதியின் முகத்தில் மிகுந்த கடினம் வந்திருந்த்து .மிக எளிதாக ஆருத்ராவின் மேல் கனமாக

பரவினான் .

" சீ ...விடு என்னை " அவன் வெற்று முதுகில் குத்தினாள் ....தள்ளினாள் ...கத்தினாள் . ஆனால் ம்ஹூம் இம்மி கூட அவனை அசைக்க முடியவில்லை அவளால் .

" ஏன்டி அப்படி சொன்ன ....? என்னை பார்த்தால் அரக்கன் போலவா தெரிகிறேன! ....? இந்த அளவு மென்மையாக நான் யாரிடமும் நடந்து கொண்டதில்லை தெரியுமா ...? பார்த்து பார்த்து ...உன்னை தொடும் போது கூட பயந்து பயந்து தொட்டுக் கொண்டிருக்கிறேன் .நீ என்னை ராட்ச்சன் என்கிறாயா ....ம் ...? " உமாபதியின் வலுவான தேகத்தினடியில் நசுங்கி தவித்தாள் ஆருத்ரா .

" விடுங்கள் ...இதுதான் மென்மையா ...? "

" தேன் வடிய துடித்துக் கொண்டிருக்கும் புது மலர் போல் உள்ளது உன் முகம் ..." அவள் முகத்தை விரலால் வட்டமிட்டபடி காதல் வசனம் பேசினான் அவன் .

" விடுங்கள் .எனக்கு பிடிக்கவில்லை ."

" என்ன பிடிக்கவில்லை ...? என்னையா ...? என் தொடுதலையா ....? "

" இரண்டையும்தான் ...." முகத்தை திருப்பிக் கொண்டாள் .

' பொய் ....நீ கூட இப்படி பச்சையாக புளுகுவாயா ஆரா ....? என்னை பிடிக்கவில்லையா உனக்கு ...? ம் ...இங்கே என்னை பார்த்து சொல்லு ...." வலுக்கட்டாயமாக அவள் முகத்தை தன் பக்கம் திருப்பி இதழ்கள் மேல் அழுத்தமாக இதழ் பதித்தான் .

கண்களை இறுக மூடிக்கொண்ட ஆருத்ராவின் உடல் தன் திமிறலை குறைத்திருந்தது .வளைந்த இமைகளுடன் பாந்தமாய் மூடியிருந்த கண்களின் மேல் தாபத்துடன் அடுத்த முத்தத்தை பதித்தான் . ஆருத்ராவின் தேகம் அதிர்ந்து அடங்கியது .நடுங்கிய இமைகளின் வழியே லேசாக துளிர்த்து நின்றது சொட்டு நீர்த்துளி .

அடுத்த முத்தத்திற்காக குனிந்தவன் கண்ணில் பட்ட நீர்த்துளியில் முகம் மாறினான் .உணர்ச்சியில் துடித்தபடி இருந்த ஆருத்ராவின் இதழ்களை பார்த்தவன, மெல்ல அவள் மேலிருந்து விலகினான் .

தன் மேலிருந்த பாரம் நீங்கவும் ஆருத்ரா கண் திறந்து பார்த்தாள் .அவளை உற்று பார்த்தபடி எழுந்து நின்றிருந்தவன் , அவளுக்கு கை நீட்டினான் ." எழுந்திரு ...."

அவன் கை பற்றி எழுந்து நின்று கொண்ட ஆருத்ரா அவனை குற்றம் சாட்டும் பார்வை பார்த்து மூக்கை உறிஞ்சுக் கொண்டாள் .

" போதும் ...என்னமோ உன்னை கற்பழிக்க வந்த மாதிரி அப்படி ஒரு பார்வை பார்க்க வேண்டாம் " அவனது எரிச்சல் வார்த்தைகள் ஏனோ ஆருத்ராவினுள் இப்போது சிரிப்பை உண்டாக்கின .

" போ ....போய் சாப்பிட உட்கார் .வருகிறேன் " மாற்று உடைக்காக பீரோவை திறந்து அதனுள் நுழைந்து கொண்டான் .
பளபள பளிங்காய் மின்னிய அவனது பரந்த முதுகை பார்த்தபடி அறையை விட்டு வெளியேறினாள் ஆருத்ரா .

அறைக்கு வெளியே சற்று தள்ளி நின்றபடி ஏதோ யோசனையில் இருந்தாள் கமலா .

" என்ன அத்தை இங்கே நின்று கொண்டிருக்கிறீர்கள் ...? "

" வந்து ....சாப்பாடு ஆறிப் போகுது .இல்லைன்னா வந்திருக்க மாட்டேன் ...." கமலா அவள் முகத்தை பார்க்காமல் தலை குனிந்து கொண்டு பேசினாள் .

" என்ன சொல்கிறீர்கள் ...? "

" வந்து ...புதசா கல்யாணமானவங்க ....கொஞ்சம் அப்படி இப்படி இருப்பீங்க ....ஆனால் சாப்பாடு ஆறிப் போகுது .அதுதான் ....வந்து ...." கமலாவின் அநியாய வெட்கத்தில் ஆருத்ராவிற்கு தலையிலடித்துக் கொள்ளலாமென இருந்த்து .

கடவுளே ...இவர்கள் என்ன நினைத்துக்கொண்டு இப்படி பேசிக்கொண்டிருக்கிறார்கள் ...நெற்றியை பிடித்தபடி குனிந்தவளின் பார்வையில் தரையில் வெட்கமாக கோலமிட்டுக் கொண்டிருந்த கமலாவின் கால் பெருவிரல் படவும் , நிஜமாகவே தலையிலேயே அடித்துக் கொண்டாள் .

நாங்கள் உள்ளே இருந்தால் இவர்கள் ஏன் வெட்கப்படுகிறார்கள் ...எரிச்சல் பொங்க நினைத்தவள் " அத்தை ..நீங்கள் நினைப்பது போல் ஒன்றுமில்லை " பற்களை கடித்துக் கொண்டு பொறுமையாக கூறினாள் .

" விடும்மா ...சின்னஞ்சிறுசுங்க ...அப்படி ...இப்படி இருப்பீங்க . இதெல்லாம் நான் கண்டுக்க மாட்டேன் .நீ தம்பியை கூட்டிட்டு சாப்பிட வா ...." கமலா இன்னமும் வெட்கம் குறையாமல் தலை குனிந்தபடியே செல்ல ...ஆருத்ரா அவசரமாக குனிந்து தன்னை சோதித்துக் கொண்டாள் .

கலைந்திருந்த தலையையும் ...தளர்ந்திருந்த உடையையும் வேகமாக சரி செய்து கொண்டாள் .எல்லாம் இவனால் வந்த்து .....கையை காலை வைத்துக் கொண்டு சும்மா இருக்காமல் ....பொருமலுடன் உதட்டை

கடித்து கோபத்தை அடக்கினாள் .

" என்ன விசயம் ஆருத்ரா ...? " மிக அருகே திடுமென உமாபதியின் குரல் கேட்க , திடுக்கிட்டு திரும்பி திருதிருவென விழித்தாள் .இவன் எப்போது வந்தான் ...?

" சித்தி என்ன சொல்கிறார்கள் ....? "

அடப்பாவி ...நீ அப்போதிருந்து இருந்தாயா ....? ஆருத்ராவின் விழிப்பு அதிகமானது .

" என்னவோ தலை குனிந்து உன்னிடம் ரகசியமாக பேசிக்கொண்டிருந்தார்களே ...அது என்னவென கேட்டேன் ...? " பிழைத்தேன் போ ....அதை நீ கேட்கவில்லை அல்லவா ....? ரொம்ப சந்தோசம் .

" நம்மை சாப்பிட அழைத்தார்கள் .வாங்க போகலாம் " நடந்தாள் .
" அதையா அத்தனை ரகசியமாக பேசினார்கள் ...? " உமாபதி யோசனையுடன் இம்மி நகராமல் நிற்க , அடேய் வாடா ...உன் சித்தி திரும்ப வந்தால் மறுபடி எதையாவது உளறி வைப்பார்கள் ...என மனதினுள் நினைத்தபடி ...

" எனக்கு பசிக்கிறது .வாங்களேன் ..." அவன் கையை இறுக்கி பிடித்து இழுத்தபடி சாப்பாட்டு அறையினுள் நுழைந்தாள் .

ஒருவரோடு ஒருவர் கை பிணைத்தபடி , தோளுரச உள்ளே நுழைந்தவர்களை காணவும் , கமலா மறுபடியும் வெட்க பார்வைகளை ஆரம்பிக்க ,

" நாங்கள் பரிமாறிக் கொள்வோம் .நீங்க போங்க அத்தை " என அவளை அவசரமாக அடுப்படிக்குள் அனுப்பி வைத்தாள் ஆருத்ரா .தொடர்ந்து கணவனுக்கு அக்கறையாக பரிமாறவும் தெடங்கினாள் .

## 16

" உன் அண்ணன் என்னிடமிருந்து விலாங்கு போல் நழுவிக்கொண்டே இருக்கிறானே ஆருத்ரா .அவனை எப்படி பிடிப்பது ....? ஏதாவது ஐடியா குடேன் ..." பிசிறின்றி தெளிவாக கேட்ட உமாபதியை வெறித்தாள் .

சற்றுமுன் இருவருமாக பழையபடி ஒருவருக்கொருவர் பரிமாறி உணவுண்ட இதம் மறைந்து ,மனம் முழுவதும் எரிச்சல் வியாபித்தது ஆருத்ராவுக்கு .

இவனை அசுரனென்று சொல்லாமல் வேறெப்படி சொல்வது ....?

இருவரும் சாப்பிட்டு முடித்ததும் நிலா முற்றத்திற்கு வந்திருந்தார்கள் .அவள் உட்காருவாளென உமாபதி நின்றிருக்க ....அவன் உடகாருவானென ஆருத்ரா நின்றிருக்க , இருவரும் உட்காராமல் ஊஞ்சல் இருவருக்குமிடையே அநாதையாக ஆடியபடி இருந்த்து .
" உங்கள் கைகளில்தான் நான் இருக்கிறேனே .என் கழுத்தில் கத்தியை வைத்து  நிறுத்துங்கள். சரவணன் எங்கிருந்தாலும் ஓடி வருவான் ...." தழுதழுத்த தன் குரலை அவனிடம் காட்டாமல் மறைக்க பெரும் பிரயத்தனப்பட்டாள் .

" இல்லையே ....அப்படி வருவதானால் இத்தனை நாட்களில் வந்திருக்க வேண்டுமே ...."

" ஓ ...அதற்காகத்தான் என்னை பிடித்து வைத்திருப்பதை ஒத்துக் கொள்கிறீர்கள் ....? "

" நீ வந்த நாளிலிருந்து உன்னை அழைத்துக் கொண்டு ஊர் முழுவதும் சுற்றியிருக்கிறேன் .எல்லோர் பார்வையிலும் படும்படி  ஜோடியாக இருந்திருக்கிறோம் .எல்லாவற்றிற்கும் மேலாக இப்போது உன்னை திருமணமே முடித்திருக்கிறேன் .பதறி ஓடி வந்திருக்க வேண்டாமா ...? என்னம்மா ...உன் அண்ணனுக்கு உன் மீது இவ்வளவுதான் பாசமா ...? " ஆக ...இவன் என்னை கூட்டிக் கொண்டு ஊர் சுற்றியதன் காரணம் என் மீதிருந்த ஈர்ப்பில்லை , அப்படி போகும் போதெல்லாம் எங்கேயாவது என் அண்ணன் கண்ணில் பட்டு அண்ணன் இவன் முன் வந்து நிற்கவேண்டும் .அதுதான் இவனது தேவை .

ஆருத்ராவிற்கு ஆத்திரம் கட்டுக்கடங்காமல் வந்த்து . இவன் கொஞ்ச நேரம் முன்பு அறைக்குள் ஒரு காதல் கணவன் போல் கொஞ்சியது என்ன ...? பிறகு பொறுப்பான குடும்ப தலைவனாக , கணவனாக அக்கறையாக உணவு பரிமாறியதென்ன ....? இப்போது ....பக்கா வில்லனாகி அண்ணனை கொல்ல தங்கையிடமே ஆலோசனை கேட்பதென்ன ....?

" என் அண்ணன் நிச்சயம் வருவான் .வந்து உங்களிடமிருந்து என்னை மீட்டுக் கொண்டு போகத்தான் போகிறான் பாருங்கள் ...."

" யெஸ் ....அந்த நேரத்தைத்தான் நானும் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டருக்கிறேனடி என் அருமை பொண்டாட்டியே ...."
போடா பொறுக்கி ....என வையத் துடித்த நாவை அடக்கியவள்  " பொண்டாட்டியா ....அந்த உறவை சொல்லாதீர்கள் ...." கத்தினாள் . உமாபதி அலட்சியமாக ஊஞ்சல் மேல் குதித்து ஏறி அமர்ந்து கொண்டான் ." தாலி கட்டியவளுக்கு பொண்டாட்டி என்ற பெயர்தானே

சொல்லவேண்டும் " என்றான் .

" தாலியா ....நீ உண்மையான உள்ளன்போடு கட்டிய தாலியா இது ....? என் அண்ணனை பிடிக்க திட்டம் போட்டு என்னை வரவழைத்து , என்னை ஏமாற்றி திருமணம் வரை கொண்டு போய் ...."

" ஸ்டாப் ...ஸ்டாப் .நானா உன்னை வரவழைத்தேன் .நீயாக வந்தாய் ...இரவு நான் வீடு திரும்பி வந்த போது என் வீட்டிற்குள் படுத்து நன்றாக தூங்கிக் கொண்டிருந்தாய் .இதையெல்லாம் மறந்துவிட்டாயா ...? " ஆருத்ரா சிறு அவமானத்துடன் தலை குனிந்து கொண்டாள் .யாரென்றே தெரியாதவர் விட்டிற்குள் நுழைந்து அன்று எப்படி ...அப்படி தூங்கினேன் ....? அந்த ஓட்டை பஸ்ஸில் வந்த அலுப்பு , அப்படி தூக்கத்தை கொடுத்திருக்கும் .தன்னை தானே சமானித்துக் கொண்டாள் .

" யாரென்றே தெரியாதவர்களை எதற்காக உங்கள் சித்தி அப்படி உள்ளே வரை அனுமதிக்கிறார்களாம் ....? " இடக்காக கேட்டாள் .
" தெரியாதவர்களையா ....? இல்லையே நீ சரவணனின் உறவென தெரிந்த பிறகுதானே சித்தி உன்னை உள்ளே தங்க சொன்னார்கள் ...? "
" ஓ ...அப்போதே என் சிறைபிடிப்பு படலம் ஆரம்பித்து விட்டது .அப்படித்தானே ....? " கேட்ட ஆருத்ராவின் உள்ளம் கொதித்தது .அவள் கமலாவை அப்பாவி என நினைத்திருக்க , அவளோ சரவணன் எனக் கேட்ட ஒரு பெயரிலேயே தன்னை அறைக்குள் அடைத்து வைக்குமளவு புத்திசாலியாக இருந்திருங்கிறாளே .

" திரும்பவும் நினைவுறுத்துகிறேன் ஆருத்ரா .உன்னை நாங்கள் யாரும் இங்கே அழைக்கவில்லை ...." உமாபதி கால்களை தரையில் ஊன்றி தள்ளியபடி மெல்ல ஊஞ்சலாட ஆரம்பித்தான் .

" என்ன கண்றாவிக்கு அதை திரும்ப திரும்ப சொல்லித் தொலைகிறீர்கள் ...? நீங்களாக அழைத்தாலோ ...வந்தவளை அடைத்து வைத்தாலோ ....இரண்டிற்கும் என்ன பெரிய வித்தியாசம் இருந்து விடப் போகிறது ....? "

அலுத்தவளை ஊஞசலாடியபடி இமைக்காமல் பார்த்தான் .பிறகு பற்கள் தெரிய பளிச்சென சிரித்தான் .ஆருத்ரா அவசரமாக தன் பார்வையை மாற்றிக் கொண்டாள் .இப்போது எதற்கு சிரிக்கிறானாம் ....?

" பதில் சொல்ல தெரியாவிட்டால் நக்கலாக சிரிப்பதா ....? " எகிறினாள் .

" நக்கல் போன்றா இருந்த்து அந்த சிரிப்பு ....? "

"இல்லைடா ...என்னை கொல்வது போலிருந்த்து ...".முனங்கினாள் .

" என்னம்மா சொன்னாய் ...? "

அவனது கேள்வியை அலட்சியம் செய்தவள் " என் அண்ணன் வந்து திருமணத்தை தடுத்து விடக் கூடாதென்றுதானே , சந்தடி நிறைந்த நடராஜர் கோவிலை விட்டு , ஒதுக்கமாக இருந்த ஏதோ ஒரு கோவிலில் திருமணத்தை நடத்தினீர்கள் ....? " என்றாள் .

மீண்டும் சிரித்தான் அவன் .அதே போன்ற ...ஆருத்ராவை தடுமாற வைக்கும் அதே போன்ற சிரிப்பு .பற்களை கடித்து எரிச்சலை அடக்கினாள் .

" சென்னையில் நீ எங்கே வேலை பார்த்தாய் ஆருத்ரா ...? என்ன வேலை ....? எவ்வளவு சம்பளம் ....? "

சம்பந்தமற்ற அவனது இந்த கேள்வியில் விழித்தாள் ." அது இப்போது எதறகு உங்களுக்கு ...? "

" சும்மா சொல்லு .தெரிஞ்சுக்கிறேன் ...."

" ம்ஹூம் சொல்லமாட்டேன் .நீங்கள் அங்கேயும் போய் ஏதாவது தகராறு செய்தாலும் செய்வீர்கள் ...."

இப்போது சத்தமாக வாய் விட்டு ஆர்ப்பாட்டமாகவே சிரிக்க தொடங்கினான் உமாபதி .அநியாயத்திற்கு அந்த சிரிப்பும் ஆருத்ராவின் மனதை வதைப்பதாகவே இருந்த்து .

" இம்சைடா சாமி ...." தலையை பிடித்துக் கொண்டவள் , உமாபதி நிறுத்தாமல் தொடர்ந்து சிரித்தபடி இருக்க , அதிலும் கால்களை உந்தி ஆட்டி மிக வேகமாக ஊஞ்சலாடியபடியே சிரித்தபடி இருக்க ஆருத்ராவிற்கு பிரஷர் எகிறியது .

ராஸ்கல் ....இவன் மனதில் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறான் ...அவனது ஊஞ்சலாட்டத்தை நிறுத்தும் எண்ணத்தில் யோசியாமல் முதலில் நடுவில் வந்து நின்றுவிட்டவள் , பிறகே அந்த ஊஞ்சலாடும் வேகத்தில் தன் மேல் பட்டால் நிச்சயம் முன்பற்கள் உடையும் என உணர்ந்து ,நிறபதா ...தள்ளுவதா ...என தடுமாற...அரை விநாடிக்குள் நடந்துவிட்ட இத்தனை விசயங்களுக்கும் முடிவாக , பாதையில் நின்றிருந்தவளின் இடையில் கை கோர்த்து அப்படியே தூக்கி தன்னருகில் ஊஞ்சலில் அமர்த்தியிருந்தான் உமாபதி .

" இப்படித்தான் யோசியாமல் இடையில் வந்து நிற்பாயா ....? " அதட்டிய அவன் குரலில் இன்னமும் முந்தைய சிரிப்பு மீந்திருந்த்து .
பதறி அடைக்கலமாக அவன் நெஞ்சில் சரிந்திருந்தவள் , பதிலின்றி அவனது உரிமையான அதட்டலில் கிளர்ந்தபடி இருந்தாள் . " தேங்க்ஸ் " மென்குரலில் சொன்னாள் .

மெல்ல அவள் தோளணைத்து தன்னோடு சேர்த்துக் கொண்டான் உமாபதி ." இதோ இது போலொரு இரவு நேரத்தில் வெண்ணிலா காயும் நிலா முற்றத்தில், போதையான இந்த ஊஞ்சலாட்டத்தில் புருசனுக்கு நன்றி சொல்லும் விதமா இது ...? "

" எதற்கு அப்படி சிரித்தீர்கள் ...? " அவன் பேச்சின் திசையை மாற்றினாள் . ஊஞ்சல் வேகமாக ஆடிக் கொண்டிருப்பதை சாக்காக்கி அவன் மார்பிலிருந்து விலகாமலேயே ஒன்றியிருந்தாள் .

" உன் அண்ணன் நம் திருமணத்தை நிறுத்தினால் , எனக்கு நல்லதுதானே ...அப்படி அவன் என் எதிரே வரவேண்டு என்று தா னே நான் எதிர்பார்த்து இருந்தேன் .பின் ஏன் நம் திருமணத்தை அப்படி மறைவாக முடிக்க நினைத்தேன் ....? "

அவன் கேட்கவும் தான் அது உறைக்க " அதுதானே ...ஏன் ...? " அவனிடமே திரும்ப கேட்டாள் .

" ம் ...என்னிடமே கேட்கிறாயா ...? யோசி ஆரா .நீயும் கொஞ்சம் யோசி ..." விர்ரென்ற ஊஞ்சலின் காற்று சுகமாக முகத்திலறைய தலையை உயர்த்தி யோசித்தவள் , திடுமென கத்தினாள் .

" இதற்குத்தான் நான் வேலை பார்த்த இடத்தை, சம்பளத்தை கேட்டீர்களா ...? அறிவில்லாத எனக்கு வேலையும் , சம்பளமும் கொடுப்பவர்கள் யாரென கேட்காமல் கேட்டீர்களா ...? "

" ஆஹா , கடவளுக்கு நன்றி .ஒரு வழியாக இதனை புரிந்து கொண்டாயே ...அதெப்படி , நீ வேலை செய்யும் இடம் தெரிந்தால் நான் அங்கே போய் தகராறு பண்ணுவேனா ...? " கேட்டவனிடம் மீண்டும் சிரிப்பு பீறிட்டது .

ஆருத்ராவிற்கு அழுகை வரும் போல் இருந்த்து . அவளை எப்படி மட்டம் தட்டிக் கொண்டிருக்கிறான் ...உதடு பிதுங்க அழுகை முகத்துடன் அமர்ந்திருந்தவளை பார்த்தவன் அவள் தோளணைத்து அருகிழுத்துக் கொண்டான் .

" எனக்கு வில்லனில் இருந்து கொஞ்சம் ப்ரமோசன் கொடுத்து பாரேன் ஆரா .எல்லாம் சரியாக வரும் ...."

" ஒன்றும் வேண்டாம் போ .நீ வில்லன்தான் .என்னை ...அண்ணனை பழி வாங்கிக் கொண்டிருக்கிறாய் ...போ ....போ ..."அவன் மார்பில் நச் நச்சென குத்த ஆரம்பித்தாள் .

" ஹேய் ஊஞ்சல் ...பார்த்து ..." கால்களை தரையில் ஊன்றி ஊஞ்சலை நிறுத்தியவன் , உடன் கீழிறங்க போனவளை இறங்க அனுமதிக்காது தன்னருகே இழுத்தான் .

" ம்ஹூம் விடமாட்டேன் .உனக்கு அடிபடாமல் காப்பாற்றியதற்கு எனக்கு நன்றி சொல்லிவிட்டு போ ..." இதழ்களை வருடினான் . இவன் கொஞ்ச நேரம் முன்பு வரை நக்கலும் , நையாண்டியுமாக பேசியதென்ன ....இப்போது காதலாகி உருகுவதென்ன ...ஆருத்ரா புரிபடாமல் திணறினாள் .அவளது அந்த நொடி திணறலை தனக்கு சாதகமாக்கிக் கொண்டவன் , அவளருகே மிக நெருங்கினான் . இதழருகில் நெருங்கி விட்ட அவன் இதழ்களை திகைப்போடு பார்த்தவளிடம் மென் குரலில் கிசுகிசுப்பாய் பேசினான் ." இன்று சிகரெட் பிடிக்கவில்லை ஆரா .நாற்றம் இருக்காது ...ஓ.கே தானே ...." கேட்டபடி அவள் இதழ்களில் அழுந்தினான் .ஆருத்ரா சில நிமிடங்கள் கரைந்து , அந்த அண்டத்தின் ஏதோ ஓர் துளியாகி அந்த காய்ந்து கொண்டிருந்த வெண்ணிலவு அருகே சிறிது நேரம் போய் பறந்து விட்டு மனமில்லாமல் மீண்டு பூமி வந்தாள் .

-----------------

அன்று இரவு முழுவதும் அவளை பொட்டு கண் மூட விடவில்லை உமாபதியின் அந்த முத்தம் . ஆண்மையாய் , ஆளுமையாய் மேலாக உரிமையாய் எப்படியான முத்தம் அது .ஆருத்ரா தளர்ந்தாள் .முத்தமிட்ட கையோடு தளர்ந்து சரிந்தவளை நிமிர்த்தி தழுவியபடி ஊஞ்சலிலிருந்து தரையில் இறக்கிவிட்டான் .

" போ ...போய் தூங்கு ..." என அவளை மெல்ல தள்ளியவனின் விழிகளும் ஒரு வித போதையில் சொக்கித்தான் இருந்தன . ஆருத்ரா விழிகளை தழைத்தாள் .இவனது உதடுகளையும் , விழிகளையும் தைரியமாக எதிர.கொள்ளும் வல்லமையை எப்போது பெற போகிறேன் ...? தனக்கு தானே நொந்து கொண்டாள் .

பின்னாலேயே தன் அறைக்குள் வந்து விடுவானோ ...?.வேண்டும் என நினைக்கிறேனா ....வேண்டாமென்றா ....திரும்பி திரும்பி பார்த்தபடி தன் அறைக்குள் நுழைந்து கொண்டாள் .

.இல்லை ... இப்படியே இன்னும் ஒருநாள் கூட தள்ள முடியாது . இதற்கு உடனே ஒரு முடிவு கட்ட வேண்டும் ...அறையினுள் குறுக்கும் ...நெடுக்கும் நடந்தபடி தீவிரமாக யோசித்தாள் .

கிட்டத்தட்ட விடிய போகும் போது அவள் திருப்தியாக ஓர் முடிவினை எடுத்து விட , நிம்மதியாக படுக்க போனாள் .மறுநாள் நிறைய திருப்பங்களுடன் அவளுக்காக காத்திருந்தது.

17

மறுநாள் உமாபதி வெளியேறும் வரை அவன் கண்ணிலேயே படவில்லை ஆருத்ரா . அவளது நினைவுகளின் சிறு பிசிறையும் அவன் கண்கள் கண்டு கொள்வதை அவள் அறிவாள் .அதனால் காலை எழுந்த்தும் வீட்டின் பின்புறம் ஓடிப்போய் விட்டாள் .மெல்ல அங்கிருந்த தோட்டத்தில் நடந்தபடி இருந்தாள் .

அங்கே ஒரு ஓரமாக இருந்த மணி இவளையே பார்த்து க் கொண்டிருந்த்து .இந்த நாய் பார்க்கிற பார்வையை பார் ....அப்படியே அவனது ஆராய்ச்சி பார்வையை இதற்கும் பழக்கப்படுத்தி வைத்திருக்கிறான் .கண்ணை உருட்டி உருட்டி ...நீ என்னடி நினைக்கிறாய்னு கேட்கிறது போல இந்த நாய் பார்த்து வைக்கிறது .மனதிற்குள் மணியை வசை பாடிக் கொண்மிருந்தாள் .

அப்போது அங்கே வெளியே கேட் மூடும் சத்தம் கேட்டது .உமாபதி வெளியே போய்விட்டான் .ஆருத்ரா திரும்பி மணியை பார்த்தாள் . வந்த இரண்டு நாட்களில் உமாபதி ஆருத்ராவிற்கு மணியை அறிமுகப் படுத்தி வைத்துவிட்டான் ." டேய் மணி , இது என் ப்ரெண்ட் .இனி உனக்கும் ப்ரெண்ட்தான் .ஓ.கே வா ....? " என்றதும் மணி வாலை விசுவாசமாக ஆட்டி , ஆருத்ராவின் கையை நாக்கால் நக்கியது . ஆருத்ராவிற்கு எப்போதுமே இது போல் வீட்டு விலங்குகளின் மேல் பெரிதான அபிப்ராயம் இருந்த்தில்லை .அவளது தோள் உயரத்திற்கு கொஞ்சமே குறைவான பெரிய தோற்றத்தில் இருந்துகொண்டு , வாலாட்டி ப்ரியம் காண்பித்த அந்த நாயை அப்போதும் அவளால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை .எப்போதும் கொஞ்சம் தள்ளி நின்றே அவள் மணியிடம் பழகி வந்தாள் .

ஆனால் இப்போது அவளது நினைப்பு நடக்க வேண்டுமானால் அவள் மணியிடம் கொஞ்சம் நெருங்கி பழகியே ஆகவேண்டும் .மணியின் உதவி இல்லாமல் அவளால் இந்த வீட்டை விட்டு வெளியேற முடியாது .கண்களில் குழைவையும் , உதடுகளில் புன்னகையையும் பூசிக் கொண்டு மணியின் பக்கம் நடந்தாள் .

குனிந்து மெல்ல அதன் முதுகில் தடவியவள் " மணி சாப்பிட்டாயா ...? " உமாபதி அதனிடம் விசாரிப்பது போல் விசாரித்தாள் .

சிறு முனகல் ஒன்றுடன் மணி தலையாட்டியது . குனிந்து அவள் பாதத்தை நாவால் நக்கியது .சாப்பிட்டேன் என்பது போலிருந்த்து அது .

" என்ன சாப்பிட்டாய் ...? வாடச்மேன் தாத்தா உன்னை நன்றாக கவனிச்சிக்கிறாரா ....? " மெல்ல நாயின் முகத்தை தூக்கி பிடித்தபடி

கேட்டவள் , திடுமென மணியின் கண்கள் விரிந்து உற்சாகமாவதை பார்த்தாள் .இது எதற்கு ....என புரியாமல் நிமிர்ந்த போது ....
" என்ன ...இன்னைக்கு அதிசயமாக மணியிடமெல்லாம் நல விசாரிப்பு ...? " கேட்டபடி பின்னால் வந்து நின்றவன் உமாபதியேதான் .
இவனா ....இவனை பார்த்துதான் மணி அப்படி உற்சாகமானதா .....?
இவன் வெளியே போகவில்லையா ....ஆருத்ரா திணறினாள் .
" என்னடா மணி ...இன்று உன் ப்ரெண்ட் அதிசயமாக உன்னை தேடி வந்திருக்கிறார்களே ...விசாரித்தாயா ...? " மணி உற்சாகமாக குரைத்து வாலாட்டியது .

" நீ ஒரு வார்த்தை விசாரித்தது அவனுக்கு எத்தனை மகிழ்ச்சி பார்த்தாயா ...? " வாஞ்சையாய் மணியின் தலையை தடவினான் .
இதில் ஒண்ணும் குறைச்சலில்லை .வாசலை தாண்டி காலெடுத்து வைக்க மட்டும் விடாது .ஆருத்ரா எரிச்சலாக நினைத்துக் கொண்டாள் .
" அன்பு உள்ளங்களை புரிந்து கொள்ள முயற்சி செய் ஆருத்ரா ...."
ஆசிரியரின் தோரணை அவன் குரலில் தெரிய , போடா ...டேய் , நீ முதலில் அதை செய்துவிட்டு அடுத்தவர்களை சொல்லு ...என்றெண்ணியவள் ,

" நீங்கள் வெளியே போய்விட்டீர்களென நினைத்தேன் .போகவில்லை ....? " பொறுமையை பிடித்து வைத்துக் கொண்டு கேட்டாள் .
" போகவேண்டும் .நீயும் வருகிறாயா ...? " அவன் பார்வை அவளை ஊடுறுவியது .

ஆருத்ராவிற்கு வியர்க்க ஆரம்பித்தது .இவனுடன் போனால் அவள் நினைத்தது நடப்பதெப்படி ...?

" இ...இல்லை .எனக்கு இன்று கொஞ்சம் உடம்பு சரியில்லை .இல்லை உடம்பு நன்றாக இருக்கிறது ...வ...வந்து சாப்பிடவில்லை .பசிக்கிறது ...சாப்பிட வேண்டும் ...." உளறுகிறோமென தெரிந்தும் உளறினாள் .
" என்ன பிரச்சனை உனக்கு ...? சாப்பிடுவதானால் சாப்பிட்டு விட்டு வா .வெயிட் பண்ணுகிறேன் .உடம்பு சரியில்லையென்றால் வா , ஹாஸ்பிடல் போகலாம் ...."

" ம்ஹூம் ...அதெல்லாம் ஒன்றும் வேண்டாம் .நான் நன்றாக இருக்கிறேன் .நான் சாப்பிட்டு படுத்து உறங்க போகிறேன. அதனால் வரவில்லை .நீங்க போங்க " படபடத்தவளை விநோதமாக பார்த்தான் .பிறகு முகம் மாறி அவளருகே குனிந்து...

" இரவு முழுவதும் தூங்கவில்லையா ...?என்னையே நினைத்துக்

கொண்டிருந்தாயா ...? .இல்லை நம் முத்தத்தையே நினைத்துக் கொண்மிருந்தாயா ஆரா ...ம் ...? " கொஞ்சல் வழிய தொடங்கியது அவன் குரலில் .

இவன் இப்போது அதை பேசியே ஆக வேண்டுமா ....குறிப்பாக இன்னமும் அவள் இதழில் இம்சித்துக் கொண்டிருக்கும் அந்த முத்தத்தை .ஆருத்ரா தவித்தாள் .

" நானும் உன்னைப் போலத்தான் ஆரா .எனக்கும் அதே நினைப்புதான் ....தூக்கமே வரவில்லை .தெரியுமா ....? " இரு விரல்களால் அவள் உதட்டை வருடி அழுத்தினான் .

இருவருக்குமிடையே நின்றபடி இருவரையும் பார்த்தபடி இருந்த்து மணி .

இவன் ஒருத்தன் ..நல்ல நேரம் பார்த்தான் கொஞ்சுவதற்கு ..ஆருத்ரா ...அவன. மார்பில் கை வைத்து தள்ளினாள் .

" தள்ளி போங்க .எப்போதும் இதே பேச்சுதானா ...? நீங்க முதலில் வெளியே போங்க "

" ம் என் வீட்டை விட்டு என்னையே விரட்டுகிறாய் ....? " போலியாக சலித்துக் கொண்டான் ...மணியை நெருங்கி அதன் முன்காலை பிடித்துக் கொண்டவன்...

" மணி நான் வெளியே போகிறேன் .நீ பொறுப்பாக உன் ப்ரெண்டை கவனித்துக் கொள்ளடா ...." ஏதோ அரச பொறுப்பை ஒப்படைப்பது போல் பேசிவிட்டு வெளியே போனான் .

இந்த முறை அவனது கார் வீட்டை விட்டு வெளியேறுவதை உறுதி செய்துகொண்டு ,மீண்டும் மணியின் அருகே வந்தாள் .அதன் அருகே அமர்ந்து அதனை வருடியபடி மெல்லிய குரலில் பேச ஆரம்பித்தாள் .
" மணி நீ என்னை இந்த வீட்டை விட்டு வெளியே போக அனுமதிக்க வேண்டும் .நான் என் வாழ்வின் முக்கிய கட்டத்தில் இருக்கிறேன. நான் உன் ப்ரெண்டில்லையா ...அவர் கூட இப்போது எனக்கு உதவ வேண்டிமென்றுதானே சொல்லிக் கொண்டிருந்தார் .அதனால் ...ப்ளீஸ்டா ....என்னை இந்த ஒரு தடவை மட்டும் வெளியே போக அனுமதி ..."

மணி காதுகளை விடைத்து தன் முன் கால்களை தூக்கி அவள் கைகளில் வைத்தது .ஏதோ பொருள் படும்படி உறுமலாய் குரல் கொடுத்தது . சம்மதித்ததா ...இல்லையா ...திக் திக் மனதுடனேயே ...மெல்ல வீட்டின் முன்புறத்திற்கு நடந்தாள் . மணி பின்னாலேயே வந்த்து .கொஞ்ச நேரம் வீட்டின் முன்புறம் உலாத்தியவள் அங்கே மணி இருக்கும் தைரியத்தில்

,வாட்ச்மேன் தாத்தா ஏதோ தோட்ட வேலையாக கொஞ்சம் தள்ளி போக , ஆருத்ரா மெல்ல வாசல் கேட்டை நோக்கி நடந்தாள் .
மணியை திரும்பி பார்த்துக் கொண்டே வாசல் கேட்டை சத்தமன றி மெல்ல திறந்தாள் . மணி அவளை பார்த்தபடி இருந்த்து . ஆனால் இருந்த இடத்தை விட்டு அசையவில்லை .இரண்டு விநாடிகளில் கேட்டின் அந்தப் பக்கம் போய் கதவை மூடி விட்டிருந்தாள் .உள்ளே நின்ற மணிக்கு நன்றி போல் ஒரு சல்யூட் வைத்தவள் வேகமாக தெருவில் நடக்க தொடங்கினாள் . அவளை பார்த்தபடி நின்ற மணியின் பார்வையில் பரிதாபம் இருந்த்து .

அந்த தெரு முனையில் திரும்பியதுமே அவளை உரசியபடி அந்த ஆட்டோ வந்து நின்றது .உள்ளே மனோகர் இருந்தான் .

" ருத்ரா ...உள்ளே வாங்க "

" நான் ஏன் உங்க கூட வரணும் ...? "

" உங்கள் அண்ணனை பார்க்க வேண்டாமா ...? அவர்தான் என்னிடம் உங்களை அழைத்து வர சொன்னார் .சீக்கிரம் உள் ளே ஏறி உட்காருங்கள் "

" நீங்கள் சொல்வதை நான் எப்படி நம்புவது ...? "
" ஐயோ ...அதை போய்கொண்டே பேசலாம் ◌முதலில் இந்த தெருவிலிருந்து வெளியேறி விட வேண்டும் ."

" இல்லை .உங்களை அனுப்பியது சரவணன் தானென தெரியாமல் நான் உங்களுடன் வர மாட்டேன் ..."

மனோகரின் முகம் கோபமானது .பிறகு அதனை அடக்கிக் கொண்டு தன் போனை எடுத்து நம்பரை அழுத்தினான் .

" பேசுங்க ..."

" ருத்ராம்மா அண்ணன் பேசுறேன்டா ...நீ உடனே மனோகர் கூட கிளம்பி வாடா ..." போனில் கேட்ட குரல் சந்தேகமின்றி சரவணனுடையாதாக இருக்க , ஆருத்ரா சட்டென ஆட்டோவில் ஏறிக்கொண்டாள் .
நிறைய குறுகலான சந்து , பொந்துகளிடையே ஓடிய ஆட்டோ இரண்டு மணி நேர பயணத்திற்கு பின் ஒரு குடிசை வீட்டு முன் நின்றது .அதன் கதவை திறந்து கொண்டு வந்தவன் சரவணனேதான் .

" ருத்ரா ..." கையை விரித்தவனிடம் ஓடி ஒன்றிக் கொண்டாள் ஆருத்ரா .
" சரவணா , உன்னை பார்ப்பேனென்று நினைக்கவே இல்லைடா " விம்மினாள் .

" நானும் தான்டா .உன்னை என்னிடம்  அழைத்து வர என்ன பாடு பட்டு விட்டேன் தெரியுமா ...? " பாசமாக தங்கையின் தலை வருடினான் .
" சரவணா இங்கே என்ன நடக்கிறது ...? உமாபதி என்னென்னவோ சொல்கிறாரே ...? ஏதோ ...மரகதலிங்கம் , குடும்ப சொத்து ,   நீ அவரிடமிருந்து திருடிவிட்டதாக ஏதேதோ சொல்கிறாரே ...? "
" அதை பற்றியெல்லாம் பிறகு பேசலாம் .முதலில்  அண்ணனும் , தங்கையும் உள்ளே போங்க .அந்த உமாபதிக்கு உடல் பூராவும் கண் .இப்போது அவன் நம்மை பார்த்து விட்டனானால் மூவரையும் இதே இடத்திலேயே வெட்டி புதைத்து விடுவான் .உள்ளே வாங்க ...." எச்சரித்தபடி மனோகர் அந்த  குடிசைக்குள் நுழைந்தான் .

ஆட்சேபமாய் பார்த்த ஆருத்ராவிடம் தலையசைத்த சரவணன் " அவன் சொல்வது நிஜம்தான்மா .வா உள்ளே போய் எல்லா விபரமும் பேசலாம் " என அழைத்து போனான் .

18

" அந்த லிங்கத்தில்  ஆயிரம் நன்மைகள் இருக்கட்டும் சரவணன் .அதனை நாம் கவர்ன்மென்டிடம் ஒப்படைப்பதுதானே முறை ...? " ஆருத்ரவின் கேள்விக்கு சரவணன் ஒப்புதலாக தலையசைத்தான் .
" அதேதான்மா நானும் முதலில் நினைத்திருந்தேன்  . அந்த லிங்கத்தை பற்றி சில ஓலைச்சுவடிகளில் படித்து அறிந்து கொண்டு , அது இந்த சிதம்பரத்தில் உமாபதியிடம் இருக்கலாமென ஒரு அனுமானத்தில் தான் இங்கே வந்தேன் ."

" ஆனால் என்னிடம் இதையெல்லாம் ஒன்றும் சொல்லவில்லையே சரவணன் "

" எனது வேலையில் இது போல் எத்தனையோ அபூர்வ பொருட்களை பற்றிய தகவல்கள் இதுவரை எனக்கு கிடைத்திருக்கறது ருத்ரா .அவை பெரும்பாலும் என் கைகளுக்கு கிடைப்பதில்லை .அப்படி கிடைத்தாலும் அதை பற்றி சேகரித்த தகவல்களுக்கு பொருந்த்தாது ஈயென இளித்துக் கொண்டிருக்கும் . அதனால் இது போன்ற விசயங்களையெல்லாம் நான் உனக்கு என்றுமே சொன்னதில்லை .நான்   ஓலைச்சுவடியில் படித்த விசயங்களில் இம்மி பிசகாமல் பொருந்தி அப்படியே இருந்த்து இந்த சிவலிங்கம்தான் ...."

" உமாபதியிடம் அவனது பழமையான வீட்டை ஆராய வேண்டுமென்று கேட டுத்தான் உள்ளே வந்தேன் .அவனது வீடும் எனக்கு ஏமாற்றம் அளிக்கவில்லை .நிறைய பழந்தகவல்களை உள்ளே வைத்திருந்த்து

அந்த வீடு . அதிலிருந்து அந்த காலகட்டத்தில் வாழ்ந்த தமிழர்களின் வாழ்வு ,நாகரீகமென நிறைய விபரங்கள் தெரிய வந்த்து அவைகளை திரட்டி கவர்னமென்டுக்கு அனுப்பி விட்டேன் . "

"நான் சொன்னபிறகுதான் உமாபதிக்கே அவனது முன்னோர்களை பற்றிய நிறைய விபரங்கள் தெரியவந்த்து .ஆச்சரியமாக கேட்டுக் கொண்டான் .என் மீது நிறைய மரியாதை வைத்திருந்தான் . அவனிடமிருந்த சில பழைய ஓலைச்சுவடிகளை கூட எனக்கு கொடுத்தான் .அவற்றின் மூலம்  அந்த சிவலிங்கம் அவனிடம்தான் இருக்க வேண்டுமென உறுதி செய்துகொண்டு , மெல்ல அவனிடம் கேட்டான் ."

" அது போலொரு சிவலிங்கம் தன்னிடம் இருப்பதை ஒத்துக் கொண்டவனுக்கு அதன் மதிப்பு தெரியவில்லை .பரம்பரை சொத்தென குறிப்பிட்டு பாதுகாத்து வரும்படி அவனது அப்பா உறுதி வாங்கியிருப்பதாக சொன்னான் .அவன் அப்பாவிடம் ...அவர் அப்பா ....அவரிடம் அவர் அப்பா ....என இப்படி ஐந்து தலைமுறைகளுக்கும் மேலாக அந்த லிங்கம் அவர்கள் குடும்பத்தினரிடம் இருந்து வந்துருக்கிறது .முன்னோர்களின் விருப்பம் என்பதை தவிர அந்த லிங்கத்தை பாதுகாப்பதற்கான வேறு காரணங்கள் எதுவும் உமாபதியிடம் இல்லை "

" அவனது வீட்டு பூஜையறையில் இருந்த நடராசர் சிலைக்கு கீழிருந்த பீடத்தினுள் , ஒரு சிறிய  பட்டுத் துணியில் சுற்றி வைக்கப்பட்டிருந்த இந்த லிங்கத்தை அவன் சாதாரணமாக  திறந்து காட்டிய போது எனக்கு மெய் சிலிர்த்து போனது...." என சரவணன் காட்டிய லிங்கம் உண்மையிலேயே ஆருத்ராவின் உடல் சிலிர்க்க வைத்தது .

அரை அடி உயரத்தில் கரும் பச்சை நிறத்தில் மிகச் சாதாரணமாக இருந்த அது , தூசியடைந்து நெடுநாட்கள் விற்காமல் பொம்மை கடையில் ஓரத்தில் கிடக்கும் ஒரு மிக சாதாரண சிவன் பொம்மை போல் இருந்த்து .ஆட்காட்டி விரல் நுனியால் ஆருத்ரா அதனை லேசாக தொட சில மின்னல்கள் உடலில் ஊடுறுவியது போல் உணர்ந்தாள் .சட்டென விரலை எடுத்துக் கொண்டவள் பயபக்தியாய் அந்த லிங்கத்தை பார்த்தாள் .சரவணன் அதனை மீண்டும் துணி போர்த்து மூடினான் .அந்த மரப்பெட்டியினுள் பத்திரப் படுத்தினான் .

" இந்த லிங்கத்திறகு உயிர் இருக்கிறது சரவணா .இது சக்தி வாய்ந்த்து " விழி அகற்றி முணுமுணுத்தவளை வித்தியாசமாக பார்த்தான் சரவணன் .
" நானும் அதையேதான் சொல்கிறேன் ருத்ரா .நிறைய மூலிகைகளின் அபூர்வ கலவை இந்த லிங்கம் .இதனை முறையாக ஆராய்ந்தால்

எத்தனையோ மருந்துகளின் விபரம் நமக்கு தெரிய வரலாம் .அதனால் ...."

" அதனால் ..."

" நான் இதனை அமெரிக்க மெடிக்கல் கம்பெனி ஒன்றிற்கு தருவதாக பேசி வைத்திருக்கறேன் "

" இது தப்பில்லையா அண்ணா ...? நம் சொத்து இல்லை அண்ணா இது ...? "

" தப்புதான்மா .ஆனால் இதன் மதிப்பு தெரியாத ஒருவனின் வீட்டு பூஜையறைக்குள் தூசுக்குள் இது முடங்கி கிடப்பதற்கு நான் செய்வது நிச்சயம் பெரிய தவறில்லை "

" அப்படியே இது மருந்துகளின் கலவையாக இருந்தாலும் நீ இதனை நம் நாட்டு அரசாங்கத்திடம் தானே ஒப்படைத்திருக்க வேண்டும் .அந்நிய நாட்டுக்கு கொடுப்பது என்ன நியாயம் ...? "

" நம் நாட்டிலா ...நான் நம் கவர்ன்மென்டிடம் தான்மா வேலை பார்க்கிறேன் .நம் கவர்ன்மென்டை எனக்கு நன்றாக தெரியும் .இந்த லிங்கத்தை அவர்கள் ஆளாளுக்கு எடுத்து ...பார்த்து ...தேய்த்து ஆராய்ந்து ஆமாம் இது மருந்துதான் என முடிவு செய்துவிட்டு திரும்பி பார்க்கும் போது இந்த லிங்கம் சுரண்டி ...சுரண்டி கரைந்தே போயிருக்கும் .இப்படி இந்த அபூர்வ பொருள் இங்கிருந்து வீணாக போவதற்கு பதில் அமெரிக்கா போனால் ஓரே வருடத்தில் அவன் இதனை ஆராய்ந்து ஓராயிரம் மருந்துகள் தயாரிப்பான் "

" ஆனால் அதில் ஒன்று கூட நமக்கு கிடைக்காதண்ணா "

" ம் ....கிடைக்கும் .கொஞ்சம் தாமதாமாக .அதற்கென்ன செய்வது ...? இந்தியர்களின் தலையெழுத்து அது ."

" தலையெழுத்தா ....? இந்த லிங்கத்திற்கு எவ்வளவு விலை பேசியிருக்கிறீர்கள் சரவணா ....? "

" அது ....வந்து " தடுமாறினான் சரவணன் .

" கோடிக்கணக்கான பணம் புழங்கும் ப்ராஜெக்ட் ருத்ரா இது .எங்கள் இருவருக்குமே சில கோடிகள் பேசப்பட்டிருக்கின்றன " சொன்னபடி வந்தான் மனோகர் .அவன் கையில் உணவு பொட்டலங்கள் .

" நீங்கள் தான் சரவணின் மனதினை மாற்றினீர்களா ...? "

" மாறத் தயாராக இருந்தவனை மாற்ற நான் மெனக்கெட வேண்டியதிருக்கவில்லை ருத்ரா .உன் அண்ணனே லிங்கத்தை கவர்ன்மென்டிடம் ஒப்படைப்பதில் எந்த பிரயோஜனமும்

இல்லையென்றே நினைத்தபடி இருந்தான் .அப்போதுதான் நான் அவனுக்கு அறிமுகமானேன் .அந்த லிங்கத்தின் சிறப்புகள் பரம்பரை பரம்பரையாக எங்கள் குடும்பத்தற்கு தெரியும் .இது போல் ஒரு ஏற்பாட்டை உமாபதியிடம் என்னால் பேச முடியாது .லேசாக ஆரம்பித்தாலே என்னை வெட்டிக் கொன்று விடுவான் .அவனை பொறுத்த வரை இந்த சிவலிங்கத்தின் மதிப்பு மில்லியன் டாலராக இருந்தாலும் பரவாயில்லை .அது அவனது குடும்ப சொத்து .அது எப்போதும் போல் அவனது பூஜையறைக்குள் சுருண்டு கிடக்கவேண்டும் .அவ்வளவுதான் .இப்போது நீயே சொல் ...அப்படி இந்த அபூர்வ மூலிகைகளை யாருக்கும் பிரயோஜனமின்றி காலம் காலமாக ஒரு பெட்டிக்குள் முடங்கி கிடக்க விடலாமா ...? அது சில உயிர்களை காக்கட்டுமே ...அமெரிக்க உயிரென்றாலும் அவையும் மனித் உயிர்கள்தானே ...."

ஆருத்ரா தலையை பிடித்துக் கொண்டாள் ." என்ன சொல்ல ...? " முனங்கினாள் .

" குழம்பாதேடா ருத்ரா .உயிர்களை கொல்வதற்காக நான் இந்த வேலை செய்யவில்லை . உயிர்களை காப்பாற்றுவதற்காக இந்த திருட்டு வேலை செய்கிறேன் .இதில் பெரிய பாவமில்லை .புரிந்து கொள் " சரவணன் தங்கையை சமாதானப்படுத்தினான் .

" ஒன்று நன்றாக புரிகிறது சரவணா .உன்னை நன்றாக ப்ரெயின் வாஷ் செய்திருக்கிறார்கள் ...." ஆருத்ராவின் பார்வை மனோகரை அளந்த்து .
" ஐயோ ...என்னை சொல்லாதீர்கள் ருத்ரா .நானெல்லாம் ரொம்ப அப்பாவி .இல்லையென்றால் நானே உங்களை அந்த உமாபதியின் வீட்டிலேயே போய் இறக்கி விடுவேனா ...? "

" அதுதானே ...அதெப்படி செய்தீர்கள் ...? "

" தனக்கு இப்படி ஒரு தங்கை இருப்பதையே சரவணன் என்னிடம் சொன்னதில்லை ...."

உன்னைப் போல் பொறுக்கியிடமெல்லாம் எப்படி சொல்லுவான் ...? உள்ளுக்குள் நினைத்துக்கொண்டாள் ஆருத்ரா .

" சரவணன் லிங்கத்துடன் வந்த நாளிலிருந்து எங்களை இந்த சுற்று வட்டாரத்தை விட்டு வெளியேற முடியாமல் கடினமான காவல் போட்டு வைத்திருந்தான் உமாபதி . அதனால் எங்களால் அந்த அமெரிக்கர்களை சந்திக்க முடியவில்லை .இங்கே சுற்றுப்புறத்திலேயே ஒவ்வொரு ஊராக இடத்தை மாற்றி மாற்றி ஒளிந்து கொண்மிருந்தோம் .இடையிடையே உமாபதியையும் கண்காணித்தபடி இருந்தோம் . அப்போதுதான் ஒரு

முறை நீங்கள் அன்று பஸ் ஸ்டான்டில் உமாபதி அடரஸ் விசாரித்து கொண்டிருந்தீர்கள் . உமாபதியை சந்திக்க வரும் ஒவ்வொரு புது நபரின் விபரமும் எனக்கு தேவையாக இருந்த்து .அதனால்தான் அன்று உங்களுடன் பேச்சு கொடுத்தபடி விபரம் அறிய முயன்றேன் .முடியவில்லை .நீங்கள் கேட்டபடி உங்களை உமாபதி வீட்டில் விட்டு விட்டு உங்களை கண்காணிக்கவும் ஆட்களை ஏற்பாடு செய்தேன் "

" இங்கே சரவணனிடம் வந்து சொன்னதும் , அவன் போனிலிருந்த உங்கள் போட்டோவை காட்டி இவளா என கேட்டு , பதறினான் . என் தங்கையென்றான் .இப்போது உங்களை எப்படி மீட்பதென தெரியாமல் நாங்கள் விழித்தோம் .உமாபதியின் வீடு ஒரு கோட்டை போன்றது .அதற்குள் போனவர்கள் அவன் அனுமதியின்றி வெளியே வர முடியாது .சமீபத்தில் அவன் சரவணனை நம்பி , அவன் ஏமாற்றியதுமே உமாபதி மிக கொடூரமானவனாக மாறிவிட்டான் . பழி வாங்க துடிக்கும் வேங்கை போல் ஊருக்குள் சுற்றிக் கொண்டிருந்தான் .நாங்கள் அவனை தாண்டி ஊரை விட்டு வெளியேற முடியாமல் தவித்துக் கொண்டிருந்தோம் "

" இந்த நேரத்தில் தான் நீ அப்படியே அவன் கையில் லட்டு போல் போய் சிக்கிக் கொண்டாய் .எப்படி ...எதற்கு வந்தாய் ...? உமாபதி உன்னை எப்படி நடத்தினான் ...? எப்படி கல்யாணம் வரை வந்தாய் ...? " சரவணன் கேள்விகளை அடுக்கினான் .

" உன்னிடமிருந்து வெகு நாட்களாக தகவல் இல்லை அண்ணா .உன்னை தேடித்தான் வந்தேன் "

" நான்தான் என் போன் பழைய சிம்களையெல்லாம் தூக்கி எறிந்து விட்டேனே .விரைவில் உன்னை தொடர்பு கொள்கிறேனென உனக்கு மெசேஜ் அனுப்பி விட்டுத்தானேம்மா மறைந்திருந்தேன் "

" அந்த மெசேஜ்க்கு பிறகும் ஒரு மாதம் காத்திருந்து விட்டுதாண்ணா உன்னை தேடி வந்தேன் ...."

" நீயே வந்தாயா ...? உமாபதி உன்னை அழைக்கவில்லையா ...? "

" இல்லைண்ணா .நீ எப்போதோ உமாபதியின் மெயில் ஐடியை உன் டைரியில் எழுதி வைத்திருந்தாய் .அதை பார்த்து அவருக்கு மெயில் அனுப்பி நான் அண்ணனை பார்க்க வரட்டுமா ...எனக் கேட்டிருந்தேன் ..."

" என்னம்மா இப்படி முன் யோசனை இல்லாமல் நீயாகவே அவனிடம் மாட்டிக் கொண்மிருக்கிறாயே ...? "

" இல்லை அண்ணா .அவர் என்னை வரவேண்டாமென்றுதான் சொல்லியிருந்தார் .ஆனால் நான்தான் அந்த மெயிலை கவனிக்காமல்

கிளம்பி வந்துவிட்டேன் "

" என்ன ...வர வேண்டாமென்றானா ....? "

" ஆமாம் அண்ணா .நான்கு நாட்கள் வரை அவரிடமிருந்து எனக்கு பதில் வரவில்லை .நான் உன்னை பற்றிய பயத்துடன் கிளம்பி வந்துவிட்டேன் .ஆனால் நான் வந்த அன்று அவர் இங்கே வரவேண்டாமென்று மெயில் அனுப்பியருந்தார் .அதை பிறகுதான் பார்த்தேன் ."

" என்னால் இந்த உமாபதியை புரிந்து கொள்ளவே முடியவில்லை மனோகர் " சரவணன் கூற ..." என்னாலும் தான் " என மனதிற்குள் நினைத்துக் கொண்டாள் ஆருத்ரா .

" அது ஏதாவது சாதாரண விசயமாயிருக்கும் .பிறகு அவன் உங்களை போக சொல்லவில்லையா ...? " மனோகர் கேட்டான் .

" வீடு வரை வந்தவளை எப்படி விடுவான் மனோகர் .பிறகுதான் ருத்ராவை அடைத்து வைத்துவிட்டானே ...? நம்மால் கிட்டவே நெருங்க முடியவில்லையே ...? எத்தனை காவல் ருத்ராவிற்கு ....? "

சரவணன் பேசப் பேச உமாபதி தன்னை இவர்களுக்காக பத்திரப்படுத்தினானா ....? இவர்களிடமிருந்து பத்திரப்படுத்தினானா ...என்ற சந்தேகம் ஆருத்ராவிற்கு வந்த்து .

" ஒருநாள் இரவு வீட்டிற்குள் வந்தீர்களோ ...? " சிறு சந்தேகத்துடன. கேட்டாள் .

" ஆமாம்மா உன்னை அவன் வீட்டிற்குள் வைத்துவிட்டு என்னால் நிம்மதியாக இருக்க முடியுமா.? சில அடியாட்களுக்கு பணம் கொடுத்து உன்னை தூக்கி வர அனுப்பினேன் .அந்த நாய் குலைத்து , மிரட்டி விரட்டி விட்டது ...."

அடப்பாவி ...இதைத்தான் இந்திரா மேல் பழி போட்டு , கல்யாணத்தையே முடித்தானா ...? ஆனால் அது இந்திராவாக இருக்கலாமென லூசு மாதிரி நான்தானே சொன்னேன் ....ஆனாலும் ஒரு வார்த்தை சொன்னானா ...ஆமாம் ஆமாமென்று தலையாட்டி விட்டு , அதை வைத்தே கல்யாணத்தையும் சாதித்து கொண்டானே ....

"அங்கே உன்னை எப்படி நடத்தினான் ருத்ரா ...? எதுவும் தவறாக ...." தயங்கி வந்த்து சரவணனின் குரல் .

சரவணனின் வார்த்தை முடியும் முன்பே பதிலளித்தாள் ஆருத்ரா ." ஒரு மகாராணியாக ....அதை விட கூட ஒரு படி உயர்வாகத்தான் என்னை நடத்தினார் ...."

கனவுகள் வலம் வந்த அவள் குரலை ஊன்றி கவனித்தவன் " இந்த

தாலியை அவன் உனக்கு கட்டியதன் காரணம் , என்னை எப்படியாவது வெளியே வர வைக்க வேண்டுமென்றுதான் ருத்ரா ....உனக்கு புரிகிறதில்லையா ....?
விழியுயர்த்தி பார்த்த தங்கையிடம் " தன்னிடம் திருடிப் போனவனின் தங்கையை யாராவது திருமணம் முடிப்பானாம்மா ... நீயே சொல்லு ?" எனக் கேட்டான் .

" எனக்கே புரியாதவைகளுக்கு என்னிடமே விடை கேட்காதே அண்ணா ..." ஆருத்ரா அலுத்தாள் .

" வேண்டாம்மா .நீ புரியாத்தை யோசித்து மண்டை குழம்ப வேண்டாம் .நமக்கு நிறைய பணம் கிடைக்க போகிறது .அதை எடுத்துக் கொண்டு நாம் சிங்கப்பூர் போய் செட்டிலாகி விடலாம் "
சிறு பரிதவிப்போடு பார்த்தவளுக்கு அப்படித்தான் என தங்கைக்கு அண்ணனாக உறுதிகாட்டி நின்றான் சரவணன் .

## 19

" இந்த இடமும் அவனுக்கு தெரிந்து விட்டதென நினைக்கிறேன் . நாம் உடனே வேறு இடம் மாற்ற வேண்டும் சரவணா ..." அன்று இரவே வந்து நின்று சொன்னான் மனோகர் .

சரவணன் உடனடியாக கிளம்ப தயாராக , " எப்படி சொல்கிறீர்கள் ...? " ஆருத்ரா விபரம் கேட்டாள் .

" அந்த உமாபதியின் ஆட்கள் இருவரை இந்த தெருமுனையில் பார்த்தேன் .நிச்சயம் நம்மை தேடித்தான் அவர்கள் வந்திருக்கவேண்டும்.அவர்கள் பார்வையில் படும் முன்பே நாம் தப்பி விட வேண்டும் ...." பரபரத்தான் .

" ஒளிந்து கொள்ள நான் ஒரு இடம் சொல்லட்டுமா அண்ணா ...? "

" உனக்கென்னம்மா தெரியும் ...? "

" இந்த ஊரையும் , அதன் சுற்றுபுறங்களையும் நிறைய சுற்றியிருக்கிறேன் அண்ணா .ஓரளவு இடங்கள் தெரியும் எனக்கு ."
" என்னை விட தெரியுமா உங்களுக்கு ...? " மனோகர் எரிச்சலாக கேட்டான் .

" நான் சொல்கிறேன் .சரி வருமா என பாருங்கள் .பிச்சாவரம் காடுகள் ...அதன் இடையே இருக்கும் மணல் திட்டுக்கள் ...."
" அங்கேயெல்லாம் சரி வராதும்மா ..." சரவணனின் பேச்சை மனோகர் மறுத்தான் .

" இல்லை சரவணா ...உன் சிஸ்டர் சொல்வதும் சரிதான் .அந்தக் காடுகள் மர்ம்பிரதேசம் போல் , அதனுள் ஒளிந்து கொள்ள நிறைய இடங்கள் இருக்கும் .நாம் அங்கே ஒளிந்து கொண்டு , அங்கே அந்த அமெரிக்கர்களை வரவழைப்போம் . லிங்கத்தை கொடுத்து விட்டு பணத்தை வாங்கிக் கொள்ளலாம் ...."

இருள் சூழ்ந்து வந்து கொண்டிருந்த அந்த பின்னிரவில் அவர்கள் கிளம்பினார்கள் .மனோகர் ஏற்பாடு செய்திருந்த் தோணி ஒரு ஓரமாக மரங்களுக்கிடையே மறைவாக மிதந்து கொண்டிருந்த்து .அதனை செலுத்துபவன் அதனுள்ளேயே உட்கார்ந்திருந்தான் .

மூவரும் ஏறியதும் படகு நீர்வழியில் மிதந்து செல்ல துவங்கியது .அன்று பகலில் உமாபதியோடு போன பாதை .அவனது அருகாமை காரணமோ என்னவோ , பிருந்தாவனமென அன்று தோன்றியது ....இன்று குத்தும் கருவேலங்காட்டுக்குள் செல்லும் உணர்வினை கொடுத்தது ஆருத்ராவிற்கு .

சூழ்ந்து நின்ற மரங்கள் கரும்பிசாசுகளாக காட்சியளித்தன . அன்றைய பகல் போல் பறவைகளின் ஓசை இல்லாத்தால் , நீருக்குள் விழுந்து சப்தமிடும் துடுப்பின் ஒலி மட்டுமே கேட்க ஒருவித அமானுஷ்ய சூழ்நிலை அங்கு நிலவியது .

" இந்தப் பக்கம் எம்.ஜி.ஆர் திட்டு என்ற ஒன்று  உண்டே .அங்கே போகலாம் .அங்கு ஆள் நடமாட்டம் இருக்காது ..." ஆருத்ரா சொன்னாள் .

" போகவேண்டுமானால் எம்.ஜி.ஆர் திட்டுதான் வேணுமென்பதில்லை ருத்ரா .அது போல் நிறைய திட்டுக்கள் இருக்கின்றன .அது போல் ஒரு திட்டுக்குத்தான் போய் கொண்டிருக்கிறோம் ...." மனோகர் பதிலளித்தான் .

" ஏன்...அந்த திட்டிற்கே போகலாமே ...? "

" அது எதற்கு ...? அந்த திட்டுதான் உன் புருசன் வருவதற்கு வசதியாக இருக்குமா ருத்ரா ...? " மனோகரின் குரலில் விசம் வழிந்த்து .

" அ...அது ...இல்லை ..." ஆருத்ரா திணற ...

" என்ன மனோகர் இது ...ருத்ராவை ஏன் மிரட்டுகிறாய் ...? "

" உன் தங்கையை நான் நம்பவில்லை சரவணன் .அவள் அந்த உமாபதி பெயரை உச்சரிக்கும் போதே பிரேமை பொங்கி வழிகிறது .புருசனென்ற எண்ணம் அவளது ஒவ்வொரு அசைவிலும் தெரிகிறது ...."

" எதையாவது உளறாதே மனோகர் .ருத்ரா என் தங்கைதான் .நிச்சயம் அவனது மனைவி கிடையாது..."

" உன் முட்டாள் மூளை இப்படித்தான் நினைக்கும் .நான் அப்படி இல்லை .கொஞ்சம் அதிகம் யோசிப்பேன் ...." "

" யாரை முட்டாளென்கிறாய் ....? இந்த அண்ணனை பார்ப்பதற்காக அவனை விட்டு விட்டு ஓடி வந்திருக்கிறாள் என் தங்கை . அவளை தப்பாக பேசாதே ..."

" அங்கேதான் என் சந்தேகமும் ....அவ்வளவு எளிதாக அந்த உமாபதி வீட்டை விட்டு யாராலும் வெளியே வர முடியாது . இவள் வந்திருக்கிறாளென்றால் ....எனக்கு கொஞ்சம் உறுத்துகிறது ...."

" உங்களுக்கு உறுத்தினாலும் உண்மை அதுதான் மனோகர் .தாலி மட்டும் கட்டிவிட்டதால் உமாபதி என் புருசன் கிடையாது .அதனை அவனுக்கு உணர்த்தத்தான் நான் எவ்வளவோ கஷ்டப்பட்டு அங்கிருந்து ஓடிவந்தேன் ...."

" அப்படியா ...அன்று நீயும் , அவனும் இதே இடத்தில் படகில் ஒரு காதல் பயணம் போனீர்களே ...அதனை நான் பார்த்துக் கொண்டிருந்தேனே .அப்போது நீங்கள் இருவரும் போன வேகத்தை பார்த்தால் ...நீ சொல்வதை ஒரு சதவிகிதம் கூட நம்ப முடியாது ...."

" அன்று நீங்களும் இங்கேதான் இருந்தீர்களா ...? "

" என்னை பார்த்துதானே உன் புருசன் படகை அவ்வளவு விரைவாக சந்து , பொந்தென ஓட்டி மறைந்தான் .உன்னை என் கண்ணிலிருந்து மறைக்கிறானாம் ...." எகத்தாளமாக சொன்னான் .

" இல்லை .உங்களுக்காக அப்படி போகவில்லை .அவரது தொழில் பார்ட்னர் இந்திராவிற்காகத்தான் அப்படி போனார் "

" ஓ ...உன்னிடம் அப்படி சொல்லி வைத்தானா ...? "

" அதுதானே உண்மை..."

" இல்லை ருத்ரா . நீ அந்த உமாபதியை முழுவதுமாக நம்பாதே .அவன் காரியம் ஆகவேண்டுமானால் எதை வேண்டுமானாலும் , எப்படி வேண்டுமானாலும் திரித்து கூறுவான் ..."

" நம்பாமல்தானே அண்ணா நான் அவரை விட்டு வந்திருக்கிறேன் ..."

" இறங்குங்கள் ...இங்கேதான் ..." மனோகர் படகை நிறுத்தியிருந்த இடம் வேறு திட்டாக இருந்த்து . தங்கைக்கு கை கொடுத்து பத்திரமாக இறக்கி உள்ளே மனோகர் பின் நடந்தான் சரவணன் .

மூவருமாக உள்ளே ஒரு பாறையில் அமர்ந்தனர் .மனோகர் அந்த அமெரிக்கர்களுடன் போனில் பேசினான் .அந்த திட்டை பற்றி சொல்லி அங்கே வரச் சொன்னான் .மூவருமாக காத்திருந்தனர் .

அரை மணியில்  வந்து விட்டனர் அந்த வெளிநாட்டினர் .அவர்களுடன் பேசி பணத்தை இருவரது அக்கௌன்டுகளிலும் பிரித்து போடும் உத்தரவாத்த்தை வாங்கிய பின் ,

" அந்த லிங்கத்தை கொடு சரவணன் " மனோகர் சொல்ல , சரவணன் அந்த சிறிய மரப்பெட்டியை எடுத்து நீட்டினான் .

அதனை வாங்கி திறந்து பார்த்த ஒருவன் கத்தினான் .

" வேர் இஸ் இட் ...? இட்ஸ் எம்ப்டி பாக்ஸ் ஒன்லி ...."

சரவணன் பதறி  பெட்டியை வாங்கி பார்க்க , அது காலியாக இருந்த்து .
" பாஸ்டர்ட், என்னடா செய்தாய் ...எங்கே ஒளித்து வைத்திருக்கிறாய் ....? தனியாக நீ யாரிடமும் ரேட் பேசியிருக்கிறாயா ...? மனோகர் சரவணன் மேல் பாய்ந்தான் .

" மனோகர் நான் அப்படி பட்டவனில்லை .ருத்ராவிடம் காட்டிவிட்டு உள்ளே வைத்ததுதான் .அதன் பிறகு நான் அதை பார்க்க கூட இல்லை ...."

மனோகரின் கவனம் ஆருத்ரா மேல் மாறியது .

" அப்போது அது உன் சிஸ்டரிடம் தான் இருக்கிறது ...சரிதானே ருத்ரா ..."

" இல்லையில்லை அவளிடம் இருக்காது .நாம் அதனை எப்படியோ தவற விட்டு விட்டோமென்று நினைக்கிறேன். "

" பத்து கோடி மதிப்புள்ள பொருளை அவ்வளவு எளிதாக விடுவேனா சரவணா ...? "

" பத்து கோடியா ....? என்னிடம் ஆளுக்கு ஒரு கோடியென இரண்டு கோடிதானே சொன்னாய் ...? "

" அது உனது கணக்கு .இது என் தனிக்கணக்கு .நான் பேசியது பத்து கோடி .அதனை அவ்வளவு எளிதாக விடமாட்டேன் ...."

" பார்த்தாயா அண்ணா இந்த தேசத்துரோகியை நம்பி இவன் உயிரை காப்பாற்றும் மூலிகை அது ...இதுவென சொன்னதை நம்பி அந்த மாபெரும் சொத்தை திருடினாயே ...தப்பில்லையா ...? "
" தப்புத்தான்மா .நான் இந்த மனோகர் இப்படி ஒரு ஏமாற்றுக்காரனாக இருப்பானென நினைக்கவில்லை ...."

" அட..டே  என்ன சார் திடீர் ஞானோதயம் ...? சரி நீங்களும் , உங்கள் அருமை தங்கையும் போதி மரமில்லாமலேயே ஞானம் பெற்று விட்டீர்கள் .ஞானிகளுக்கு பணம் , பொருள் முக்கியமில்லை .அதனால் அந்த சிவலிங்கத்தை என்னிடம் கொடுத்து விட்டு நீங்கள் போகலாம்

.உங்கள் பங்கு ஒரு கோடியையும் நானே வாங்கிக் கொள்கிறேன்... "
" நீயே நிறுத்தி வைத்தாலும் இனி ஒரு நொடியும் நாங்கள் இங்கே இருக்க போவதில்லை மனோகர் .இன்னமும் பத்து கோடி கூட அதிகமாக கேட்டு வாங்கிக் கொள் ....ஆனால் லிங்கத்தை என்னிடம் கேட்காதே .ஏனென்றால் அது எங்களிடம் கிடையாது ."
" இதோ இவர்கள் அதற்காக மூன்று மாதங்களாக அமெரிக்காவிலிருந்து அவர்கள் வேலையை எல்லாம் விட்டு விட்டு இங்கே வந்து தங்கியிருக்கிறார்கள் .அத்தனை சுலபமாக விட்டு விட மாட்டார்கள் .அந்த சிவலிங்கத்தை கொடுங்கள் ..."

" அது என்னிடம் இல்லை மனோகர் நம்பு ..." என்ற சரவணனின் இறைஞ்சலான குரலை தாண்டி கணீரென ஒலித்தது ஆருத்ராவின் குரல் .

" கொடுக்க முடியாது ...." சரவணன் அதிர்ந்து தங்கையை திரும்பி பார்த்தான் .

" பார்த்தாயா சரவணா உன் தங்கையின் லட்சணத்தை .,ஏய் கொடுடி அதை ..." மனோகர் ஆருத்ராவை நெருங்கினான் .

" அது எங்கள் குடும்ப சொத்து .அதனை அவ்வளவு எளிதாக உன்னிடம் தூக்கி கொடுத்து விட மாட்டேன் மனோகர் ...." அதிகாரமாய் உயர்ந்து ஒலித்தது ஆருத்ராவின் குரல் .
" ருத்ரா வேண்டாம்மா . எதையாவது உளறாதே .அதனை கொடுத்து விட்டு வா .நாம் இங்கிருந்து போய்விடலாம் "

" நீ ஏன் சரவணா பயப்படுகிறாய் ...? அது என் புருசன் சொத்து. என் சொத்து .அதை காத்து ...மீட்டே ஆக வேண்டுமென்றுதான் என் கணவர் எனக்கு போட்டு வைத்திருந்த பாதுகாப்பு வளையத்தை தைரியமாக தாண்டி வந்தேன் .அதனை உன் கையில் கொடுப்பேனென கனவு கூட காணாதே ..." மனோகரிடம் உறுதியாக பேசியவள் ,அந்த அமெரிக்கர்களிடம் திரும்பினாள் .

" தேட் இஸ் அவர் பேமிலி பிராபர்ட்டி . தேட் இஸ் எ புரூப் பார் அவர் டிரடிஷன் அண்டு கல்ச்சர் . வி வில் நாட் கிவ் இட் அட் எனி சர்கம்ஸ்டென்ஸ் ஈவன் இப் யு கிவ் கிரோர்ஸ் ஆப் மனி. யு ஆல் ப்ளீஸ் லீவ் திஸ் ப்ளேஸ்" என்று கை கூப்பினாள் .

அவர்கள் செய்வதறியாது விழித்தபடி நிற்க , மனோகர் ஆருத்ராவை நெருங்கி அவள் தலையோடு சேர்த்து சப்பென அறைந்தான் .சரவணன் அலறி தங்கையை ஆதரவாக பிடித்தான் .

" என்னடி பிலிம் காட்டுற ...? அந்த லிங்கத்தை நீ அங்கே எங்கேயும்

விட்டு வரலை .இங்கே பெட்டிக்குள்ளும் இல்லை .அப்போது அது உன் உடலுக்குள்தான் எங்கேயோ இருக்கிறது . உன் உடம்பிலிருக்கிற துணி ஒவ்வொன்றாக அவுத்து பார்த்தால் தெரிந்து விடும் ...." மனோகர் கொடூர முகத்தோடு அவளை நெருங்க , சரவணன் தங்கையை அணைத்து இழுத்து காக்க முயன்றான் .

" வேண்டாம் மனோகர் .வராதே...எங்களை விட்டு விடு .நாங்கள் போய் விடுகறோம் ..." தங்கையை இழுத்தபடி பின்னால் நகர்ந்த சரவணனிடமிருந்த பயத்தின் நூலிழை கூட ஆருத்ராவிடம் இல்லை . என்னடா செய்து விடுவாய் ...? அலட்சியமாக மனோகரை பார்த்தபடி இருந்தாள் அவள் .அந்த பார்வையில் மேலும் கோபமுற்று , அவள் சேலையை தொடும் நோக்கில் மனோகர் கையை நீட்டிய போது ...
" நக நுனியை அவள் மேல் வைத்து பார் மனோகர் .பிறகு இருக்கிறது உனக்கு ...." அசரீரி போல் ஒலித்தது நிச்சயம் உமாபதியின் குரல்தான் . சரவணனும் , ஆருத்ராவும் ஆவலோடு திரும்பி பார்க்க , நிலவின் அரை குறை வெளிச்சத்தில் , போதாத டார்ச் வெளிச்சத்தில் தலையில் கட்டிய தலைப்பாகையோடு அங்கே நின்று கொண்டிருந்தவன் அந்த படகை ஓட்டி வந்தவன் .

## 20

சரவணன் அந்த நிழலுருவத்தை பார்த்து விழித்தபடி இருக்க " என் புருசன் அண்ணா ...." என அண்ணனுக்கு தகவல் தந்தாள் ஆருத்ரா . அதே நேரம் டார்ச்சின் வெளிச்சத்தில் வந்து நின்று தலைப்பாகையை சுழட்டியவன் உமாபதியேதான் .

அவனை பார்த்ததுமே மனோகரின் கை கால்களெல்லாம் தந்தியடிக்க ஆரம்பித்தது .அந்த அமெரிக்கர்கள் நடப்பது புரியாமல் மண்டையை பிய்த்துக் கொள்வது போல் நின்றிருக்க , நிதானமாக நடந்து வந்த உமாபதி மனோகரின் தோளில் கை போட்டு தன்னோடு சேர்த்துக் கொண்டு அவனை அந்த அமெரிக்கர்களருகே நடத்தி போனான்.ஆங்கிலத் தில் பேச தொடங்கினான் .

" ஹலோ பிரதர்ஸ் .இவன் ஒரு ப்ராடு .உங்களை போல்தான் நிறைய வெளிநாட்டினரிடம் , இது போல் சிவலிங்கம் , மூலிகை ...அது இதுவென கதை விட்டு கோடி கோடியாக பணத்தை பிடுங்கிக் கொண்டு விடுவான் .இவனையா நம்பி வந்தீர்கள் ...? " உமாபதியின் கை மனோகரின் கழுத்தை தன் தோளோடு சேர்த்து அழுத்தி நெரித்தபடி இருக்க , அவனது குற்றச்சாட்டுக்கு பதில் பேச முடியாமல் மனோகரின் விழி பிதுங்கி வாய் கோணியது .

" இல்லை நாங்கள் இவனை நம்பவில்லை .அதோ அவர்தான் அரசாங்க புதைபொருள் ஆராய்ச்சியாளர் .அந்த லிங்கத்தில் அவர் செய்த நிறைய மூலிகை ஆராய்ச்சிகளை பற்றி எங்களுக்கு சொன்னார் .அதனால்தான் ....நாங்கள் நம்பினோம் ."

" யார் ....?யாரை சொல்கிறீர்கள் ...? அவரையா ...?" நம்ப முடியாதவன் போல் அவர.களை பார்த்தான் .

" ஏன் ...?"

" அவர் என் மனைவியின் அண்ணன். கொஞ்சம் மனநலம் பாதிக்க பட்டவர் .இரண்டு வருடங்களாக பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தார. அங்கே இவரை குணப்படுத்தவே முடியாது என்று விட்டனர் .அதனால் நான் என் வீட்டிற்கு அழைத்து வந்து அங்கே அவரை அடைத்து வைத்திருந்தேன. கொஞ்ச நாட்களுக்கு முன்பு எப்படியோ தப்பி வந்துவிட்டார் .அந்த பைத்தியம் சொன்னதை நம்பியா இத்தனை கோடிகளில் பேரம் பேசினீர்கள் ...? "

அவர்கள் குழப்பத்தோடு சரவணன் பக்கம் பார்க்க , அங்கே ஆருத்ரா கணவனை முறைத்தபடி நின்றிருக்க , சரவணனோ ஆமாம் ...ஆமாம் நான் பைத்தியம் என எந்த கோர்ட்டில் வேண்டுமானாலும் அறிவிக்க தயாரென்று ரீதியில் நின்று கொண்டிருந்தான் .

" இல்லையே ...அப்படி எங்களுக்கு தோன்றவில்லையே ..." அந்த அமெரிக்கர்கள் மறுத்துக் கொண்டிருந்த போதே , இயந்திர படகு ஒன்றின் சத்தம் கேட்க அவர்கள் பரபரப்புற்றனர் .

" ம்ஹூம் பயப்படாதீர்கள் .உங்கள் சந்தேகங்களை இதோ இவர்களிடம் தெரிந்து கொள்ளுங்கள் ..." என உமாபதி கை நீட்டிய திசையில் போலீஸ் வந்து கொண்டிருந்தார்கள் .

" என் மனைவியையும் , அவளது மனநலம் குன்றிய அண்ணனையும் இந்த திட்டிற்கு கடத்தி வந்து வைத்துக்கொண்டு என்னிடம் பணம் கேட்டு தகராறு பண்ணினார்கள் சார் ...." இப்படி இன்ஸ்பெக்டரிடம் கொஞ்சமும் கூசாமல் புகார் கொடுத்தான் உமாபதி .
போலீஸ் மூவரையும் அடித்து இழுத்து போனார்கள் .

" என்னை மன்னித்து விடுங்கள் உமாபதி ..." கை பற்றிய சரவணனை முறைத்து உதறி விட்டு படகிற்கு நடந்தான் உமாபதி .
குற்றவுணர்வுடன் பின் தொடர்ந்தனர் அண்ணனும் , தங்கையும் .இருவரையும் படகில் ஏறுமாறு சைகை செய்தான் .முதலில் தடுமாறி ஏறிய சரவணனை பின்தொடராது , ஏக்கத்துடன் கணவன் முகம் பார்த்து நின்றிருந்தாள் ஆருத்ரா .

அவளை படகில் ஏற்றி விடுவதற்காக கை கொடுத்தவன் , அதற்கு மேலும் தாள முடியாமல் , அப்படியே அவளை இழுத்து இறுக்கி அணைத்துக் கொண்டான் .

" எந்த தைரியத்திலடி இப்படி வீட்டை விட்டு வந்தாய் ...? " தலைமுடியை பற்றி உலுக்கியபடி கேட்டான் .

" அ...அண்ணனுக்காக .அவரை இந்த சூழ்நிலையிலிருந்து விடுவிக்க ...எனக்கு வேறு வழி தெரியவில்லை ..."

" உனக்கு என்னை விட உன் திருட்டு  அண்ணன் முக்கியமாக போனானா ...ம் ...சொல்லு ...? ' தன் உலுக்கலை நிறுத்தவில்லை அவன் .

தலையிட நினைத்தும் , தலையிட முடியாமல் தவித்தபடி அவர்களை பார்த்திருந்தான் சரவணன் .

" உங்களுக்கு நான் முக்கியமென எனக்கு தெரியும் .அண்ணனை காப்பாற்ற நான் போனால் என்னை காக்க நீங்கள் வருவீர்களென எனக்கு தெரியும் .அதனால்தான் ...." என்றவளை குண்டு கட்டாக தூக்கி தோணியினுள் போட்டான் .

" நீ வீட்டுக்கு வாடி ...உன்னை ..." பற்களை கடித்தபடி படகை துடுப்பிட்டவனை  பயத்தோடு பார்த்தபடி  இருந்தனர் அண்ணனும் , தங்கையும் .

கரையை அடைந்தும் அவளை அலாக்காக படகிலிருந்து கைகளில் தூக்கி கொண்டவன் " உன் அண்ணனை சென்னைக்கு போய்விட சொல்லு .இன்னும் ஒரு நிமிடம் அவன் இங்கே இருந்தாலும் போலீசில் பிடித்து கொடுத்துவிடுவேன் ..." சொல்லிவிட்டு அவளை கைகளில் சுமந்தபடி காருக்கு நடந்தான் .

" ருத்ரா ...." தயங்கி நின்று குரல் கொடுத்த சரவணனிடம் ...

" அவள் ஆருத்ரா .என் மனைவி ..." என கர்ஜித்துவிட்டு நடந்தான் .

சரவணனை போகுமாறும் , பிறகு போனில் பேசுவதாகவும் சைகை செய்து அனுப்பிய பின்பு , சுகமாக ...வசதியாக கணவனின் தோள்களில் ஒடுங்கிக் கொண்டாள் ஆருத்ரா .

--------------------

வீட்டிற்குள் இருவரும் நுழையவுமே எங்கிருந்தோ ஓடி வந்து அவளருகே நின்று வாலாட்டியது மணி .ஆருத்ரா அதன் முகம் பற்றி வருடி , உமாபதி காதில் விழாமல் மெல்லிய குரலில் " நன்றிடா " என்றாள் . எரிச்சலுடன் அவர்களை பார்த்து விட்டு உள்ளே போனான்

உமாபதி .

' டேய் மணி அவர் ரொம்ப கோபமாக இருக்கிறார் .நான் இப்போது போய் அவரை சமாதானப்படுத்துகிறேன் .நாளை காலை உன்னிடம் வந்து பேசுகறேன் சரியா ...? " என்றாள் .

ஆமோதித்து தலையாட்டி அவள்  பாதம் நக்கி தன் பாசத்தை காட்டியது மணி .

" இதற்காகவும்தான் உமா ...நான் போனேன் .நம் குடும்ப சொத்தல்லவா ...? " தன் முன் அவள் நீட்டிய லிங்கத்தை பார்த்துவிட்டு அவளை கோபமாக பார்த்தான் உமாபதி .

" அதை கொண்டு போய் .எங்கேயாவது எறி .அப்படியே நீயும் என் முன்னால் நிற்காமல் போ ..." கத்திவிட்டு உள்ளே போனான் .
அவனது இந்த கோபமும் ,வசைபாடலும் ஆருத்ராவிற்கு மிக இதமாக இருந்த்து . அவள் மீதிருக்கும் காதலின் பிரதிபலிப்பல்லவா இது ...? புன்னகை பொங்கி வர  அந்த லிங்கத்தோடு பூஜையறையினுள் போனாள் . அங்கிருந்த பீடத்தில் அதை வைத்து , அதற்கு கற்பூர ஆரத்தி காட்டி வணங்கினாள் .பிறகு அதனை பழையபடி பட்டுத்துணியில் சுற்றி , அந்த பீடத்தின் அடியிலேயே பத்திரப்படுத்தினாள் .பிறகு கணவனை தேடி நடந்தாள் .
உமாபதி நிலாமுற்றத்தில் இருந்தான் .வெண்ணிலவு வஞ்சமின்றி தன் குளிர் கதிர்களை அந்த முற்றத்தின் மேல் பொழிந்து கொண்டிருந்த்து . ஆனால் அந்த குளிரால் உமாபதியை குளிர்விக்க முடியவில்லை .
அவன் அங்கே ஊஞ்சலில் உட்கார்ந்து வேகமாக ...மிக வேகமாக ஆடிக்கொண்டிருந்தான் .அவனது கால் உந்துதல் ஒவ்வொன்றும் அவனது கோபத்தை சொல்லிக்கொண்டிருக்க , அப்போது ஊஞ்சலாடும் சிவப்பு சூரியனை அவன் ஆருத்ராவிற்கு கன்ன்று நினைவுறுத்தினான் .
உமா என மெல்லியதாக அழைத்து பார்த்து அவன் செவியில் விழாது போக , ஆருத்ரா ஒரு முடிவெடுத்து ஊஞ்சலின் பாதையில் வந்து நின்றாள் .தொடர்ந்து குழந்தை போல் இரு கைகளையும் உயர்த்தினாள் ...என்னை  தூக்கிக் கொள்ளேன் ...என்பதான ஏக்க பார்வையுடன் .
அவளது இந்த செயலில் சிறிது நெகிழ்ந்த உமாபதி ,ஊஞ்சலின் வேகத்தை குறைக்காமலேயே வீசி வந்தபடி அப்படியே அவளை குனிந்து அள்ளி மடியிருத்திக் கொண்டான் .அழுத்தமாக அவன் கன்னத்தில் தன் இதழ்களை பதித்தாள் ஆருத்ரா .

" இனி ஒரு விநாடி கூட உங்களை விட்டு போகமாட்டேன் உமா ..." கண் கலங்க கூறியவளை இறுக அனைத்துக் கொண்டான் .

" இப்படி ஒரு ஆபத்து உனக்கு வரக்கூடுமென்றுதான் அத்தனை பாதுகாப்பு உனக்கு போட்டு வைத்திருந்தேன் .அத்தனையையும் தாண்டி ஏன்டி போனாய் ...? "

" முதல் காரணம் நம் குடும்ப சொத்துக்காக ..."

" அதைக் கொண்டு போய் உடைப்பில் போடு . அது போனால் போய் தொலைகிறது .எனக்கு நீ மட்டும் போதுமென்ற முடிவெடுத்த பின்புதானே நம் திருமண ஏற்பாடுகளையே செய்தேன் .அதைக் கூட உன் அண்ணனுக்கு தெரிந்தால் நிறுத்தி விடுவானோ எனப் பயந்து நகர்த்திற்கு ஒதுக்குபுறமான கோவிலில் வைத்து , மிக நம்பிக்கையானவர்களை மட்டும் அழைத்து ரகசியமாக நடத்தினேன் .ஆனால் நீயோ  அதை கைப்பற்ற என்னை விட்டு போனேன் என்கிறாயே ...."

" நம் பரம்பரை சொத்தை விட என்னை பெரியதாக நினைப்பது உங்கள் தீராக் காதலை காட்டுகிறது உமா .ஆனால் நானும் அதேபோல் அந்த லிங்கத்தை விட்டு விடுவது ....அதுவும் என் அண்ணனே அதை திருடிப் போயிருக்கும் போது விட்டு விடுவது , நம் காதலுக்கு நான் செய்யும் துரோகம் அல்லவா ...? அதனை நான் எப்படி செய்வேன் ...? "
" அப்படியே அறைஞ்சேன்னா பல்லெல்லாம் விழுந்திடும் .காலையில் போகும் போதே எனக்கு ஏதோ வித்தியாசமாக பட்டது .அதனால்தான் மணியிடம் உன்னை நன்றாக கவனித்து கொள்ளும்படி சொல்லிவிட்டு போனேன் .வந்து பார்த்தால் வாசலில் நின்றபடி தெருவை பார்த்துக்கொண்டு நிற்கிறான் மணி .உன்னை வீட்டினுள் காணவில்லை .சித்திக்கும் , வாட்ச்மேனுக்கும் நீ வீட்டில் இல்லாத விசயமே தெரியவில்லை .எனக்கு எப்படி இருந்திருக்கும் அப்போது ....? அவர்களை விடு ...மணியிடமிருந்து எப்படி தப்பி போனாய் ...? "
" உண்மையை மணியிடம் சொன்னேன் . அவன் புரிந்து கொண்டு என்னை வெளியே விட்டு விட்டான் ."

" என்ன கண்றாவி உண்மையை சொன்னாய் ...? "

" கண்றாவி இல்லை .அழகான உண்மை .நான் உங்களை காதலிக்கும் உண்மை .காலம் பூராவும் உங்களுடன் சேர்ந்து வாழ விரும்பும் உண்மை .அதை அப்படியே மணியிடம் சொன்னேன் . ஐந்தறிவு ஜீவன்தானே அதற்கு என்ன தெரியும் என்ற தயக்கத்துடன் தான் சொன்னேன் .ஆனால் ஆற்றிவு ஜீவன்களை விட அறிவானதாக அது இருந்த்து .நான் உமாவை ரொம்பவும் காதலிக்கிறேன் மணி .அவருடனேயே வாழ விரும்புகிறேன் .எங்கள் காதல் இறுதி வரை வளர்ந்து வர வேண்டுமானால் எங்களுக்கிடையே இருக்கும் சில தடைகளை நான்

நீக்க வேண்டும் .அதற்கு நான் வெளியே போகவேண்டும் .இந்த ஒரு முறை மட்டும் என்னை வெளியே போக அனுமதி .நான் பத்திரமாக திரும்பி வருவேன ....என்று உண்மை சொல்லி மணியிடம் அனுமதி வாங்கினேன் "

" ஏன்டி உனக்கு என் மேல் காதல் வந்தால் என்னிடம் செல்லமாட்டாயா ...? நாயிடம்தான் சொல்வாயா ...? "

" உங்களிடம் சொல்லவேண்டுமா ...நீங்கள்தான் என்னை நன்றாக புரிந்து வைத்திருந்தீர்களே ...." சிணுங்கினாள் .

அவள் காதலை சொன்ன விதமும் , இந்த சிணுங்கலும் உமாபதியின் கோபத்தை பெருமளவு குறைத்திருக்க , " போதும் ....மற்றெதெல்லாம் நாளை பேசலாம் ...." என்றபடி அவள் கழுத்தில் முகம் புதைத்தான் .
" எனக்கு ஒரே ஒரு சந்தேகம் .என் பெயர் ...அது எப்படி உங்களுக்கு தெரியும் ...? என் பெயரின் முதலெழுத்து அநாவசிய சேர்ப்பு என்ற எண்ணத்தில் நான் எப்போதுமே என் பெயரை ருத்ரா என்றுதான் சொல்வது வழக்கம் .ஆனால் உங்களை முதலில் பார்க்கும் போதே ஆருத்ரா என அழைத்தீர்கள. ....? அது எப்படி ...? "

" உன் மெயில் ஐடி என்ன ஆரா ...? "

" ஓ ...வித்தியாசமாக இருக்கட்டுமென அதை ஆருத்ரா என்றுதான் வைத்திருப்பேன் ...."
" சரவணன் ஒருநாள் உனக்கு மெயில் அனுப்புவதை தற்செயலாக கவனித்தேன் . உன் பெயர் ...எங்கள. ஊர் சிவனின் தரிசன பெயர் .உடனடியாக என் மனதில் ஒட்டிக்கொண்டது .சரவணனிடம் விசாரித்த போது தங்கையென்றான் .அப்போதிருந்தே அந்த பெயர் என்னை மிகவும் டிஸ்டர்ப் செய்து கொண்டே இருந்த்து .பிறகு சரவணன் லிங்கத்தை திருடிக்கொண்டு ஓடி விட்டான் .கொஞ்ச நாட்கள் கழித்து உன்னிடமிருந்து மெயில் .உன் அண்ணனை பார்க்க வரட்டுமா ...எனக் கேட்டு ....இந்த நேரத்தில் நீ வந்தால் சரவணனின் மேலுள்ள வெறுப்பு உன் மேல் பாய்ந்து விடுமோ என்ற பதட்டம் ஒரு புறம் , உன் அண்ணனை வைத்து அந்த மனோகர் உன்னையும் ஏமாற்றி தன் பக்கம் இழுத்துக் கொள்வானோ என்ற கவலை மறுபுறம் .உன்னை வரவழைக்கவா ...வேண்டாமா ....என இரு மனமாக தள்ளாடினேன் . கடைசியில் வேண்டாமென முடிவெடுத்து உனக்கு மெயில் அனுப்பிய நான்கு மணி நேரத்தில் நீ வீட்டிற்குள் வந்து நிற்கிறாய் ."
" இதையெல்லாம் முதலிலேயே என்னிடம் சொல்லியிருக்கலாமே ...." கொஞ்சல் சிணுங்கலாய் வந்த்து ஆருத்ராவின் பேச்சு .

" உன் அண்ணன் என் குடும்ப சொத்தை தூக்கி போய்விட்டான் என்று , உன்னிடமே சொல்ல சொல்கிறாயா ...? நம்புவாயா என்ன ...?அப்படி நான் சொன்னபிறகு கூட நீ நம்பவில்லையே ஆரா ...என் அன்பை , காதலை எப்படி உனக்கு உணர்த்துவது எனத் தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தேன் நான் ..." படபடத்த கணவனின் நெஞ்சை தடவி ஆசுவாசப்படுத்தினாள் ஆருத்ரா .

" முதலில் நம்பவில்லை .பிறகு நேற்று இங்கே ...." ஆருத்ராவின் பேச்சு பாதியில் நிற்க , குனிந்து சிவந்திருந்த அவள் முகத்தை பார்த்தவன், சுவாரஸ்யம் கூட " உம் ...சொல்லுடா ...." என அவளை உந்தினான் . அவன் மார்புக்குள் முகத்தை அழுத்தி புதைத்து கொண்டவள் " நேற்று இதே போல் இங்கே ஊஞ்சலாடிய போது ...என்னை தூக்கிக் கொண்டீர்களே ...அணைத்து முத்தமிட்டீர்களே ...அப்போது ...அந்த நேரத்தில் இனி இதெல்லாம் இல்லாமல் என்னால் வாழவே முடியாது என்பது எனக்கு மிக நன்றாக புரிந்துவிட்டது .உங்கள் மீதான என் காதலும் தெள்ளென தெரிந்து விட்டது .ஆனால் ஒரு திருட்டு அண்ணனின் தங்கையாக உங்கள் வீட்டில் இருக்க நான் விரும்பவில்லை. அதனால்தான் இன்று காலை வீட்டை விட்டு கிளம்பி போனேன் ."

" பைத்தியம் , அதற்கு இத்தனை ரிஸ்க் எடுக்க வேண்டுமா ...? நம் திருமண இரவன்று உன் அண்ணன் இருக்கிறானென தகவல் வந்தும் உனை கூட மறந்து ஓடினேனே ...ஏன் தெரியுமா ...? அந்த சிவலிங்கத்தை நீ வைத்துக்கொள் . என் ஆருத்ராவை என்னிடம் கொடுத்து விடு .இனி எங்கள் வாழ்வில் தலையிடாதே ... என உன் அண்னிடம் கேட்டுக் கொள்ளத்தான் போனேன் ."

ஆருத்ரா இப்போது மிக உருகினாள் . உமாபதியின் கழுத்தை கட்டிக் கொண்டவள் அவனது இதழ்களில் முத்தமிட்டு தனை முழுவதுமாக அவனுக்கு ஒப்பு கொடுத்தாள் .அந்த நிலாமுற்றம் நிலாக்கதிரோடு இவர்கள் காதலும் சேர்ந்து நிறைந்து குளிர துவங்கியது .

----------------

அந்த வருடம் ஆருத்ரா தரிசனத்தின் போது உமாபதி தனது குடும்ப சொத்தான மரகதலிங்கத்தை, தன் மனைவி ஆருத்ராவின் பெயரால் அந்த சிதம்பர நடராசர் சன்னதிக்கு உரியதென அறிவித்து அளித்துவிட்டான் .

அந்த லிங்கத்தை அபிசேகம் செய்த பாலை ஒரு மண்டலம் தொடர்ந்து அருந்துபவர்களுக்கு , கான்சர் , எய்ட்ஸ் போன்ற மிகப் பெரிய வியாதிகளெல்லாம் அந்த சிதம்பர நடராசரின் கருணையால் தீர்வதாக

அனைவரும் பேசிக் கொண்டனர் .

இந்த விசயம் தமிழ்நாட்டில் பரவி ...இந்தியா முழுவதும் பரவி ...பிறகு வெளிநாடுகளுக்கும் பரவி ...அமெரிக்காவில் இருந்தெல்லாம் நிறைய நோயாளிகள் சிதம்பரம் வந்து ஒரு மண்டலம் தங்கியிருந்து அந்த அபிசேக பாலை வாங்கி அருந்தி தங்கள் நோய் தீர்ந்து போனார்கள் .

- நிறைவு -